*Issued—4-2-1958*

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

1403

# OFFICIAL REPORT

## WEDNESDAY, 17TH JULY 1957

## VOLUME III—No. 9

*CONTENTS*


| | | PAGES. |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. .. | 599–608, 680–684 |
| II | Point of order *re* statement of the Hon. Leader of the House *re per capita* income in the State .. .. .. .. .. | 609 |
| III | Announcement by the Hon. Speaker *re* election of three members to the Senate of the Annamalai University .. .. | 609–610 |
| IV | Adjournment Motion *re* eviction of tenants and destruction of crops by the authorities in the Neyveli Project area .. | 610–611 |
| V | Voting on Demands for Grants for the year 1957–58—*cont.*— | |
| | (1) Demand XV—Education—*cont.* .. .. .. .. | 611–647, 647–652 |
| | (2) Demand XVI—Medical .. .. .. .. .. .. | 652–678 |
| | (3) Demand XVII—Public Health .. .. .. .. .. | 652–678 |
| | (4) Demand XXXVII—Capital Outlay on Public Health .. | 652–678 |
| VI | Motion for the suspension of rule 154 (3) of the Assembly Rules. | 647 |
| VII | Papers laid on the Table of the House .. .. .. .. | 679 |



*Legislature Department (Assembly)*
*Madras*



V211,31 N57
N57.3.9;1
64783

V211, 31 N57
N57.3.9;1

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, 17th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

64783

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Hotel name-boards*

* 123 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of persons arrested and prosecuted in connexion with the movements for erasing the word "Brahman" from the name-boards of hotels and restaurants, districtwise; and

(b) the number convicted?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) the following is the number of persons arrested and prosecuted in connexion with the present campaign of the Dravida Kazhagam, districtwise:—

| | | | |
|---|---|---|---|
| (i) Tiruchirappalli district | .. | 1 | |
| (ii) Madras City | .. | 290 | up to 14th July 1957. |
| (iii) Rest of the districts | .. | Nil. | |

(b) The Government have no information whether the person arrested in the Tiruchirappalli district was convicted or not. In Madras City, 289 persons have been convicted up to 14th July 1957.

**SRI K. SATTANATHA KARAYALAR:** மதராஸ் வீதியில் இந்த இயக்கம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறதா?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** நடந்து கொண்டுதான் இருக்கிறது.

SRI K. VINAYAKAM: May I know, Sir, whether these Dravida Kazhagam volunteers have ever succeeded in erasing the word 'Brahman' from the name-boards of hotels apart from the name-board of Murali Cafe, where they have not succeeded?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, it was reported with reference to some of the hotels that the word was erased. I do not have any up-to-date information.

SRI S. B. ADITYAN: ஒரு வருஷத்திற்கு இந்தப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தப்போவதாக இயக்கத்தின் தலைவர் பெரியார் அறிவித்திருக்கிறார். இரண்டு வருஷங்களானாலும் இணங்கப் போவது இல்லையென்று ஓட்டல்காரர்கள் அறிவித்திருக்கின்றனர். இந்த நிலையிலே ஓட்டல்காரர்களையும் இயக்கத்தின் தலைவரையும் அழைத்துப் பேசி சமரசம் காண அரசாங்கம் முற்படுமா?

[17th July 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இயக்கத்தை தொடர்ந்து நடத்துவதைப் பற்றியோ, இயக்கத்திற்கு இணங்குவதைப் பற்றியோ சர்க்கார் அவ்வளவு விசேஷமாகத் கருதவில்லை. ஆகையால் இரு சாராரையும் அழைத்துப்பேச அவசியம் இல்லை.

SRI A. A. RASHEED : Sir, may I know out of those convicted, how many were jailed and how many were fined?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not have that information now. Those who were only fined, when they did not pay the fine, were made to go to jail.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, are the Government aware that the bus stop near ' Murali Cafe ' has been shifted to a far-off place with the result that passengers are put to great inconvenience? Will the Government consider the desirability of shifting the bus stop back to its original place?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This question may be put to my Hon. colleague, the Minister in charge of Trasport.

SRI P. S. CHINNADURAI : பிராமணர்கள் என்ற பெயரை அழிக்கும் இயக்கத்தில் கலந்துகொண்டு தண்டனைப்படுகின்றவர்களை அரசியல் கைதிகளாக நடத்தப்படுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கின்றதா? இல்லையென்றால் இனிமேல் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : யார் யார் அரசியல் கைதிகள் என்று நிர்ணயிப்பதற்கு விதிகள் இருக்கின்றன. அதன்படி அவரவர்கள் வகுக்கப்படுவார்கள்.

SRI K. VINAYAKAM : Sir, in this matter, what is the policy of this Government? Do the Government insist upon having the name ' Brahman ' attached to the name-boards or, as ours is a secular State, do they not insist upon caste names not being inscribed on the name-boards?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of Government insisting upon any name being put on the name-boards of the hotels. Then, Sir, ' Brahmin ' is not a religious name. The removal of caste is one thing and functioning as a secular State is quite a different thing.

SRI M. JAGANNATHAN : Sir, in view of the fact that quite a lot of ill-feeling and agitation have come up amongst the members of the public against the use of communal words on the name-boards of hotels, will the Government consider the desirability of withholding the issue of licences to such of those hotels as are using communal names in their name-boards?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government do not yet consider the desirability to take any such action.



17th July 1957]

*Buildings at Padmanabhapuram*

*124 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Madras Government have handed over the Palace and the other connected buildings at Padmanabhapuram in Kanyakumari district to the Kerala Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government have agreed that the management and control of the Padmanabhapuram Palace and Museum, Kanyakumari district, together with the staff attached to them, may be retained by the Kerala Government subject to the conditions that the cost of maintenance of the Palace and Museum is shared equally between the two Governments and that no article therein is removed without the prior approval of the Government of Madras.

SRI T. T. DANIEL : Sir, in view of the fact that this palace is an ancient palace and it contains relics about ancient rulers of the Chera, Chola and Pandya Kingdoms, is it not advisable that this Government make a recommendation to the Central Government to bring this palace under the management of the Archælogical Department?

THE HON. SRI C. SUBRAMANIAM : I will consider the suggestion, but we ourselves may maintain it as a historic relic and, if things would improve by handing it over to the Government of India, certainly we will consider the suggestion.

MR. SPEAKER : Sri T. S. Ramaswamy Pillai will put his question.

SRI T. T. DANIEL : On a point of order, Sir.

MR. SPEAKER : I have called Sri T. S. Ramaswamy Pillai to put his question.

SRI T. T. DANIEL : I rise on a point of order, Sir. The Member who has put the main question should be given the first chance to ask his supplementary question. To use a parliamentary phrase, his question is his hare, and he must be allowed to hunt it out. Afterwards other members may be allowed to ask their supplementary questions. I believe that this is the procedure that is being followed in the House of Commons, the Mother of Parliaments.

MR. SPEAKER : The hon. Member had taken the first chance in putting the supplementary question. In this case, there is no hard and fast rule. It is open to the Speaker to decide whom he should call and when and how many times.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, may I know the reasons which prompted this Government to hand over this Padmanabhapuram Palace to the Kerala Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : Historical reasons.

[17th July 1957

SRI K. VINAYAKAM : If the motives in handing over the palace to the Kerala Government are historical, and if the Government are convinced that they should have the complete management of the palace, how do the Government reconcile the idea of sharing the cost of management and other expenses?

THE HON. SRI C. SUBRAMANIAM : Hon. Members are aware that Padmanabhapuram was the capital of the ancient Travancore State, and the Padmanabhapuram Palace has historical association with the dynasty of the Travancore Princes. So it was represented that they will have greater interest in maintaining it properly. We did not want to give up our right to the palace. That is why it still belongs to us. But the management is with the Travancore Government. In view of the fact that they also have associations with that palace, they wanted to have a share in the management. The expenses also are shared now.

SRI T. T. DANIEL : Sir, may I know whether the Government will consider the desirability of appointing an officer also from the Madras Government to share the management?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think that is necessary. Whoever be the officer there, he is considered to be an officer of the Government of Madras.

9-10 a.m. SRI K. VINAYAKAM : Sir, stretching the point still further and applying the same principles, does not the Government think that Tirupati is historically connected with the Tamil culture? Will they claim that also and have some kind of sharing in the management, even at the expense half the costs incurred?

MR. SPEAKER : I think the hon. Member may put a separate question.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know whether the Government are aware that historically this Padmanabhapuram Palace is more connected with the Kanyakumari district rather than Kerala?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is what I said when I said 'ancient Travancore State'. But the point for consideration is how and what arrangement should be made that this palace might be maintained properly without any deterioration. We came to the conclusion after consultation with the Kerala Government and the Rajpramukh that it would be in the best interests of the palace and the various relics there to have the management as we have decided now.

SRI A. A. RASHEED : Sir, is there any other palace maintained by the other State in our State?

THE HON. SRI C. SUBRAMANIAM : Unfortunately, we do not have palaces here.



17th July 1957]

*District Board Hospital at Tiruchendur*

*125 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have sanctioned the proposal to take over the District Board Hospital at Tiruchendur; and

(*b*) if so, when it is likely to be taken over?

**THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.**

**(*b*) Does not arise.**

**SRI M. S. SELVARAJAN :** அகில இந்தியாவிலிருந்தும் யாத்ரீகர்கள் தெய்வ வழிபாட்டிற்காக வரும் முக்கியமான இடங்களில் திருச்செந்தூரும் ஒன்றாக இருப்பதால், அங்குள்ள அந்த ஆஸ்பத்திரியை இந்த வருஷத்திலேயே எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சென்ற வருஷம் ஒன்பது ஆஸ்பத்திரிகள் "ப்ரொவின்ஷியலைஸ்" செய்யப்பட்டன. இந்த வருஷம் இன்னும் ஐந்து ஆஸ்பத்திரிகள் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படும். அவைகளுள் திருச்செந்தூர் ஆஸ்பத்திரி இல்லை. திட்ட காலத்திற்குள் இன்னும் இருக்கும் 15 ஆஸ்பத்திரிகளும் எடுத்துக்கொள்ளப்படும் ; திருச்செந்தூரும் அவைகளுள் இருக்கும்.

**SRI M. S. SELVARAJAN :** இவ்வருஷம் எடுத்துக்கொள்ளவிருக்கும் ஆஸ்பத்திரிகளுள் திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து ஒன்றுகூட இல்லை என்ற காரணத்தினாலாவது, இந்த ஆஸ்பத்திரியை இந்த வருஷம் உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

MR. SPEAKER : அதுதான் இல்லை என்று கனம் மந்திரி அவர்கள் சொல்லிவிட்டார்களே.

THE HON. SRI M. A. MANICKAVELU : திருநெல்வேலி ஜில்லாவில் ஏற்கெனவே ஒன்று எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது கோயில்பட்டியில் உள்ள ஆஸ்பத்திரி. இந்த வருஷம் எந்த ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொள்வது என்பது ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னதையும் அனுசரித்து என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யலாம் என்று நினைக்கிறேன்.

SRI T. S. AUTHIMOOLAM : தாலூகாக்களிலுள்ள ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளும் விஷயத்தில் என்ன என்ன விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் அறியலாமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: ஹெட்குவார்டர்ஸில் இருக்கும் ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் விதி. ஆகவே ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளை முதலில் எடுத்துக்கொள்கிறோம்.

**SRI A. R. SUBBIAH MUDALIAR :** தாலூகா ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் அடிப்படையான விதியா ? அல்லது ஜனத்தொகை அடிப்படையிலும் ஆஸ்பத்திரிகள் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படுகின்றனவா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தாலூகா ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் விதி.

SRI S. NAGARAJA MONIGAR : சர்க்கார் இம்மாதிரியாக ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொள்ளும்போது, பிற்போக்கான இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கும், மிகவும் அவசியமாக எடுத்துக்கொள்ளப்படவேண்டிய ஆஸ்பத்திரிகளுக்கும் முதலிடம் (ப்ரையாரிடி) கொடுக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: எந்த ஆஸ்பத்திரிகளை அவசியம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது, கனம் அங்கத்தினர்கள் சில ஆஸ்பத்திரிகளை அவசியம் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கிளர்ச்சி செய்வது—இவைகள் எல்லாம் கருத்தில் எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

SRI N. R. THIAGARAJAN: மதுரை ஜில்லாவில் நிலக்கோட்டை தாலூகாவிலுள்ள ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரியை சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சென்ற ஒன்பது ஆண்டுகளாக சர்க்காருக்கு விண்ணப்பங்கள் எழுதி வந்திருக்கிறோம். இந்த ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் ஆஸ்பத்திரிகள் பட்டியலிலாவது அது சேர்க்கப் பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அந்த ஆஸ்பத்திரி இந்த ஆண்டு கட்டாயம் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படும்.

*By-products from lignite in Neyveli*

* 126 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisamy): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the industries that could be started with the by-products available from lignite in Neyveli; and

(*b*) the steps taken to start them?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) It is possible to establish a number of industries based on the by-products available in the mining and processing of lignite, such as synthetic petrol, char dust, tar, phenol, cement, plastics, porcelain and sanitary-ware, electrical insulators, etc.

(*b*) Steps can be taken to set up these industries only after conducting pilot plant trials to find out the most efficient and economic processes with reference to the climatic and other conditions obtaining at Neyveli in briquetting and carbonising lignite.

SRI K. SATTANATHA KARAYALAR: Sir, as it is, is there any planned programme to utilize these by-products?

THE HON. SRI R. VENKATARAMAN: One company has been granted licence by the Government of India for setting up High Tension Insulatory factory and that will utilize the clay.

SRI A. A. RASHEED: Cannot we have coal tar dyestuffs from lignite?

THE HON. SRI R. VENKATARAMAN: All by-products arising out of tar can be manufactured there.

SRI K. ANBAZHAGAN: நெய்வேலியில் வெட்டியெடுக்கப்படும் பழுப்பு நிலக்கரியிலிருந்து உப பொருள்கள் தயாரிப்பதற்கான ஏற்பாடுகளையும் நிர்வாகத்தையும் நமது மாநில சர்க்காரே நடத்துவதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா, அல்லது அந்த வேலைகள் தனிப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப் படுமா, அல்லது மத்திய சர்க்காரால் நிர்வகிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: 'ஸப்ஸிடியரி இன்டஸ்ட்ரீஸ்-ஐப் பொருத்த அளவில் தனிப்பட்டவர்களுக்கு அந்தத் தொழில்கள் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது தான் சர்க்காரின் கொள்கை.



*Coastal cargo service between Calcutta and Bombay via Madras*

* 127 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisamy): Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to introduce the Coastal Cargo Service between Calcutta and Bombay via Madras touching all the intermediate ports on the East and West Coasts?

1403

MR. SPEAKER: இந்தக் கேள்விக்கும் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

THE HON. SRI R. VENKATARAMAN: There is no such proposal under the consideration of the State Government.

*Amendments to the City Municipal Act,* 1919

* 128 *Q.*—SRI S. PAKKIRISAMY PILLAI: Will the Hon. the Minister for Local Administration be pleased to state with reference to the answer given to Question No. 2025 on 9th August 1955 whether the amendments proposed by the Madras Corporation to the Madras City Municipal Act, 1919, have since been taken up for consideration and if so, when the amending Bill will be introduced in the Legislature?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Yes, Sir, The amending Bill will be introduced as soon as the amendments to the Madras City Municipal Act are finalised by the Government.

SRI S. PAKKIRISAMY PILLAI: திருத்தங்கள் பற்றிய யோசனைகள் கார்ப்பொரேஷனிலிருந்து 1955-ம் வருஷத்தில் அரசாங்கத்திற்கு அனுப்பப் பட்டன. இப்போது இரண்டு வருஷங்கள் ஆகியிருக்கின்றன. அந்த யோசனைகளைப் பரிசீலனை செய்வதில் என் இவ்வளவு காலதாமதம் ஏற் படுகிறது ? காலதாமதத்திற்கு தகுந்த காரணங்களை கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: பஞ்சாயத்து போர்டு, ஜில்லா போர்டு முதலிய ஸ்தாபனங்களின் விஷயங்களைப் பற்றி ஆலோசித்த பிறகு கடைசியில் கார்ப்பொரேஷன் சம்பந்தப்பட்ட விஷயங்களை ஆலோசிப் பதாக இருந்த காரணத்தாலும் இப்போதுதான் உபகமிட்டி நியமிக்கப் பட்டிருக்கிறது என்ற காரணத்தாலும் காலதாமதம் ஏற்பட்டது.

SRI M. JAGANNATHAN: May I know, Sir, the probable date by which the amending Bill would be finalised by the Government?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: As soon as the Committee completes its work.

SRI K. VINAYAKAM: Sir, are Government aware of the fact that this kind of request from the Corporation Council came even before the elections to the Corporation Council last time and then the answer given by the Minister in charge of the portfolio was 'let the elections be over; afterwards the amendments could be brought'. Does the Government realise the immediate necessity that the Act should be amended as early as possible, at least before the ensuing elections to the Corporation Council?

[17th July 1957

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The Government have realised the necessity and that is why they are trying to do that.

SRI K. ANBAZHAGAN : இந்தக் கார்ப்பொரேஷன் நிர்வாகத்தில் ஊழல்கள் அதிகமாக இருக்கின்றன என்றும், பொதுமக்களுக்குக் குறைகள் மிகுதியாக இருக்கின்றன என்றும் புகார்கள் அதிகமாக இருப்பதால், அந்தக் குறைகளையும் ஊழல்களையும் நிவர்த்திப்பதற்கான வழிவகைகள் பற்றி ஆலோசிக்கப்படுமா ?

THE HON. SRIMATHAI LOURDHAMMAL SIMON : குறைகள் இருந்தால் அவைகளை நிவர்த்திப்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

SRI K. VINAYAKAM : May I know the nature of the amendments which the Corporation has requested from the Government?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : They have asked for some 150 amendments. It will be difficult to read them out now.

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

SRI V. K. KOTHANDARAMAN : கார்ப்பொரேஷன் பல யோசனைகள் கொடுத்திருக்கின்றன. அதிக லாபம் சம்பாதிக்கும் பெரிய தொழிற் சாலைகளுக்கு கார்ப்பொரேஷன் ஒரு குறிப்பிட்ட தொகையைத்தான் தொழில் வரியாகவோ மற்றவரிகளாகவோ விதிக்கவேண்டும் என்ற விதியை மாற்றி, கார்ப்பொரேஷன் தன் இஷ்டம்போல் வேண்டிய வரியை விதிப்பதற்கு அரசாங்கம் அனுமதிக்குமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அது பற்றியும் ஆலோசிக்கப்படும் என்று நான் தெளிவாகச் சொல்லுகிறேன்.

### *Import of rice*

* 129 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the quantity of rice imported into this State from the adjoining States during the years 1954, 1955, 1956 : and

(*b*) the steps taken to make this State self-sufficient?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A statement [*] is placed on the table of the House.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : In paragraph 5, page 3 of the statement, it is stated that the Collectors have been empowered to take steps to sell in auction, the right to cultivate arable lands, etc. I want to know whether the ryots who cultivate the lands have got any occupancy right? If not, if the Collectors bring it in auction every year, will ryots have any incentive for intensive cultivation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice.

* Printed as Appendix I on pages 680–683 *infra*.



17th July 1957]

SRI P. G. MANICKAM : உணவு உற்பத்தியை பெருக்கும் திட்டத்தின் கீழ் கோவை ஜில்லாவிலே அநேக விவசாய நிலங்கள் உழுது பயிரிடப் பட்டன. அந்தத் திட்டம் இப்பொழுது கைவிடப்பட்டதனால், அநேக விவசாயிகள் அந்த நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இன்னும் அநேகர் வெளியேற்றப்படப்போவதாகத் தெரியவருகிறது. இதில் 100-க்கு 75 பேர்கள் ஹரிஜனங்கள். ஆகையினால் விவசாய நிலங்களை அவைகளை பயிரிட்ட விவசாயிகளுக்கே பட்டா செய்துகொடுக்க கவர்மெண்டார் முன் வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் இது பற்றிய விவரங்களை எனக்கு அளித்தால், அவைகளைப் பரிசீலனை செய்து என்ன செய்யக்கூடும் என்பதை யோசிக்கலாம்.

### *Minister's tour*

* 130 *Q.*—SRI M. JAGANNATHAN (on behalf of Sri M. Jangal Reddiyar) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of days toured by each Minister on State business from November 1956 to 1st week of March 1957 and the Travelling Allowances drawn by each Minister; and

(*b*) the public functions attended by the Ministers during February 1957?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) A statement [*] is placed on the table of the House.

(*b*) Except for the Minister for Revenue who participated in the District Cattle Show at Vellore on 10th February 1957 no other Ministers attended to any public official function.

### *Creches*

* 131 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any grants are given to the Corporation of Madras in respect of creches constituted in the City; and

(*b*) whether there any proposal to constitute creches in district centres?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The Government have no such proposal.

SRI K. VINAYAKAM : How do the creches work in the City of Madras?

THE HON. SRI M. A. MANICKAVELU : They work as creches normally work. (Laughter.)

SRI K. VINAYAKAM : That is not the type of answer which I expected. Are the Government convinced about the desirability of establishing more such creches which have proved to be a success beyond reasonable doubt in the City of Madras?

* Printed as Appendix II on page 684 *infra*.

THE HON. SRI M. A. MANICKAVELU : I think very useful work is being done in the City, and in the mufassal, private agencies and local bodies are starting these creches. The Government give some subsidy to the local bodies and in this case, a grant of Rs. 10,000 has been given.

SRI V. K. KOTHANDARAMAN : சென்னை கார்பரேஷனுக்கு கொடுக்கப்பட்டதுபோல் இது போன்று கிராண்டுகள் மற்ற நகரசபைகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லையென்று சொன்னால், எல்லா நகரசபைகளுக்கும் கொடுக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : நகரசபை இதை ஆரம்பித்து செய்வதற்கு முன்வந்தால்தான், கிராண்டு கொடுக்கப்படுமே தவிர, அவர்கள் சும்மா உட்கார்ந்திருந்தால் அரசாங்கமே கொடுக்க வழியில்லை.

SRI K. VINAYAKAM : Are the Government aware that the creche established in Ashok Vihar is one of the model ones in the entire Far East, which has even been praised by no less a person than the Prime Minister of India?

THE HON. SRI M. A. MANICKAVELU : I thought from the previous question of the hon. Member, he was not satisfied with the working of the creches. From what he says now, he seems very much satisfied.

*Labour Courts*

* 132 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to constitute additional Labour Courts and if so, when and where?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. The matter is under consideration.

SRI S. PAKKIRISAMI PILLAI : லேபர் கோர்ட்டுகள் எந்தெந்த இடத்திலே அமைப்பதாக உத்தேசம் இருக்கிறது? இப்பொழுது இருக்கும் படியான லேபர் கோர்ட்டுகளுக்கு சிறிய சிறிய தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் குறைகளை அனுப்பாத ஒரு நிலைமையிலே லேபர் டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையா?

THE HON. SRI R. VENKATARAMAN : முதல் கேள்விக்கு பதில், இப்பொழுது கோயம்புத்தூரிலும், சென்னையிலும் ஒரு லேபர் கோர்ட்டு இருக்கிறது. மூன்றாவதாக மதுரையிலே ஒரு லேபர் கோர்ட்டு அமைப்பதாக உத்தேசம். இரண்டாவது கேள்விக்கு, லேபர் மான்ய விவாதத்தின் போது கனம் அங்கத்தினர் அவர்கள் இதுபற்றி கடுமையாக கண்டிப்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

SRI P. S. CHINNADURAI : லேபர் கோர்ட்டுகளுக்கு நீதிபதிகளை நியமிக்கும்பொழுது சோஷலிஸ்டு கண்ணோட்டம் உள்ளவர்களையும், சோஷலிஸ்டு தத்துவத்தில் நம்பிக்கை உள்ளவர்களையும் நியமிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : "இண்டஸ்டிரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட்" பிரகாரம் இந்த கோர்ட்டுகளுக்கு நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. நீதிபதிகளை உயர்நீதி மன்றம் சிபார்சு செய்கிறது.

MR. SPEAKER : Questions are over.



[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—POINT OF ORDER *RE* STATEMENT OF THE HON. LEADER OF THE HOUSE *RE PER CAPITA* INCOME IN THE STATE.

*SRI K. ANBAZHAGAN : On a point of order, Sir. தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் சில நாட்களுக்கு முன்னால் கனம் நிதி அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் ஒரு குறிப்பு தெரிவித்தார். அந்தக் குறிப்பு உண்மை அல்ல என்று காணப்படுகிறது. அதுபற்றிய விளக்கம் நான் ஒழுங்கின்மீது கேட்டறிய விரும்புகிறேன்.

சென்னை மாகாணத்தினுடைய சராசரி வருஷ வருமானம் (*per capita* income) கேரள சர்க்காரின் சராசரி வருஷ வருமானத்தைவிட குறைவு என்றும், நம்முடைய ராஜ்ய மக்களுக்கு இன்றைக்கு கிடைக்கும் சராசரி வருஷத்திய வருமானம் (*per capita* income) ரூ. 257 என்றும், கேரள ராஜ்யத்தில் (*per eapita* income) ரூ. 311 என்றும் கனம் நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவு திட்ட விவாதத்திற்குப் பதில் அளிக்கும் பொழுது தெரிவித்தார்கள் இந்த மன்றத்திலே. ஆனால் கேரள நாட்டு மக்களுடைய சராசரி வருமானம் (*per capita* income) ரூ. 219 தான் என்றும், அவர்களுடைய மொத்த வருஷ வருமானம் (National Income) ரூ. 319 கோடி என்றும் புள்ளி விவரங்கள் அந்த அரசாங்கத்தினுடைய **Statistic Department** அல்லது புள்ளி விவரக் குறிப்பு இலாகாவினாலே தரப்படுகிறது என்பதை நான் தெரிவித்து, இதுபற்றி உண்மை என்ன, அவர்கள் தெரிவித்ததுதான் உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : If the Hon. the Finance Minister wants to say anything, he may do so.

THE HON. SRI C. SUBRAMANIAM : It is not a point of order. He may raise the issue when the Appropriation Bill is discussed and certainly I will give an answer.

MR. SPEAKER : The hon. Member does not expect the Minister to give an answer on a point of order, I suppose.

THE HON. SRI C. SUBRAMANIAM : I can answer it, but . . .

MR. SPEAKER : I will not allow it. We shall take this up during the discussion on the Appropriation Bill.

## III.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* ELECTION OF THREE MEMBERS TO THE SENATE OF THE ANNAMALAI UNIVERSITY.

MR. SPEAKER : I have to announce to the House that the Vice-Chancellor of the Annamalai University has requested me to arrange for the election of three Members to the Senate of the Annamalai University by the Members of the Madras Legislative Assembly from among themselves.

Under section 15 clause III, sub-section (3) of the Annamalai University Act, 1928, the election is to be held according to the principle of proportional representation by means of the single transferable vote.

[Mr. Speaker] [17th July 1957

In accordance with the regulations framed by me for the holding of such elections, I fix 11 a.m. on Saturday, the 20th July 1957, as the time within which nomination papers of candidates for election should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 2-30 p.m. on Saturday, the 20th July 1957. I also fix 2 p.m. on Tuesday, the 23rd July 1957, as the last hour and date for the withdrawal of candidature. If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely, three, a poll will be taken in the Lounge Room between 11 a.m. and 1 p.m. on Wednesday, the 24th July 1957. The Lounge Room is next to Speaker's Room.

## IV.—ADJOURNMENT MOTION *RE* EVICTION OF TENANTS AND DESTRUCTION OF CROPS BY THE AUTHORITES IN THE NEIVELI PROJECT AREA.

MR. SPEAKER : The hon. Member, Sri M. Selvaraj, has given notice of a motion to adjourn the business of the House to discuss a definite matter of urgent public importance, viz.—

"the serious situation and panic created among the ryots of Elavarasampatta and Velliamkuppam villages in the Neiveli Project area by the high-handed action of the Government in evicting ryots without previous notice and destruction of standing crops."

It is alleged that the incident took place two days ago. Before I give my ruling, I would like the hon. Member to explain his case in as short a speech as possible.

SRI M. SELVARAJ : தலைவர் அவர்களே, நெய்வேலி பிராந்தியத்தில் இருக்கும் வேலுடையான்பட்டு, வெள்ளையன்குப்பம் என்ற கிராமங்களில் மகசூல் இருக்கும்பொழுது ஒருவிதமான முன் எச்சரிக்கையும் இல்லாமல் அந்த இடத்திலுள்ள அதிகாரிகள் டி.—7 கருவி கொண்டு அழித்து பக்கத்தில் மண்ணைப் போட்டு, வெள்ளையன்குப்பம் கிராமம் பக்கத்தில் உள்ள பாதையிலும் அதன் பக்கத்திலுள்ள ஓடையிலும் மண்ணை போட்டிருப்பதால், அந்த ஓடையில் மழை பெய்தால் தண்ணீர் வராத நிலையில் இருக்கிறது. அங்குள்ள மக்கள் அந்த அதிகாரிகளிடத்தில் இதைப்பற்றி தங்களுடைய குறைகளை சொன்ன நேரத்தில் அவர்கள் இதற்கு செவி சாய்க்காமல் இருக்கிறார்கள். இதனால் அங்குள்ள மக்கள் கொந்தளிப்பான நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். மேலும் இதனால் அங்கு இரண்டு மூன்று நாட்களாக ஏகப்பட்ட ரகளை இருந்து வருகிறது. ஆகையால் இதைப்பற்றி தகுந்தபடி இந்த சபையில் விவாதிக்காவிட்டால் அங்கு அமைதிக்கு குந்தகம் ஏற்படும் என்று தெரிகிறது. ஆதலால் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை சபை ஏற்றுக்கொண்டு இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**MR. SPEAKER : Has the Hon. Minister for Revenue anything to say on this ? I think it relates to the Revenue portfolio.**



17th July 1957]

THE HON. SRI M. A. MANICKAVELU : சபாநாயகர் அவர்களே, இந்த மாதிரியுள்ள சம்பவம் நிர்வாகத்துறையில் சாதாரணமாக நடக்கக்கூடிய சம்பவமாகும். மேலும் இதற்கு வேண்டிய நிபந்தனைகள் ஒன்றும் இதில் அடங்கியிருப்பதாக தெரியவில்லை. இதைப்பற்றி ஏதாவது சொல்லவேண்டுமானால் **Appropriation Bill** வரும்போது சொல்லலாம். ஆகையால் இதை விவாதத்திற்கு எடுக்கவேண்டிய அவசியமில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

MR. SPEAKER : I am satisfied that the matter which has now been raised by the hon. Member is a matter within the ordinary day-to-day administration of Government for, the acquisition of villages wholesale for the Neiveli Project has been pending for over a long time. No case for an adjournment motion has been made out and I rule the motion out of order.

## V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58—*cont.*

### (1) DEMAND XV—EDUCATION—*cont.*

MR. SPEAKER : We shall now proceed with the discussion on the Education Demand
கனம் மந்திரி அவர்களுக்கு எவ்வளவு நேரம் பதில்சொல்வதற்கு வேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : 20 நிமிஷம் இருந்தால் போதும்.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, 9-33 a.m.
இந்த கல்வி மான்ய கோரிக்கையின்மீது வந்திருக்கும் வெட்டுப்பிரேரணையை ஆதரித்துக்கொண்டு சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். இந்த கல்வி விஷயம் கடல் போன்ற ஒரு பெரிய விஷயம். பெரிய அறிவாளிகள் மணிக்கணக்காக, நாள் கணக்காக பேசி முடிவு காண வேண்டிய ஒரு விஷயத்தை, ஒரு சில நிமிஷங்களில் இதுகுறித்து விவரமாக பேசுவது என்பது சற்று சிரமமான காரியம்தான். இருந்தபோதிலும் நமது நாட்டிலுள்ள கல்வி விஷயத்தில் நாம் அனுஷ்டிக்க வேண்டிய கொள்கைகளைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். நாம் சோஷியலிஸ சமுதாயத்தை அமைப்பது என்று தீர்மானித்திருக்கிறோம். நம்முடைய வாழ்வு காலத்திலேயே அதை ஏற்படுத்தி தீருவது என்றும் வைராக்கியம் கொண்டிருக்கிறோம். அந்த நிலைமையில் சோஷியலிஸ சமுதாயத்தில் வாழ்வதற்கு தகுதி வாய்ந்த பிரஜைகளை வளர்ப்பதற்கு இப்போதுள்ள கல்வி முறை ஏற்றதா என்பதை நாம் கவனிக்கவேண்டும். கல்விக்காக நாம் அதிகமாக செலவு செய்கிறோம். இப்போது 11 கோடி ரூபாய், நம் ராஜ்ய வருமானத்தின் ஐந்தில் ஒரு பங்கு செலவு நாம் கல்விக்காக செலவு செய்கிறோம் என்று நாம் பெருமைப்பட்டுக்கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பணம் செலவழிக்கின்றோமே தவிர நம்முடைய லட்சியத்திற்கேற்ப நம்முடைய ராஜ்யத்தில் கல்வி முறை உபயோகிக்கப்பட்டு வருகிறதா அல்லது நாம் வெறுக்கக்கூடிய ஒரு முதலாளித்துவ சமுதாய அமைப்பை ஏற்படுத்துவதற்குள்ள கல்வி முறைதான் மாணவ மாணவியர்களுக்கு உபயோகப்படுத்தபட்டு வருகிறதா என்பதைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியது அவசியமாகும். இன்று கல்வி சீர்திருத்தத்திற்காக பல கமிட்டிகள் நியமிக்கப்படுகிறது. இப்படி நியமிக்கப்படுகிற கமிட்டிகள் எல்லாம் அனேகமாக முதலாளித்துவ சமுதாய அமைப்பு தத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்களை கொண்டதாகவே இருக்கின்றன என்று நாம் சொன்னால் அதில் தவறு இல்லை என்று நான் நினைக்கிறேன். இவ்விதமாக பழைய போக்கிலே சிந்தித்து ஆலோசனை சொல்லிக்கொண்டிருக்கின்ற இத்தகைய கமிட்டிகளை அறவே விட்டுதள்ளவேண்டும் என்பது

[Sri P. S. Chinnadurai] [17th July 1957

தான் என்னுடைய கோரிக்கையாகும். இன்று இருக்கக்கூடிய கல்வி முறை வெறும் குமஸ்தாக்களை தயாரிப்பதற்காகவும், தனக்கென்று வாழும் நோக்கத்தை, எண்ணத்தை தயாரிப்பதற்காகவும் இருக்கின்ற முறைதான் என்பது எனது கருத்தாகும். ஆகவே அதற்கு பதிலாக நாட்டுக்கு பயன்படக் கூடிய முறையில், நாம் வாழ்வதற்கு மாத்திரமல்ல, நம்முடைய சமுதாயம் வாழவேண்டும் என்கிற உணர்ச்சியை, கடமை உணர்ச்சியை ஏற்படுத்துவதற்கும், அதற்கேற்ப திறமையான மாணவ மாணவியர்களை உண்டாக்குவதற்கும் உதவியாய் இருக்கக்கூடிய கல்வி முறையை நாம் ஏற்படுத்தவேண்டும். ஆகவே இப்போதிருக்கின்ற கல்வி முறையை மாற்றி சோஷியலிஸ சமுதாய அமைப்பை ஏற்படுத்துவதற்கான அடிப்படை தத்துவத்தைக்கொண்டு அதற்கேற்ற முறையில் கல்வி முறையை மாற்றி அமைக்கவேண்டுமென்றும் அதற்காக இந்த அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என்பதுதான் எனது வேண்டுகோளாகும். அந்த முறையில் சிந்திக்க வேண்டுமானால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுத்துகொள்வதற்கு இந்த அரசாங்கம் முன் வரவேண்டும். அவ்விதம் வேண்டிய முயற்சிகள் இதுவரை எடுத்துக்கொள்ளாதது வருந்தத்தக்க விஷயமாகும், என்று சொல்லுவேன். இந்த கல்வித் துறையைப் பற்றி கூறுகின்ற அதே நேரத்தில், கல்வியின் தரத்தை அடிப்படையாக மாற்றியாகவேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில், இந்த கல்வியை போதிக்கின்றவர்கள் முக்கியமானவர்கள் என்பதை நாம் கவனிக்கவேண்டும். சோஷியலிஸ கல்வி வேண்டும் என்று சொல்லும்போது, சோஷியலிஸ சமுதாயத்திற்கு தகுந்த பிரஜைகளை தயாரிக்கவேண்டும் என்று சொல்லும்போது, இதை போதிக்கின்றவர்கள் சோஷியலிஸ நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கவேண்டும். ஆரம்ப கல்வி போதிக்கின்றவர்கள் முதல் சர்வகலாசாலை கல்வி போதிக்கின்றவர்கள்வரையிலும் சோஷியலிஸ கண்ணேட்டம் உள்ள பயிற்சி பெற்றவர்களாக இருக்கவேண்டும். தாங்கள் சோஷியலிஸ தத்துவத்தில் நம்பிக்கைகொண்டிருந்தால்தான் தங்களுக்கு மட்டுமின்றி மற்றவர்களையும் தயாராக்குவதற்கு இயலும். நான் அடிக்கடி சோஷியலிஸம் என்ற வார்த்தையை குறிப்பிடும்பொழுது அமைச்சர்களும் காங்கிரஸ் அங்கத்தினர்களும் சோஷியலிஸத்தை தாங்கிப் பிடிப்பதற்கு ஒரு ஆள்தானு உண்டு என்று சந்தேகப்படலாம். அவ்விதமொன்றுமில்லை. சோஷியலிஸத்தை கொண்டு வரவேண்டுமென்று மற்ற அங்கத்தினர்கள் எவ்விதம் நினைக்கின்றனரோ, அதைப்போலவே நானும் நினைக்கின்றேனே தவிர வேறு ஒன்றுமில்லை. அதை நான் இவ்வளவு எடுத்துச் சொல்வதற்குக் காரணம் சோஷியலிஸ முறை ஒவ்வொரு செயலிலும் கொண்டுவரவேண்டும் என்று குறிப்பிடுகிறேன். தனி மனிதன் வாழ்க்கையை மாத்திரம் முக்கியமாக கருதாமல் சமுதாயத்தின் வாழ்க்கையை முக்கியமாக கருதி அதற்காக பாடுபடுகிற பிரஜைகளை தயாரிக்கக் கூடிய சோஷியலிஸ சமுதாய அடிப்படையிலுள்ள கல்வி அவசியம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் நான் அடிக்கடி அந்த வார்த்தையை உச்சரிப்பதற்கு காரணம் என்பதை சொல்லிக் கொள்கிறேன். சோஷியலிஸ கல்வி முறையை போதிக்க வேண்டும் என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் அவர்களுடைய வாழ்க்கை வசதிகளையும் நாம் அதிகமாக செய்து கொடுக்கவேண்டும். அதற்கு நம் சமுதாயம், நமது சமுதாயத்தின் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய அரசாங்கமும் தயங்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களின் வாழ்க்கை வசதிகளை கவனிக்கப்படாவிட்டால் அவர்கள் திறமையாக வேலை செய்யமுடியாது. ஆகவே அவர்களுக்குரிய சௌகரியங்களை செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டில் ஐம்பது லட்சம் ரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது முக்கியமான அம்சம் தான். அதை நாங்கள் வரவேற்கிறோம். இன்னும் தொழில் கல்விக்காக அதிகமாக ஒதுக்கப்பட்வேண்டும் என்று சொன்னால்கூட அதில் தவறில்லை என்றுதான் நான் சொல்லுவேன்.

**Mr. SPEAKER:** The hon. Member should try and finish as early as possible. There are a number of other speakers who wish to have an opportunity to speak.



17th July 1957]

**Sri P. S. CHINNADURAI:** தொழில் கல்வி விஷயத்திலே, கலாசாலைகளில் மாத்திரமின்றி உயர்நிலை பள்ளிகளிலும்கூட, தொழில் கல்வியைப் புகுத்துவதற்கு தொழிலை அடிப்படையாகக் கொண்டு பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு அவர்கள் அக்கல்வியைப் பெற வழிவகை செய்யப்பட வேண்டும். அதற்குப் போதிய கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரியவில்லை, இந்த வருட மான்யக் கோரிக்கையிலும் அதற்குரிய ஆலோசனை காணப்படவில்லை, என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆரம்பக் கல்வியைப் பொறுத்தளவிலே 1960-க்குள்ளாக வயது வந்த எல்லா மாணவ மாணவிகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி கொடுக்க வேண்டும் என்று நமது அரசியல் சட்டத்தில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற வரம்பானது இதுவரையில் அடையவில்லை. அடையும் ஒரு நம்பிக்கையும் இல்லை என்றுதான் அமைச்சர் அவர்களின் பேச்சில் இருந்து காண முடிகிறது. சுமார் முப்பது லட்சம் மாணவ மாணவிகள், வயது வந்த மாணவ மாணவிகள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்ல வசதி இல்லாமல் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்காக வருத்தமும் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கு என்ன செலவாகும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குரிய முடிவைச் சொல்ல வில்லை. அதிலிருக்கிற கஷ்டத்தைக் குறிப்பிட்டு அதன் பேரில் அனுதாபத்தை காட்டியிருக்கிறார்களே தவிர அதற்கு ஒரு முடிவைச் சொல்ல வில்லை என்று மிகவும் வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். இதற்கு ஏதாவது ஒரு நல்ல வழிவகை காண்பது அரசாங்கத்தின் கடமை அல்லவா? சுமார் முப்பது லட்சம் பேர்கள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாமல் இருக்கிறார்கள் என்றால், செல்ல முடியாமல் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் எல்லாம் கிராமப் புறங்களிலிருந்து வரவேண்டிய பிள்ளைகளாகத்தான் இருப்பார்கள். கிராமப் புறங்களிலிருந்து வருகின்ற பிள்ளைகள் கவனிக்கப்படாமல் ஒதுக்கித் தள்ளப்படுகிறார்கள். கிராமவாசிகள் கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள் இன்றைய சமுதாய அமைப்பிலே; அதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது. முப்பது லட்சம் பிள்ளைகள் என்று உத்தேசமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதற்கு கூடுதலாக இருந்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வாறு ஒரு பெரும் பகுதி, கிராமப் புறங்களில் வாழ்கிற பிரஜைகளின் குழந்தைகள், அவர்களுக்குப் படிப்பதற்கு வசதி செய்யப்படாமல் இருக்கிற நிலையில் நல்லதொரு ஜனநாயக சம்பிரதாயத்தையும் நம் நாட்டில் உண்டாக்குவதற்கு எப்படி நாம் பெரும்பாலான மக்களை தயார் படுத்த முடியும்? அதற்கு ஏதாவது வழி இந்த அரசாங்கம் செய்ய வேண்டாமா? அதற்கு இவ்வளவு தொகை வேண்டுமென்று கேட்டால் யார்தான் அதற்கு எதிராக நிற்பார்கள். 1960-க்குள் அதை செய்து முடிக்க வேண்டும். ஆனால் கோஷ் அவர்கள் 64-வது ஆண்டிற்குள்ளாகவாவது செய்து முடிக்க வேண்டும். இதைச் செய்யாத வரையில் நாம் நம்முடைய ராஜ்யத்திலே ராஜ்யத்தை இரண்டு பகுதியாகப் பிரித்து நகரத்தில் வாழ்கிறவர்களுக்கு ஒரு மாதிரியாகவும் கிராமங்களில் வாழ்கிறவர்களுக்கு இன்னொரு மாதிரியாகவும் நடத்த விரும்புகிறோம். நம்மை அறியாமலே அது நேர்ந்து விடுகிறது. இதைத் தவிர்க்க வேண்டுவது இந்த அரசாங்கத்தின் கடமையாகும் என்று மீண்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் பல பேர்கள் பேச இருப்பதால் நான் எனது பேச்சைத் தொடராமல் நிறுத்திக் கொள்கிறேன்.

**Mr. SPEAKER:** இன்றைய தினம் இந்த மான்யத்தின் பேரில் எதிர்க்கட்சித் தலைவர்கள் இருவரும், ஸ்ரீ வி. கே. ராமஸ்வாமி முதலியார் அவர்களும் ஸ்ரீ அண்ணாத்துரை அவர்களும் பேச விரும்பி இருப்பதால் அவர்கள் இருவருக்கும் 15 நிமிஷ நேரம் கொடுக்க வேண்டுமென்பது எனது தீர்மானம். ஆகவே மற்ற எல்லோரும் ஏழு நிமிஷத்திற்குமேல் பேசாமல் இருந்தால் நன்றாக இருக்கும்.

*** Sri R. KRISHNASAMI REDDIAR:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் கல்வி அமைச்சர் அவர்கள் பிரேரேபித்திருக்கும் மான்யக் கோரிக்கையை அப்படியே முழுமனதுடன் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் 9.44 a.m.

[Sri R. Krishnasami Reddiar] [17th July 1957

கூற விரும்புகிறேன். கிராமப் புறங்களில் சர்க்கார் உத்தரவுப் பிரகாரம் கட்டிடங்கள் கட்டி ஒரு உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்றால் இவ்வளவு தொகை அட்வான்ஸாக கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கும் உத்தரவு பிரகாரம் தொகையும் கட்டி அங்கே ஒரு வகுப்பிற்குப் போதிய அளவு எண்ணிக்கை உள்ள மாணவர்கள் இருந்தும் சில சமயங்களில் அந்த உயர்நிலைப் பள்ளிகளைத் துவக்குவதற்கு வேண்டிய அங்கீகாரம் கிடைக்காமல் அநேக கிராமங்களில் இப்பொழுது சிரமம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. பொதுமக்கள் அந்த ஊரிலே மிகவும் சிரமப்பட்டு கமிட்டிகளை அமைத்து தங்கள் சக்திக்கு மீறி பணம் செலவு செய்து கட்டிடங்கள் கட்டி இந்த அரசாங்கத்தின் மேல் நம்பிக்கை வைத்து இந்த மாதிரி காரியங்களைச் செய்து தங்கள் குழந்தைகளை உள்ளூரிலேயே படிக்க வைக்க வேண்டுமென்ற ஆர்வத்தால் செய்திருக்கிறார்கள். அதே மாதிரி பல ஊர்களிலிருந்து அவர்கள் எல்லோரும் கனம் நிதி அமைச்சர் அவர்களின் கருணையையும் ஆசியையும் எதிர்பார்த்து இந்த சென்னைமாநகரத்திற்கு வந்திருக்கிறார்கள். நிதி காரணமாக சில சங்கடங்கள் இருக்கலாம். ஆனால் நிதியையும் கல்வியையும் ஒருங்கே வைத்திருக்கும் மதிப்பிற்குரிய கனம் கல்வி அமைச்சர் அவர்கள் இது விஷயத்தில் தனது கவனத்தை செலுத்தும்படிக் கேட்டுக் கொள்கிறேன். எவ்வளவு உயர்நிலைப் பள்ளிகள் திறக்க அனுமதி கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுத்து மக்களுக்கு உதவி செய்யும்படி தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, இந்த கிராண்ட் மான்யத் தொகையில் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு குறைந்த தொகையும் தனியார் நடத்தும் பள்ளிகளுக்கு அதிகம் மான்யமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது, செகன்டரிக் கல்வியை எடுத்துக்கொண்டால் சர்க்கார் பள்ளிக்கூடத்திற்கு 11 சத விகிதம், தனியார் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கு 51-ம் ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கு 30 சத விகிதம் ஆக 211 லட்சம் ரூபாய் அமைகிறது. ப்ரைமரி பள்ளிக்கூடங்கள் விஷயத்தில் சர்க்கார் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கு 23 லட்சமும், தனியார் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கு 408 லட்சமும், ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கு 250 லட்சமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிகளைவிட தனியார் நடத்தும் பள்ளிகளுக்குத்தான் அதிகமாக இருக்கிறது என்பது புலனாகிறது. இந்த ஸ்தல ஸ்தாபனங்களால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு, அந்தந்த தொகையில் டீச்சர் கிராண்ட் என்று பாதிக் கொடுக்கப்பட்டு வருவதாக தெரிகிறது. ஆனால் தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிகளுக்கு "கிராண்ட் இன் எய்ட் கோட்" படி அவர்களுக்கு அளிக்கப்படுகிறதே தவிர அது எவ்வளவு என்பது என்போன்றவர்களுக்குத் தெரியவில்லை. இந்த கிராண்ட் கொடுக்கக் கூடிய விஷயம் வெகு காலத்திற்கு முன்பு வகுக்கப்பட்டதாய் இருக்கலாம். இப்பொழுது தனியார் நடத்தும் பள்ளிகளானாலும் சரி, ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிகளானாலும் சரி, லோக்கல் டெவலப்மென்ட் ஸ்கீமின் கீழ் ஏராளமான பணத்தை பெற்றுக்கொண்டு கட்டிடங்கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். தனியார் நடத்தும் பள்ளிக்கும் இந்த லோகல் டெவலப்மென்ட் ஸ்கீமின் கீழ் பணம் பெற்றிருப்பதால், இந்தமான்யத்தின் கீழ் கொடுக்கப்படும் "பில்டிங் கிராண்ட்" எந்த முறையில் வகுக்கிறார்கள், எப்படிக் கொடுக்கிறார்கள் என்பது இந்த பட்ஜெட்டிலிருந்து தெரியவில்லை. கல்வித் துறையில் செலவழிக்கப்படும் பணம் கூடுதலாக தனியார் துறையினருக்கு அதிகமாகக் கொடுப்பதால் அதை கண்காணிக்க வேண்டியது மிக மிக அவசியம். சாரதணமாக நிர்வாகத்தில் சில தவறுகளைப் பார்க்கலாம். ஆடிட் ரிப்போர்டை எடுத்துப்பார்த்தால் தெரியும். ஒரு பள்ளிக்கூடத்தில் கரெஸ்பாண்டன்ட்டும் மானேஜருமாக இருக்கக்கூடிய ஒருவர் பத்து வருடகாலம் கிராண்ட் வாங்கி இருக்கிறார்கள். ஆனால் அதை அவர் வாங்க தகுதி பெற்றிருக்கவில்லை. பத்து வருடங்கள் கழிந்த பிற்பாடு அதைக் கண்டு பிடித்து அந்தத் தொகையை அவரிடமிருந்து வசூல் செய்ய முடியாமல் டோக்கன் ரிக்கவரி என்று ஐந்து டெப்யூட்டி இன்ஸ்பெக்டர்களிடம் அல்லது 93 அல்லது 94 ரூபாய் வசூல் செய்து 2,000 ரூபாய் சொச்சம் சர்க்கார் செலவு எழுதியிருக்கிறார்கள். கிரிமினல் ட்ரைப்ஸ்க்கு கல்விச் சலுகைகள் அளிக்க ஜீ.ஓ. போட்டிருக்கிறார்கள். அதை 1952-ல் நான்கு ஜில்லாக்களுக்கு விஸ்தரித்திருக்கிறார்கள். அதில் யார் அந்தக் கல்விச்



17th July 1957] [Sri R. Krishnasami Reddiar]

சலுகை பெறக் கூடாதோ அவர்கள் அந்த சலுகையை அடைந்து பின் 1955-ல் கண்டு பிடிக்கப்பட்டு அதைத் திரும்ப பெற முடியாமல் கிட்டத்தட்ட மூன்று லட்சம் ரூபாய் சர்க்காருக்கு தள்ளுபடி செய்ய வேண்டி வந்தது. இந்த மாதிரி தவறுகள் ஏற்பட்டு விடலாம். இதைக் கண்டு பிடித்தவர்களுக்கு பாராட்டுதல் தெரிவிக்கலாம். தவிர பணம் போனது போனதுதான். ஆகவே, சர்க்கார், தனியார் துரையினர் நடத்தும் பள்ளிகளை நன்கு கண்காணிக்க வேண்டும். உண்மையாகவே இன்றைய தினம் தனியார் நடத்தும் பள்ளிக்கூடங்கள் எல்லாம் ஒரு வியாபாரமாக நடத்தப்படுகிறதே தவிர நல்ல சிந்தனையும் தங்கள் கை பொறுப்பும் கொண்டு பூர்ணமாக அமைக்கப்படுவதில்லை. ஓரளவு இருக்கலாம். ஆகவே அமைச்சர் அவர்கள் தனியார் பள்ளிகளுக்கு கொடுக்கும் கிராண்ட்களை தனித்தனியாக, நன்றாக, நேரடியாக, நன்கு ஆராய்ச்சி செய்து அவர்கள் இந்த கட்டிடத்திற்காக போட்டிருக்கும் தொகை எவ்வளவு, அவர்களுக்கு இது வரை கொடுக்கப்பட்டிருக்கிற தொகை சரியாக இருக்கிறதா என்று கவனித்து ஆவன செய்யவேண்டும், அப்படிச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழைப் போதனா மொழியாக்க வேண்டுமென்று சொல்லியது மிகவும் போற்றக் கூடிய விஷயம். ஆனால், உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழைப் போதனா மொழியாக்கிவிட்டால், ஆங்கிலம் இந்த நாட்டிலிருந்து அறவே போய்விட வேண்டுமென்ற சித்தாந்தத்தை ஒருவரும் ஒப்புக் கொள்ளமாட்டார்களென்று நான் நினைக்கிறேன். சர்க்கார் இல்லாவிட்டாலும், தனியார் யாராவது ஜில்லாவிற்கு ஒரு உயர்நிலைப் பள்ளியை வைத்து, ஆங்கிலத்தை போதனா மொழியாக வைத்துக்கொண்டு, சர்க்கார் உதவியை எதிர்பாராமல் நடத்த முன்வந்தால், அதற்கு வசதி இருக்குமாவென்று கனம் கல்வி அமைச்சர் அவர்கள் காலக் கிரமத்தில் யோசித்து ஏதேனும் செய்ய முடியுமாவென்று பார்க்கவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனக்குக் குறைந்த காலமே கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், நான் சீக்கிரம் என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். கனம் கல்வி அமைச்சர் அவர்கள், 'கல்வி ஒரு கோபுரம் போன்றது' என்று சொன்னார்கள். அவருடைய காலத்தில் அது சாதாரண கோபுரமாக இல்லாமல், தஞ்சாவூர் பெரிய கோபுரமாக அமைந்து, நமது நாட்டிற்குச் சிறந்த சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கல்வி மான்யத்தை ஆதரித்து என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI M. S. SELVARAJAN : கனம் சபாநாயகர் அவர்களே, கல்வி மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சில காலத்திற்கு முன்பு நாம் எல்லோரும் அடிமைகளாக இருந்த காலத்தை ஒப்பிட்டு கனம் நிதி அமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்களோடு பேசினார்கள். அடிப்படையிலே கூட கள்ளு சாராயம் விற்று வந்த பணத்திற்குத் தகுந்தபடி, பிரிட்டிஷார் காலத்தில் கல்விக்காகப் பணம் செலவழித்து வந்தார்கள். அந்த வருமானத்தையும் இழந்து, அன்று செலவழித்ததை விட ஐந்து மடங்கு அதிகமாகச் செலவு செய்யக்கூடியது மிகவும் வரவேற்கத் தகுந்தது. 9-51 a.m.

கல்வி போதிப்பவர்களுடைய நல்வாழ்வைப் பொறுத்துத்தான் கிராமாந்திரத்தில் குழந்தைகளுடைய நல்வாழ்வும் இந்த தேசத்தின் நல்வாழ்வும் இருக்கிறது என்பதைக் கருதித்தான் ஆசிரியர் பணியைக் கவர்ச்சிகரமான பணியாக ஆக்குவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது. அந்தக் கவர்ச்சி சிறிதும் நீங்காமல் அல்லது குறையாமல் இவ்வருஷமும் வருஷா வருஷமும் ஒதுக்கப்படுவதுபோல் பணம் ஒதுக்கப்பட்டு வருகிறது. ஆசிரியர் பணியைத் தவிர மற்ற எந்த வேலையும் கவர்ச்சியுள்ளது என்றிருந்த காலம் போய், ஆசிரியர் பணி மிகுந்த கவர்ச்சியுள்ள பணியாக ஆகிக்கொண்டு வருகிறது என்பதை எல்லோரும் உணருகிறோம். சர்க்கார் உத்தியோகம் வேண்டாம்; ஆசிரியராக இருந்தால் போதும் என்ற அளவுக்கு நாளாவட்டத்தில் இந்தப் பணி கவர்ச்சிகரமாக ஆகிக்கொண்டு வருகிறது.

ஆசிரியர்களுக்கு ' டீச்சர்ஸ் பிராவிடெண்ட் பண்டு ' இருப்பதால்தான், சம்பளத்தில் கால் பாகத்தை அவர்களுக்குப் பென்ஷனாக வைத்திருக்கிறார்கள். மற்றத் துறைகளில் இருப்பவர்களுக்கு பாதி பாகம் பென்ஷனாகக் கொடுப்பது என்று இருக்கும்போது, ஆசிரியர்களுக்கு மாத்திரம் கால் பாகந்தான் பென்ஷனாகக் கொடுப்பது பிராவிடெண்ட் பண்டைக் கருதித்தான் என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும்கூட, அந்தப் பென்ஷனை இன்னும் எந்த அளவுக்கு கவர்ச்சிகரமாக ஆக்க முடியும், சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்காவது பென்ஷனை ஆக்க முடியுமா என்று அரசாங்கம் கவனிக்கலாம் என்று பணிவாக நான் சொல்ல விரும்புகிறேன்.

ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடிய கல்விச் சலுகைகள் இன்னும் சில தரப்பினருக்கும் எட்ட வேண்டுமென்று எல்லோருக்கும் ஆசை. அரசியல் தியாகிகளுடைய குழந்தைகளுக்கு ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்குக் கொடுப்பதுபோல் அல்லாமல், இன்னும் கவர்ச்சிகரமான அளவுக்கு, எந்த அளவுக்குப் படிப்பின் உச்ச தரம் இருக்கிறதோ அந்த அளவுக்குக் கல்விச் சலுகைகள் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதிலேகூட, குழந்தைகளுக்கு என்றல்லாமல், நடுத்தர வாலிபர் தியாகியாக இருந்தால், அவர்களை ஒட்டியுள்ளவர்கள் அல்லது அவர்களுடைய பராமரிப்பில் இருக்கக்கூடியவர்களுக்குக்கூட கல்விச் சலுகை அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். சாதாரணமாக, யுத்தத்திற்குச் சென்று வந்தவர் ஒருவருடைய குடும்பத்தில் அவரைச் சார்ந்தவர்கள் எல்லோருக்கும் கல்விச் சலுகை கிடைத்துக்கொண்டிருக்கிறது. அதுபோல, தியாகிகளுடைய குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல், அவர்களுடைய பராமரிப்பில் இருக்கக்கூடியவர்களுக்கும்கூட சாதாரணக் கல்விச் சலுகையிலிருந்து கல்வியின் உச்ச தரம் வரையிலும் சலுகை அளிக்க, அதாவது, இலவசக் கல்விச் சலுகையளிக்க, அரசாங்கம் முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ட்ரெயினிங் ஸ்கூல்களை இப்போது சர்க்காரே ஏற்று நடத்துவதைப் பார்க்கிறோம். இது மாத்திரம் போதாது. தனியார் கையில் இருக்கும் ட்ரெயினிங் ஸ்கூல்களை சீக்கிரமாக அரசாங்கம் தன் கையில் எடுத்துக்கொண்டால்தான் இந்த தேசத்திற்கு விமோசனம் என்று நான் நினைக்கிறேன். அந்தத் திசையிலும் அரசாங்கம் விரைவாகக் கவனம் செலுத்துமென்று நான் நினைக்கிறேன்.

சாதாரணமாக நாம் கல்லூரிகளில் ஒரு விஷயத்தைப் பார்க்கின்றோம். எப். ஏ. வரையில் படித்தவர்களுக்கு, பி. காம்., பி. எஸ்ஸி. அல்லது பி. ஏ. (ஆனர்ஸ்) படிக்க, அதே கல்லூரியில் படித்திருந்தாலும் கூட, அங்கு இடமில்லை யென்று சொல்லக்கூடிய துர்ப்பாக்கிய நிலையில் அந்தக் குழந்தைகள் திண்டாடுகிறார்கள். அதே கல்லூரியில் படித்தவர்கள் பாஸ் மார்க்கு வாங்கியிருக்கலாம்; ஆனால் அதிகமாக மார்க்கு வாங்கவில்லை என்ற காரணத்திற்காக அடுத்த கல்லூரியைத்தேடி அலையவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அடுத்த கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தவர்கள் இதே மாதிரி இன்னொரு கல்லூரியைத் தேடி அலைவதைப் பார்க்கிறோம். நிச்சயமாக அதே கல்லூரியில் படித்தவர்களுக்கு பாஸாகி யிருந்தால், இடம் கொடுத்துவிட்டு பிறகுதான் மற்றவர்களுக்கு சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று விதி ஏற்படுத்தலாம் என்று நான் பணிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முதியோர் கல்வியைப் பொறுத்தமட்டில், எந்த அளவுக்கு நாம் ஆசை பட்டோமோ அந்த அளவுக்கு நாம் சித்தி பெறவில்லை என்று அரசாங்கம் சூசகமாகத் தெரிவிக்கிறது. என்னுடைய யோசனை ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆரம்ப ஆசிரியர்களுக்கும் நடுத்தர ஆசிரியர்களுக்கும் மேல் வகுப்பு ஆசிரியர்களுக்கும் போதனா முறைப் பள்ளிகளில் ' ரெப்ரஷர் கோர்ஸ் ' நடத்துவதுபோல், முதியோர் கல்விக்கான முறையையும் அதே போதனா முறைப் பள்ளிகளில் போதிக்கலாம். அவ்வாறு செய்தால், ஆசிரியர்கள் முதியோர் கல்வி முறையையும் கற்றுக்கொண்ட பிறகுதான்





அப்பள்ளியை விட்டு வெளியேற முடியும். நாட்டிலுள்ள ஆண், பெண் ஆசிரியர்கள் இதற்கு எந்த அளவு உற்சாகமாக இருக்கிறார்களோ, அந்த அளவுக்கு அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு முதியோர் கல்வியைப் பரப்பலாம். அவர்களுக்கு சாவகாசம் இல்லை யென்றால், வேலையைவிட்டு நீங்கியவர்களையும் பென்ஷன் குறைவாக வாங்கக் கூடியவர்களையும் பயன்படுத்திக் கொண்டு முதியோர் கல்வியைப் பரப்ப முயற்சிக்கலாம்.

மத்திய சர்க்காரிலிருந்து பல துறைகளுக்கு மான்யம் வழங்கப்படுகிறது. குறிப்பாக, தொழில் கல்விக்கு மான்யம் வழங்கப்படுகிறது. சென்ற வருஷத்தில் இதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டதோ, அதைப் பயன்படுத்த முடியவில்லை. கோழி வளர்ப்புக்காக ' பௌல்ட்ரி கிராண்டு ' மத்திய சர்க்காரும் நமது அரசாங்கமும் கொடுத்து வருகின்றன. அது சம்பந்தமாக, ' கோழிகளை வாங்கியிருக்கிறோம் ' என்று ' சர்டிபை ' செய்த பிறகு தான் மானியம் கொடுக்கப்படுகிறதென்று சொல்லப்படுகிறது. அது வாஸ்தவமானால், நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கோழி வளர்ப்பு என்பது சாதாரண விஷய மல்ல. நல்ல பழக்கமுள்ளவர்கள்தான் இத்தொழிலில் ஈடுபடமுடியும். சிறிது அஜாக்கிரதையாக இருந்தாலும், அரை நொடியில் அவ்வளவும் மாய்ந்துவிடும்; நசித்துவிடும். ஆதலால், இந்த மான்யம் கொடுக்கும் முறையில் சிறிது மாறுதல் செய்யலாம். மற்றத் துறைகளில் கருவிகள் வாங்கிய பிறகு, வேண்டிய ஆட்களுக்குப் பயிற்சியளித்த பிறகு மான்யம் கொடுப்பது போல, பயிற்சி பெற்ற பிறகு கோழிகளையும் உபகரணங்களையும் வாங்கக்கூடிய அளவுக்கு மான்யம் வழங்கும்போது ஜாக்கிரதையாக பார்த்து கொள்ளலாம். இன்னும் எத்தனையோ துறைகளுக்கு, தொழில் துறைக்கும்கூட, மத்திய சர்க்கார் மானியம் வழங்கி வருகிறது. எந்தெந்தத் துறைகளுக்கு மானியம் வருகிறது என்று தெரியாத நிலைமையில் மக்கள் திண்டாடுகிறார்கள். ஆங்காங்குள்ள கல்வி ஸ்தாபனங்களுக்குச் சுற்றறிக்கை விடுத்து, இன்னென்ன இனங்களுக்கு மானியம் உண்டு என்று தெரிவித்து, அதைப் பயன் படுத்திக் கொள்ளப் பார்க்கலாம்.

ஏழைக் குழந்தைகளுக்கு மத்தியான உணவு அளிப்பதற்காக பத்து லக்ஷம் ரூபாய் ஒதுக்கியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இருந்தாலும் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். ஏழைக் குழந்தைகளுக்கு இலவச மத்தியான உணவு அளிப்பதற்காக ஒரு தினத்தை ஒதுக்கிக் கொண்டாடலாம். அந்த தினத்தில் அமைச்சர்கள் ஒன்று அல்லது இரண்டு ஜில்லாக்களைப் பொறுக்கியெடுத்து சிறப்பாக எல்லா கிராமங்களிலும் அந்த தினத்தைக் கொண்டாடலாம். அப்பொழுது இந்த வசதிக்காக நிலம் மானியமாக வாங்க ஏற்பாடு செய்யலாம். அவ்வாறு ஒரு நிரந்தர ஏற்பாடு செய்தால், இந்த உணவு அளிப்பதிலுள்ள சிரமத்தைக் குறைக்கலாம். இல்லாவிட்டால் பத்து லக்ஷம் ரூபாய்க்குப் பதில் நூறு பத்து லக்ஷம் ரூபாய் ஒதுக்கினாலும் கூட, முற்றிலும் திருப்திகரமாக நாம் இந்தத் திட்டத்தை நடத்த முடியுமென்று நான் நினைக்கவில்லை.

மற்றொரு சிறு ஆலோசனையும் சொல்ல விரும்புகிறேன். அது ஆலய நிதியிலிருந்து பாடசாலைகள் அமைப்பதைப் பற்றியது. பாடசாலைகளை நிர்வகிப்பது ஆலயத்தின் பொறுப்பு என்று சொல்வதை விட ஸ்தல ஸ்தாபனங்களோ அரசாங்கமோ அவைகளை ஏற்று நடத்தலாம். ஆனால், அங்கு இருக்கக்கூடிய குழந்தைகளின் பராமரிப்புக்காக இலவச உணவு அளிக்க போர்டிங் லாட்ஜ் வைப்பதற்கு ஆலய நிதியை உபயோகித்துக் கொள்ளலாம். ஆலய நிதியைக் கொடுத்து ஆலயங்களும் அவற்றின் நிர்வாகிகளும் நற்பெயர் சம்பாதித்துக்கொள்ளலாம். பாடசாலைகளை நேரடியாக ஆலய நிர்வாகத்தினர் நடத்தி வளர்ப்பதற்கு குழந்தைகள் சங்கியைக்கு தகுந்தபடி கோவிலின் நிதியும் வளர்ந்துகொண்டிருக்குமென்று சொல்ல முடியாது. இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

*SRI P. VEERAPPA GOUNDER: கனம் தலைவர் அவர்களே, இந்தக் 10 a.m.
கல்வி மானியத்தை எதிர்த்து கொண்டுவரப் பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கனம் நிதி அமைச்சர் பேசும் போது புதிய வகுப்புகள் திறக்க 20 லட்சம் ரூபாயும், துடக்க பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்ற 10 லட்சம் ரூபாயும், 23 சாதாரண

பயிற்சிப் பள்ளிகளை ஆதாரக் கல்வி பயிற்சிப் பள்ளிகளாக மாற்ற 23 லட்சம் ரூபாயும் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று அவர் குறிப்பிட்டார். அது மட்டுமல்லாமல் ஏழை மாணவர்களுக்கு பகல் உணவு அளிக்க மானியம் கேட்டிருப்பதையும் அவர் குறிப்பிட்டார். இவ்வளவு கல்வித் துறையில் தாராளமாக செலவு செய்ய நிதி ஒதுக்கியும், ஏழை மக்கள், பின் தங்கிய மக்கள், ஹரிஜன மக்கள் கல்வியில் முன்னேற வழி வகை காட்டப்பட வில்லை. பொருள் வசதியற்ற பின் தங்கிய மக்கள், படிக்கப் போதுமான வசதி இல்லாமலே, பள்ளிகளில் சேராமலேயே இருந்துவிடுகிறார்கள். அதனால் அவர்கள் பின் தங்கிய நிலையிலேயே இருக்கிறார்கள். ஆகையால், தாழ்த்தப்பட்ட மக்கள், ஹரிஜன மக்கள், வன்னிய மக்கள், இன்னும் பிற்பட்ட மக்களுக்கும் 10-வது வகுப்பு வரையில் இலவசமாக கல்வி கற்பிக்க சர்க்கார் சட்டம் கொண்டு வரவேண்டும். இதற்கு கனம் கல்வி அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதாரத் துறையில் மிகவும் மெலிந்தவர்கள் ஆகையால்தான் அவர்கள் கல்வித் துறையிலும் மிகவும் எண்ணிக்கை குறைவாக இருக்கிறார்கள். பின்தங்கிய சமூகத்தில் இன்றைக்கு எடுத்துக் கொண்டோமானால் நூற்றுக்கு பத்துப் பதினைந்து பேர்கள் கூடப் படித்தவர்கள் தேற மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதற்காகவே 5 வயதுக்கு மேற்பட்ட பிள்ளை கட்டாயமாக பள்ளிக்குச் சென்று படிக்க வேண்டுமென்று ஒரு கட்டாயக் கல்விச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று சர்க்காருக்கு நினைவூட்டுகிறேன்.

அடுத்தபடியாக கல்வி அபிவிருத்தி மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கிற காரணத்தால் ஒவ்வொரு பிருக்காவிலும் ஒரு உயர்நிலை, தொடக்கப் பள்ளிகளை ஏற்படுத்தவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் அதிகமான மாணவ மாணவிகள் நல்ல முறையில் கல்வி கற்றுக்கொள்ள நேரிடும். கல்வி அபிவிருத்தி அடைந்தால்தான், அதிலும் தொழில் கல்வி அபிவிருத்தியடைந்தால்தான் எல்லாலாத் துறைகளிலும் அபிவிருத்தி அடைந்து நாட்டில் முன்னேற்றம் ஏற்படும், பஞ்சம் முதலியவைகள் ஏற்படாது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மற்ற பிற்பட்ட மக்களுக்கும் ஒரு வழி காட்டியாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **Sri R. SUBRAMANIAM**: கனம் சபா நாயகர் அவர்களே, கனம்
10-03 a.m. மந்திரி அவர்கள் கொண்டு வந்த கல்வி மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக சர்க்கார் அவர்கள் ஆரம்ப ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தியிருப்பதை மிகவும் வரவேற்கிறேன். அதனால் அவர்களுடைய நிலையானது பாதுகாக்கப்பட்டது மட்டுமின்றி அவர்களுடைய உற்சாகத்தால் ஏற்படக் கூடிய பலன் சமுதாயத்துக்கு கிடைக்கப் போகிறது. பள்ளிகளைப் புதியதாக திறக்க 20 லட்சம் ரூபாயும், மத்தியான உணவு கொடுக்க 10 லட்சம் ரூபாயும் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இப்போது பள்ளிகளைத் திறக்கும் விஷயத்தில் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். தற்போது 500 ஜனத் தொகையை அடிப்படையாகக் கொண்டு கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகளைத் திறக்கிறார்கள். அப்படி 500 ஜனத் தொகையுள்ள கிராமங்களில் பள்ளிக் கூடங்கள் திறப்பது அநேகமாக முடிந்து விட்டதாகவும், இப்போது 400 ஜனத் தொகையுள்ள கிராமங்களில் பள்ளிகளைத் திறப்பதாகவும் தெரிகிறது. இந்த விதியை இன்னும் சற்றுத் தளர்த்தி, 300 ஜனத் தொகையுள்ள கிராமங்களிலெல்லாம் பள்ளிகளைத் திறக்க சர்க்கார் யோசிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, மத்தியான உணவு கொடுப்பதற்காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இப்போது இந்த மத்தியான உணவு ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்ட் நடத்தும் ஹரிஜனச் சேரிகளில் உள்ள பள்ளிகளில் தான் கொடுக்கப்பட்டுவருகிறது. இதை அதிகப்படுத்தி சாதாரணமாக சர்க்காராலும், ஜில்லாபோர்டாராலும் திறக்கப்பட்டிருக்கும் ஹரிஜனச் சேரிகளில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் இந்த மத்தியான உணவு அளிக்க சர்க்கார் உத்திரவு போடவேண்டும்.



இப்போது திறக்கப்பட்டிருக்கும் ஆரம்பப் பள்ளிகளெல்லாம், பாட்டை ஓரங்களிலும், நல்ல போக்குவரத்து உள்ள இடத்திலும், அங்கங்கே திறக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. இண்டீரியர் வில்லேஜுஸ்களில் பள்ளிகள் திறக்கப்படாமல் இருக்கிறது. உள்ளிட்ட கிராமங்கள் பேரிலும் கவனம் செலுத்தி அங்கும் பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது ஒரு பள்ளியிருந்தால் அதன் சுற்றுப் புறத்திற்கு ஒரு மைல் தூரத்தில் வேறு பள்ளிகளைத் திறப்பதில்லையென்று சர்க்கார் கொள்கையாகக் கொண்டு பள்ளிகளைத் திறக்காமல் இருந்து வருகிறது. ஏதோ ஒரு இடத்தில் பள்ளி இருந்தாலும்கூட ஒரு மைலுக்கு ஒன்றாவது, இரண்டாவது கிளாஸில் படிக்க குழந்தைகள் நடந்து போய்ப் படித்துவிட்டு வருவது மிக மிக சிரமமாகவிருக்கிறது. அரை மைல், முக்கால் மைல் 30 அல்லது 40 பையன்கள் படிக்க இருந்தாலும்கூட அந்த விதியை அனுசரித்து இன்றைக்கு பள்ளிகள் திறக்காமல் இருக்கிறார்கள். பீடர் ஸ்கூல், அதாவது மூன்றும் கிளாஸ் வரை உள்ள பள்ளிகளை இந்தமாதிரி இடங்களில் திறக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டில் ஹரிஜனங்களுக்கு பள்ளிகள் திறப்பதை நிறுத்திவிட்டார்கள். இந்தப் பள்ளிகளை சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முறையில் ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டில் திறப்பதில்லை. இப்போது இது சர்க்கார் பொறுப்பிலும், லோகல் போர்ட்ஸ் பொறுப்பிலும் விடப்பட்டிருக்கிறது. இப்போது திறக்கக் கூடிய பள்ளிகளெல்லாம் பொதுவாக ஜாதி ஹிந்துக்களுக்கும் மற்ற ஹரிஜன மக்களுக்கும் பொதுவாகத் தான் திறக்கப்படுகிறது. ஆனால் அநேகமாக ஜாதி ஹிந்துக்கள் எங்கு இருக்கிறார்களோ அங்குதான் பள்ளிகளைத் திறப்பதாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கொள்கை மாறவேண்டும். சாதாரணமாக இரண்டு சாராரும் ஒன்றாக ஒரே பள்ளியில் படிப்பது நல்லது. மாணவர்களுடைய இளமை காலத்திலேயே இந்த ஜாதி மனப்பான்மையை போக்கினால் நல்லது என்றுதான் சர்க்கார் இம்மாதிரி ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. நான் அதை மிக மிக வரவேற்கிறேன். ஆனால் ஹரிஜன மாணவர்கள் ஜாதி ஹிந்துக்கள் உள்ள இடத்திலுள்ள பள்ளிகளில் படிப்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. ஹரிஜனங்கள் ஒவ்வொன்றுக்கும் ஜாதி ஹிந்துக்களை எதிர்பார்த்திருக்கிறார்கள். ஹரிஜனச் சிறுவர்கள் தங்களுக்கு மாடு மேய்க்கவேண்டுமென்று ஜாதி ஹிந்துக்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஜாதி மனப்பான்மை இம்மாதிரி ஸிடிகளில் மாறியிருந்தாலும்கூட கிராமங்களில் போய்ப் பார்த்தால் நாம் எதிர்பார்த்த அளவுக்கு, அந்த ஜாதி மனப்பான்மை இன்னும் போகவில்லை. இனிமேல் திறக்கக் கூடிய பள்ளிகளை, எங்கெல்லாம் வசதி இருக்கிறதோ, அங்கெல்லாம் ஹரிஜனச் சேரிகளில் திறக்க உத்திரவிட்டால், அங்கு ஜாதி ஹிந்துக்கள் போய்ப் படிக்க வசதியாக இருக்கும். இதை ஹரிஜன மக்களும் அன்புடன் வரவேற்பார்கள்.

அதற்கு அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு பள்ளிகளில் சம்பளம் கிடையாது. காலேஜுகளிலும்கூட கிடையாது. ஆனால் அவர்கள் பள்ளிகளில் சேரும்போது முதலில் சம்பளத்தைக் கட்டச்சொல்கிறார்கள். காரணம் என்னவென்றால் அவர்கள் ஹரிஜனங்கள் தானா என்று நிர்ணயிக்க முடியாமல்தான் முதலில் சம்பளத்தை வாங்குகிறார்கள். முதலிலேயே ஹரிஜனங்கள் என்று நிரூபிக்கவேண்டுமென்று சொல்லி சேரக்கூடிய காலத்திலேயே ஸர்டிபிகேட் கொடுக்கவேண்டுமென்ற முறையை அனுசரித்தால் மிகவும் நல்லதாக இருக்கும். ஏதோ மிகவும் குறைந்த வருவாய் உள்ளவர்கள், பையன் அறிவும் ஆற்றலும் உள்ளவனாக இருந்தாலும்கூட பள்ளிக் கூடத்தில் முதலில் சம்பளம் கட்டவேண்டுமென்ற கஷ்டத்தால் சேரமுடியாத நிலையில் இருக்கிறார்கள். இது மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

இப்பொழுது சர்க்காரால் நடத்தப்படும் காலேஜ்களில் ஸ்தானங்கள் ஒதுக்கும் போது, ஹரிஜனங்களுக்கு 16 சத விகிதம், பிற்பட்ட வகுப்பினர்களுக்கு 25 சத விகிதமும் ஒதுக்கியிருக்கின்றார்கள். இப்பொழுது சர்க்காரால்

[Sri R. Subramaniam] [17th July 1957

நடத்தப்படும் காலேஜ்களில், எந்தக் காலேஜைப் பார்த்தாலுங்கூட, அங்கு பையன்களைச் சேர்க்க வேண்டிய அளவு இடம் இருக்கிறது. ஆனால், தனியார் அல்லது கமிட்டியார் நடத்தும் காலேஜ்களில் "இடம் இல்லை, இடம் இல்லை" என்ற பேச்சே எங்கு போனாலும் வருகிறது. இதற்குக் காரணம், எஸ்.எஸ்.எல்.ஸி.-யில் குறைந்த மார்க் வாங்கியவர்களை அந்தக் காலேஜ்களில் சேர்த்துக்கொள்வது இல்லை. 300 மார்க்குகளுக்குக் குறைவாக மார்க் வாங்கியிருந்த பிள்ளைகளை தங்கள் காலேஜ்களில் அனுமதித்தால், அடுத்ததுவரக்கூடிய "ரிசல்ட்" நல்ல முறையில் இருக்காது என்று கருதி 'இடம் இல்லை' என்று சொல்லிவிடுகிறார்கள்.

மற்றவர்கள் போய் "ஏன், இங்கு ஹரிஜனங்களுக்கும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கவில்லையா?" என்று கேட்டாலுங்கூட, "அம்மாதிரியான கவர்ன்மெண்ட் உத்தரவு ஒன்றும் இல்லை" என்று அவர்கள் சொல்லி விடுகிறார்கள். இதைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கே மிகவும் சிரமமாக இருந்தது. இங்கு வந்தவுடன் பார்த்து, இம்மாதிரி ஒரு கவர்ன்மெண்ட் உத்தரவு இருக்கிறது என்று தெரிந்துகொண்டேன். இது அவர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லையோ அல்லது வேண்டுமென்றேதான் செய்கிறார்களோ எனக்குத் தெரியாது. இந்த விகிதாசாரத்தை அவர்கள் கண்டிப்பாக அனுசரிக்கும்படியாக அரசாங்கம் அவர்களுக்கு உத்திரவிடும்படியாக நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தக் கஷ்டத்தைப் போக்க இன்னொன்றும் நான் சொல்ல விரும்புகிறேன்.

காலேஜ்களில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக "செலக்ஷன் கமிட்டி" என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த செலக்ஷன் கமிட்டியில் "சர்க்கார் நாமினி" யாக ஒருவரை நாமே நியமித்தால், இந்தச் சலுகை அந்தந்த இனத்தவர்களுக்குக் கிடைக்கிறதா என்பதைக் கவனிப்பதற்கு அவகாசம் இருக்கும். ஆகவே, செலக்ஷன் கமிட்டியில் "சர்க்கார் நாமினி" ஒருவரை நியமிப்பது நல்லது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எங்கள் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில் தொழில் கல்வி மிகவும் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஏதோ ஒரு காலத்தில் இருந்த "மெடிகல் ஸ்கூல்" கூட இப்பொழுது இல்லை. தஞ்சை ஜில்லா நமது தமிழ் நாட்டிலேயே "நெற் களஞ்சியம்" எனப் பெயர் பெற்றும், அங்கே அதிகமான நெல் சாகுபடி இருந்தும்கூட, அங்கு ஒரு விவசாயக் கல்லூரிகூட இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. ஆடுதுறையில் "பேசிக் அக்ரிகல்சுரல் ஸ்கூல்" என்ற ஒரு ஸ்கூல் இருக்கிறது. அது மட்டும் போதாது. சர்க்கார் மூலமாகவே அங்கு ஒரு விவசாயக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கும்படியாக நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எங்கள் ஜில்லாவில் "பாலிடெக்னிக் ஸ்கூல்" ஒன்றை ஆரம்பிக்க எங்கள் ஜில்லாவிலிருக்கும் ஸ்ரீ மனைத்துணைநாத தேசிகர் அவர்கள் முன் வந்திருப்பதாகத் தெரிகிறது. அவருடைய முயற்சிக்கு சர்க்கார் எல்லா ஊக்கமும் அளித்து, சீக்கிரத்திலேயே "பாலிடெக்னிக் ஸ்கூல்" ஒன்றை எங்கள் தஞ்சை ஜில்லாவில் திறக்க ஏற்பாடு செய்யும் படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது ஒரத்தநாடில் ஒரு பி. டி. காலேஜ் ஆரம்பிக்கப்போவதாகத் தெரிகிறது. இதைப்பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, ஆதாரக் கல்வி விஷயத்தில் நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆதாரக் கல்வி மிகவும் முக்கியம் வாய்ந்தது. இக் கல்வி முறையை நாட்டில் பரப்பவேண்டுமென்று காந்திஜி அவர்கள் சொன்ன காலத்திலிருந்து நாம் அதற்காக பிரயாசை எடுத்துக்கொண்டு வருகிறோம். ஆதாரக் கல்வியைப் பரப்பும் விஷயம் நமது சென்னை ராஜ்ய சர்க்காரின் அடிப்படைக் கொள்கையாகவும் இருந்து வருகிறது. ஆனால், 21,000 ஆரம்பப்பள்ளிகள் நமது மாகாணத்தில்



17th July 1957] [Sri R. Subramaniam]

இருப்பதாகத் தெரிகிறது. இதில் ஆதாரக் கல்விப் பள்ளிகள் 2,000 மட்டுமே இருப்பதாகவும் தெரிகிறது. சென்ற பத்து வருஷ காலத்தில் பத்து சத விகிதம் பள்ளிகள்தான் ஆதாரக் கல்விப் பள்ளிகளாக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. எனவே, ஆதாரக் கல்விப் பள்ளிகள் அமைக்கும் விஷயத்தில் சர்க்கார் மிகவும் துரிதப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கட்டாயக் கல்வியை எடுத்துக்கொண்டால், ஏதோ சில இடங்களில் தான் கட்டாயக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், அது நல்ல முறையிலே நடைபெற வில்லை. எவ்வளவு வற்புறுத்தியபோதிலும் 76 சத விகிதம் பிள்ளைகள்தான் பள்ளிக்கு வருகிறார்கள். இந்தக் கட்டாயக் கல்வி அளிப்பதை இப்பொழுது சிறிது தளர்த்தி வைத்திருப்பதாகத் தெரிகிறது. மக்களுக்கு இருக்கும் கஷ்டங்கள் பல. அதோடு கூட, பிள்ளைகளுக்கு சிலேட்டு, புத்தகம்கூட வாங்கிக்கொடுப்பதற்கு பெரும்பாலான மக்களுக்கு வசதி இல்லாமல் கஷ்டமாக இருக்கிறது. ஆனால், சர்க்காருடைய திட்டத்தின்படி பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடங்களில் மத்தியான உணவு அளிக்கப்படுகிறது. கட்டாயக் கல்வி கற்றுக்கொடுக்க வேண்டும் என்று எங்கெங்கு வற்புறுத்தியிருக்கிறதோ, அந்த இடங்களுக்கு முதல் இடம் அளித்து, அங்கு கட்டாயமாக மத்தியான உணவு அளிக்க வேண்டும் என்ற முறையை ஏற்படுத்தி, கட்டாயக் கல்வி முறையை நல்ல முறையில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை இத்துடன் நான் முடித்துக்கொள்ளுகின்றேன்.

*Sri M. RAMACHANDRA REDDI: கனம் சபா நாயகர் அவர்களே, 10-15 a.m.
கனம் கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை நான் ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தற்போது, நமது கல்வித் துறைதான் சமூகத்துக்கு ரொம்பப் பயன் படக் கூடிய முக்கியமான துறையாக விளங்குகிறது என்பதில் சந்தேகமே இல்லை. இந்த முக்கியமான கல்வி விஷயத்திலே ஆரம்பக் கல்வி மிகவும் முக்கியமானது. அதற்காக கனம் அமைச்சர் அவர்கள் 6 கோடி ரூபாய்க்குமேல் ஒதுக்கி வைத்திருப்பதற்காக நாம் அவரை மிக மிக பாராட்ட வேண்டும். இவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கும் இவ்வளவு பெரிய துறைக்கு, தனியாகவே ஒரு டைரக்டர் நியமித்து, இந்த இலாகாவைப் பரிபாலிக்கச் செய்தால் நன்றாக இருக்கும். இப்பொழுது ஆரம்பக் கல்வி, உயர்தரக் கல்வி, கல்லூரிக் கல்வி ஆகிய எல்லாவற்றிற்குமாகச் சேர்ந்து ஒரு டைரக்டர் கவனித்து வருகிறார். ஆரம்பக் கல்விக்கு என்று டெபுடி டைரக்டர்தான் இருக்கிறார். அந்த டெபுடி டைரக்டரையே ஆரம்பக் கல்வி டைரக்டர் என்று நியமித்து விட்டால் ஆரம்பக் கல்வி விஷயத்தை நன்றாக கவனிப்பதற்கும் மேற்பார்வை இடுவதற்கும், விஸ்தரிப்பதற்கும் சௌகரியமாக இருக்கும் என்பது என்னுடைய எண்ணம்.

இன்றைக்கு ஆரம்பப் பள்ளிகளானது பல்வேறு நிர்வாகத்தின் கீழ் நடந்து வருகின்றன. அவைகளையெல்லாம் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்து சர்க்காரே நேரடியாகக் கவனித்துப் பரிபாலித்தால் அவைகளின் தரமும், ஆசிரியர்களுடைய பண்பும், ஆசிரியர்களுக்கு வேண்டிய உயர்வும் இடைக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இப்பொழுது பலதரப்பட்ட மானேஜ்மெண்டுகள் ஆரம்பப் பள்ளிக்கூடங்களை நிர்வகித்து வருவது அவ்வளவு பொருத்தமாக இல்லை. இப்பொழுது சர்க்கார் ஆரம்பப் பள்ளிப் படிப்பை இலவசமாக அளிக்க முன் வந்திருப்பதால், இவைகளின் நிர்வாகத்தை சர்க்காரே ஏற்றுக்கொண்டு நேரடியாகக் கவனிப்பது நல்லது. லேபர் பள்ளிக்கூடங்கள், பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்கள், ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்கள், மிஷனரி பள்ளிக்கூடங்கள் என்று இப்படிப் பல்வேறு மானேஜ்மெண்ட் இருப்பதையெல்லாம் மாற்றி, எல்லாப் பள்ளிகளையும் சர்க்காரே நேரடி நிர்வாகத்தில் மாற்றிக்கொண்டால் நன்றாக இருக்கும் என்று நான் மீண்டும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

[Sri M. Ramachandra Reddi [17th July 1957

ஆரம்ப, உயர்தரப் பாடசாலை என்று ஒன்று இப்பொழுது இருக்கிறது. அது அவசியம் இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். கனம் அங்கத்தினர்கள் இதைச் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். ஹையர் எலிமென்டரி ஸ்கூலில் 8-வது ஸ்டாண்டர்டு வரை படிக்கும் மாணவர்கள் உயர் நிலைப் பள்ளிக்குப் போகும் முதல் பாரத்திற்குக் கூட லாயக்கற்றவர்களாக இருக்கிறபடியால் 11 ஆண்டுப் படிப்பை, 17 வயதில் முடிப்பதற்குப் பதிலாக, 20 வயதில் முடிக்க வேண்டியதாக இருக்கிறது. இப்படி அனாவசியமாக மூன்று ஆண்டுகள் வீணாகப் போகிறது.

அதுவும் தவிர, ஹையர் எலிமென்டரி ஸ்கூலில் தேர்ச்சி பெற்றவர்கள் ஹையர் கிரேடு ட்ரெயினிங்குக்குப் போகலாம் என்ற விதி இருந்தாலுங்கூட, அவர்களுக்கு ஓரளவு ஜீவனோபாயத்திற்கு உகந்த கல்வியாக இது இருந்தாலுங்கூட, செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களை "ஹையர் கிரேடு வேகன்ஸி"க்குப் போட்டால் பொருத்தமாக இருக்கும். அவர்களையே ஆரம்ப ஆசிரியர்களாக நியமித்துவிடலாம். இம்மாதிரி 8-வது ஸ்டாண்டர்டு வரையில் படித்த ஆசிரியர்கள் அவசியம் இல்லை என்று நான் கருதுகின்றேன். ஆகவே, கனம் அங்கத்தினர்கள் இதைப்பற்றி யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். ஏனென்றால், இதனால் மூன்று வருஷ காலம் வீணாகிறது.

பத்தாவது வரையில் எல்லோருக்கும் இலவசப் படிப்பு கொடுப்பது நல்லது. இப்பொழுது உத்தியோகஸ்தர்களுடைய பிள்ளைகளுக்கும், ஏழைகளுக்கும் இலவசக் கல்வி சர்க்கார் கொடுத்து வருகின்றார்கள். ஒரு சிலருக்கு மட்டும் இலவசமாகக் கல்வி முறை என்று இருக்காமல், எல்லோருக்குமே 10-வது வரை இலவசக் கல்வி கொடுப்பதைப்பற்றி முதல் மந்திரி அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தக் காரியத்தை அவர் செய்து விட்டால் எல்லோருக்குமே அனாவசியமாக வேலைகள் குறைந்து விடும், "பாவெர்டி சர்டிபிகேட்" கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லாமல் போய் விடும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அதனால் தொல்லைகளும் குறையும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இப்பொழுது போதுமான தணிக்கை அதிகாரிகள் இல்லாமல் குறைவுபட்டிருக்கிறது. நம் ராஜ்யத்தில் 132 ஸ்தானங்களுக்குத் தணிக்கை அதிகாரிகள் இல்லாமல் இருக்கிறது. எங்கள் ஜில்லாவாகிய வடஆற்காடு ஜில்லாவை "**Bifurcate**" செய்திருக்கிறார்கள். ஜில்லாவை இரண்டாகப் பிரித்து, இரண்டு கல்வி அதிகாரிகள் நியமிக்கப்படுவதைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். ஆனால், இன்னும் கல்வி அதிகாரி நியமிக்கப்படவில்லை. அவர்கள் மேற்பார்வை இல்லாமல் பல உயர்தரப் பாடசாலைகள் இரண்டு ஆண்டுகளாக "சூபர்வைஸ்" செய்யப்படாமல் இருக்கின்றன. அதனால் தரம் குறைந்திருக்கிறது.என்பதையும் நாம் ஒத்துக்கொள்ள வேண்டும்.

அதோடு ஆரம்ப ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் திட்டத்திற்கு மத்திய சர்க்காரினாலே உதவி செய்யப்படுகிறது. அதற்கு ஜில்லா போர்டிலிருந்து அவர்களுக்கு ஒரு சலுகை கொடுப்பதற்குக் கேட்டிருக்கிறார்கள். அதைத் தனியார் பில்டிங் கமிட்டி ஒன்றை ஸ்தாபனம் செய்து அவர்கள் மூலமாக அதைக் கட்டவேண்டுமென்று கூறி இருப்பதனால் அதைச் சீக்கிரம் செய்ய முடியவில்லை. சர்க்கார் இலாகா மூலமாகவே அந்தக் கட்டிடங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் கட்டிக் கொடுப்பது அத்தியாவசியம். பல கிராமங்களில் ஆசிரியர்கள் வீடு இல்லாது கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதனாலே அவ்வூரை விட்டுத் தங்களை மாற்றி விடவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதோடு உயர்தரப் பாடசாலைகளுக்கும் கட்டிடம் ஏற்படுத்திக் கொடுப்பது சர்க்காருடைய கொள்கை. அதை அவசியம் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடு எங்கள் ஜில்லாவில் உள்ள மாண்புமிக்க ஒருவர் எஜுகேஷனல் டிரஸ்டு பேரிலே ஏராளமான திரவியத்தை வைத்திருக்கிறார். பாலிடெக்னிக் பள்ளி அங்கு ஏற்படுத்து



17th July 1957] [Sri M. Ramachandra Reddiar]

வதாய் இருந்தால் ஐந்து லட்சம் தொகை கொடுப்பதற்கும் தயாராய் இருக்கிறார். ஸ்ரீ ராஜகோபால நாயுடு என்ற அந்த தர்மவானின் உதவியைக் கொண்டு அந்த ஜில்லாவில் ஒரு பாலிடெக்னிக் பள்ளியை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் உதவி செய்ய வேண்டும் என்பதாக நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்போது உயர்தரப் பள்ளியில் பைபர்கேஷன் முறையை ஏற்படுத்த வேண்டுமென்று வந்த யோசனையின்பேரில் மூன்று விதமாக பைபர்கேஷன் செய்தால் நலமாக இருக்குமென்று நினைக்கிறேன். அதனால் பயிற்சிக் கூடங்களைக் குறைக்க ஏதுவாக இருக்கும். நிர்வாகத்துறை, தொழில், துறை, கல்விபோதனாமுறைத் துறை என்பதாக மூன்றாகப் பிரித்து உயர்தரப் பள்ளியிலே நான்காம்பாரம், ஐந்தாம்பாரம், ஆறாம்பாரம் வகுப்புகளில் போதித்துவிட்டால் அதற்கென்று தனியாகப் போதனாப் பயிற்சிகளை ஏற்படுத்த வேண்டியதாக இருக்காது. எஸ்.எஸ்.எல்.ஸி.யும் போதுமான காமன் பரிட்சையாகப் போய்விடும். அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக ஹரிஜன மாணவர்களுக்கு இலவச விடுதிக்கு கட்டிடம் கிடைக்காமல் கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் சர்க்கார் இலவச விடுதி ஏற்படுத்துவதற்கு இடவசதி தேடித் தர வேண்டுமென்பதாக கேட்டுக்கொண்டு எனக்கு பேச அனுமதி அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன்.

**SRI P. U. SHANMUGAM** : கனம் சபாநாயகர் அவர்களே, கல்வி 10-23 a.m.
இலாகா மானியத்தின் மீது பிரேரேபிக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சிலவார்த்தைகள் பேச விரும்புகிறேன். வெட்டுப் பிரேரணையை ஆதரிப்பது மானியக் கோரிக்கைத் தொகையைக் குறைப்பதற்காக இல்லை. தனது உரையில் நிதி அமைச்சர் குறிப்பிட்டதுபோல அதை அதிகமாக்க வேண்டுமென்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

போலீஸ் மானியத்திற்கு அடுத்தாற்போல கல்வி மானியம் விவாதத்திற்கு வந்திருப்பதில் இருந்தே போலீஸ் மானியம் போல கல்வி மானியமும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது புலனாகிறது. போலீசாருக்கு அதிகப் பொறுப்பு இருப்பது போலவே ஆசிரியர்களுக்கும் அதிகமான பொறுப்பு, கடமை இருக்கிறது. சமூகத்தில் ஒழுங்கை நிலைநிறுத்துவதற்கு போலீசார் சிறந்த பணி புரிகிறார்கள் என்றால், வளருகின்ற சமூகத்தை திருத்தி நல்ல ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் வளர்ப்பதற்கு ஆசிரியர்களுடைய பணி மிகவும் முக்கியமாக இருக்கிறது. அவர்களுடைய கடமை, அவர்களுடைய சேவை இவற்றை மனதில் வைத்துக்கொண்டு நாம் அவர்களுக்குச் சம்பளம் கொடுத்து வருகிறோமா என்றால் இல்லை என நிச்சயமாகச் சொல்லிவிட முடியும். ஆனால் நிதி அமைச்சர் அவர்கள் அதற்குப் போதுமான நிதி இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். மேலும் நம்முடைய மாகாணத்தைப் பொறுத்த வரையில் ஏறக்குறைய நாலாயிரம் ஓராசிரியர்கள் பள்ளி தேவையாக இருக்கிறது என்று சொல்லி, முன்பு ஓராசிரியர்களை நியமிக்கும்போது ஒரு மாத பயிற்சி அவர்களுக்கு இருந்தால் போதும் என்று சொல்லி பயிற்சியைக் கொடுத்து ஆசிரியராக நியமித்தார்கள். ஆனால் இப்போது அவர்களும் கட்டாயமாக இரண்டாண்டு பயிற்சி பெற்று வரவேண்டும் என்பதாகச் சொல்லப்படுகிறார்கள். இவ்வளவு காலம் வேலை செய்து வந்த பிறகு இன்றைக்கு அவர்களை இரண்டாண்டு ஆசிரியப் பயிற்சி பெற்று வரத்தான் வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துவது எப்படிப் பொருந்தும் என்று எனக்குப் புரியவில்லை. சென்ற நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஆசிரியர்கள் அதிகமாகத் தேவைப்படுகிறார்கள் என்பதற்காக எமர்ஜென்ஸி பயிற்சி என்று கொடுக்கப்பட்டது போலவே, பல ஆண்டுகளாக ஓராசிரியப் பள்ளியில் பணி செய்தவர்களுக்கு ஆறு மாதப் பயிற்சி கொடுத்தால் போதும் என்றாவது செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கல்வி அமைச்சர் அவர்கள் இன்றைக்குக் கல்வித் துறையில் 11 கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். பணம் அதிகமாகக் கல்வித் துறையிலே செலவிடப்பட்டு

[Sri P. U. Shanmugam] [17th July 1957

வருவதாகச் சொன்னாலும் கூட இன்னும் கல்லாதவர்கள் நம் நாட்டில் அதிகப் பேர்கள் இருப்பதாக அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சுதந்திரம் ஏற்பட்ட பிறகு பத்து ஆண்டு காலத்திற்குள்ளாகக் கட்டாயக் கல்வி அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்று சொல்லியிருந்தாலும் இன்னும் அமுலுக்கு வரவில்லை. 1960-ம் ஆண்டிற்குள்ளாக அந்த நிலைமை ஏற்பட்டுவிடும் என்று உறுதி கூறியிருக்கிறார்கள். அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக கல்வி இலாகா மானியத்தில்மேல் அரசாங்கம் கையாண்டு வருகிற சில கொள்கைகளில் என்ன என்ன திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பொதுவாக உயர்தரப் பாடசாலை தலைமை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இதுகாறும் நகரசபை, ஜில்லாபோர்டு இவற்றின் கீழ் உள்ள உயர்தரப் பாடசாலை தலைமை ஆசிரியர்களுக்கு இருந்துவரும் அதிகாரம் மிகவும் குறைவு, அவர்களுக்கு இன்னும் அதிக அதிகாரத்தைக் கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொண்டே அவர்களுடைய அதிகாரத்தைக் குறைத்து இருக்கிறார்கள்.

இன்று நான்கு பேரைப் பானலில் போட்டுவிட்டு முதலில் ஒன்றாவது பெயரை நியமிக்கவேண்டும். அவர் வரவில்லை என்றால் அடுத்தவரை நியமிக்க வேண்டும் என்று சொல்வதைக்காட்டிலும் பானல் லிஸ்டை அனுப்பிவித்துவிட்டு, அதில் யாரை வேண்டுமானாலும் நியமித்துக்கொள்ளலாம் என்று முன்பு இருந்த அதிகாரத்தை எடுத்துவிட்டார்கள். மீண்டும் முன்போலவே செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து ஆரம்பப்பாடசாலையில் இருந்து தேர்ச்சிபெற்று ஒரு மாணவன் உயர்தரப் பாடசாலைக்கு வருவதாக இருந்தால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஆரம்பப்பாடசாலையில் இருந்து தேர்ச்சி சர்டிபிகேட்டையும், ரெகார்டு ஷீட்டையும் எடுத்துக்கொண்டு ஒரு மாணவன் உயர்தரப் பாடசாலைக்குச் சென்றால் அங்கே மறுபடியும் ஒரு தேர்வு பரீட்சை நடத்துகிறார்கள். அதில் தேறவில்லை என்றால் உடனே மேல் வகுப்பில் எடுத்துக்கொள்ள மறுக்கிறார்கள். ஆரம்பப்பாடசாலையில் வந்து கேட்டால் நீ அந்த வகுப்பில் தேர்ச்சிபெற்றுவிட்டாய் என்று சொல்லுகிறார்கள். இப்படி ஒரு வகுப்புக்கு இரண்டு இடத்தில் பரீட்சை இருப்பதனால் மாணவர்களுக்கு கஷ்டம், படித்த வகுப்பிலேயே இன்னொரு ஆண்டு பணம் இல்லாத காலத்தில் படிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆரம்பப் பாடசாலையிலோ, உயர்தரப் பாடசாலையிலோ எந்த இடத்திலாவது ஒரே இடத்தில் பரீட்சை நடத்தி மேல் வகுப்பில் அவர்களை உயர்தரப் பாடசாலையில் சேர்த்துக்கொள்ள வசதி செய்யவேண்டும். இதைப்பற்றி நகரசபையில் தீர்மானம் போட்டு முன்பு கல்வி அமைச்சருக்கும் அனுப்பிவைத்தோம். அந்த மாதிரியாகச் செய்ய முடியாது. இரண்டு இடத்தில் பரீட்சை அவசியம்தான் என்பதுபோலச் சொல்லிவிட்டார்கள். இதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதாகத் தான் நான் அவர்களை மிக்க பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். ஆரம்பப் பாடசாலையில் பரீட்சை நடத்தினால் அதில் தேர்ச்சி பெற்றவர்களை எல்லாம் உயர்தரப் பாடசாலையில் அந்த வகுப்புக்கு மேல் வகுப்பில் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். இல்லையானால் ஆரம்பப்பாடசாலையில் எந்த வகுப்பில் படிக்கிறானோ அந்த வகுப்புக்கு உரிய பரீட்சையை உயர்தரப் பாடசாலை நடத்தவேண்டும் என்று செய்ய வேண்டும். இரண்டு இடத்தில் பரீட்சை வைப்பது மாணவர்களுக்கு மிகுந்த கஷ்டத்தை விளைவிக்கிறது.

அடுத்தபடியாக தமிழ் ஆசிரியர்களைப்பற்றி ஒரு வார்த்தை. முன்னாள் கல்வி அமைச்சராக இருந்த அவிநாசிலிங்கம் செட்டியார் தமிழ் ஆசிரியர்களுக்குச் செய்த நன்றியை யாரும் மறக்கமாட்டார்கள். அவர் காலத்தில்தான் தமிழாசிரியர்களுக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டது. அவர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்தினார். அதனால் ஊக்கம் அதிகம் ஏற்பட்டது. இருந்தாலும் இன்றைக்கு அவர்களுக்கிடையே உள்ள சம்பள வித்தியாசத்தைக் குறைக்க முன் வரவேண்டும். குறிப்பாக வித்துவான் பாஸ் செய்து,



17th July 1957] [Sri P. U. Shanmugam]

எஸ்.எஸ்.எல். சி-யாகவும் இருந்து டிரெயினிங் படித்தவர்களுக்கு எல்.டி. சம்பளம் கொடுக்கப்படுகிறது, மற்றவர்களுக்கு இல்லை என்று இருக்கும் விதியைத் தளர்த்தி அதிக வித்தியாசம் இல்லாதபடி செய்யவேண்டும் என்பதாக நான் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆரம்பப் பாடசாலையில் படிக்கிற மாணவன், உயர்தரப் பாடசாலையில் மேல் வகுப்பில் படிப்பதற்குறிய தகுதி உடையவனாகக் கருதவேண்டும். தலைமை ஆசிரியர்களுடைய உரிமை பறிபோகாதவாறு இருக்கவேண்டும் என்றெல்லாம் நான் சொல்லும்போது இதை கட்சி நோக்கத்தோடு சொல்லவில்லை. கட்சி நோக்கத்தோடு சொல்வதாகக் கருதாமல் பொதுவான கொள்கை திருத்தமாகக் கொண்டு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் பேசும்போது இதில் காரசாரமான விவாதம் அவசியம் இல்லை என்று குறிப்பிட்டார்கள், காரசாரமான விவாதமாகக் கருதாவிட்டாலும் கொள்கையில் திருத்தம் அவசியம் என்பதை ஒப்புக்கொண்டு இவற்றைச் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக நமது நாட்டில் கல்வித் துறையில் ஏற்பட்டிருக்கும் குறைபாடுகளுக்கு—ஆசிரியர்களுடைய சம்பளக் குறைவும், மாணவர்கள் பள்ளிகளில் சேருவதற்கு இடமில்லாமல் தவிப்பதும் தகுந்த பரிகாரம் செய்வார்கள் என்று நினைக்கிறேன். ஆசிரியர்கள் பயிற்சி பாடசாலைகள் அதிகமாக்க வேண்டுமென்று கேள்வி நேரத்தில் சொன்னபொழுது "Stipend"ஐ நிறுத்தினால்தான் அது சாத்தியம் என்கிற ரீதியில் பதில் அளிக்கப்பட்டது. அப்படிச் செய்யாமல் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களுக்குக் கொடுக்கும்படியான "Stipend"-ஐ நிறுத்திவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பயிற்சிப் பள்ளிகளில் தமிழ் ஆசிரிய மாணவர்களுக்கு இந்தி ஆசிரிய மாணவர்களைவிட குறைந்த அளவில் "Stipend" கொடுக்கப்படுகிறது. இதற்குக் காரணம், மத்திய சர்க்கார் இந்தி ஆசிரிய மாணவர்களுக்கு மான்யம் கொடுப்பதாகவும், அதை அப்படியே கொடுத்துவிடுகிறோம் என்று சொல்லித் தப்பித்துக்கொள்ளலாம். நிதி அமைச்சர் அவர்களுக்கு தமிழ் மீது இருக்கும் பற்றுதல் காரணமாக, நான் அவரை வேண்டிக் கொள்வது என்னவென்றால், தமிழ் ஆசிரியர்களுடைய பரிதாப நிலையை உணர்ந்து அவர்களுக்கும் அதிக Stipend கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

**Sri K. PONNIAN:** கனம் சபாநாயகர் அவர்களே, நிதி மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் கல்வி மான்யத்தின் மீது ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நமது நாடு விடுதலை அடைந்து சொற்ப வருஷங்கள்தான் ஆகியும், நமது ராஜ்யம் கல்வித் துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பது பாராட்டுதற்குரியது. மற்ற பாரம்பரிய முறையில் அரசு செலுத்திவரும் நாடுகளைவிட, நமது ராஜ்யத்தில், நிபுணர்கள், அறிஞர்கள் கூறிய விதம், கல்விக்காக அதிகம் செலவழிக்கப்படுகிறது. அதாவது, மொத்த வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கு செலவழிக்கப்படுகிறது. ஆரம்பப் பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும், மற்றும் கல்லூரிகளிலும் இன்றைக்கு அதிக விஸ்தரிப்பு ஏற்பட்டு, ஏராளமான பையன்களும், பெண்களும் படிக்க வசதி ஏற்பட்டிருப்பதைக் குறித்து பாராட்ட வேண்டியதுதான். 10-32 a.m.

ஆனால், ஆங்காங்கு இருக்கும் சில குறைபாடுகளை சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. இத்துறையில் எவ்வளவு விஸ்தரிப்பு ஏற்பட்டபோதிலும் நாடு விடுதலை அடைவதற்கு முன்பு எவ்வளவு கண்காணிப்பு உத்தியோகஸ்தர்கள் இருந்தார்களோ, அந்த அளவிலேயே இன்றும் இருந்துவருகிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு பள்ளிகள் விஸ்தரிக்கப்படுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு கண்காணிப்பு உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை.

என்னுடைய தொகுதியாகிய வால்பாறையை எடுத்துக்கொள்வோம், வால்பாறை பிரதேசத்தில் 40 50 பள்ளிகள் இருக்கின்றன. இவைகளை கண்காணிப்பதற்கு பொள்ளாச்சியிலிருந்து உத்தியோகஸ்தர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு இங்கு வந்து போக, ஜீப், கார், முதலிய போக்குவரத்து சாதனங்கள் இல்லை. பஸ்களில்தான் வரவேண்டியிருக்கிறது.

[Sri K. Ponnian] [17th July 1957

வந்தாலும் 1–2 தினங்கள்தான் தங்க முடிகிறது. அந்த குறுகிய காலத்திற்குள் கண்காணிப்பை அவசரமாக முடித்துக்கொண்டு திரும்பி விடுகிறார்கள். இதனால், பள்ளிகள் சீர்கெட்டு இருக்கின்றன.

வால்பாறை பிரதேசமானது ஒரு தேயிலைத் தோட்ட பிரதேசம். அங்கே Plantations Labour Act-யின் கீழ் முதலாளிகள் பள்ளிகள் அமைத்து நடத்த வேண்டுமென்று விதிகள் இருக்கிறது. இப்படி பள்ளிகள் வைத்தாலும் Madras Educational Rules க்கு உட்பட்டு வேலை செய்ய சம்மதிப்பதில்லை. பிள்ளைகளுக்கு வேண்டிய விளையாட்டு மைதானங்கள், ஆசிரியர்களுக்கு வீடுகள், மற்றும் பள்ளிகளுக்கு வேண்டிய உபகரணங்கள் எல்லாம் Madras Educational Rules பிரகாரம் அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். வால்பாறை பஞ்சாயத்து போர்டு பள்ளிகளை நடத்த முன்வந்தபோதிலும் மானேஜ்மெண்டார் இதற்கு உடன்பட சம்மதிப்பதில்லை. பஞ்சாயத்து போர்டே தனியாக பள்ளிக் கூடம் நடத்த விரும்பினாலும் அந்த தோட்ட பிரதேசத்தில் இடம் கிடைப்பதில்லை. எங்கெங்கு பள்ளி நடத்த பஞ்சாயத்து போர்டார் முன்வருகிறார்களோ, அங்கெல்லாம் அவர்களுக்கு அதற்கு வேண்டிய நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுக்கவேண்டும்.

1952–ம் வருஷத்திலிருந்து மலைப் பிரதேசங்களில் வேலை செய்யும் உபாத்தியாயர்களுக்கு சர்க்காரே அடிப்படைச் சம்பளத்தில் 50 சத விகிதம் உயர்த்திக் கொடுத்தார்கள். லேபர் டிபார்ட்மெண்டு பள்ளி ஆசிரியர்களுக்கும் மற்ற பஞ்சாயத்து போர்டு பள்ளி ஆசிரியர்களுக்கும் அந்த உயர்ந்த சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. மற்ற ஆசிரியர்களுக்கும் இந்த உயர்ந்த சம்பளம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நேற்று பேசும்போது கனம் கல்வி அமைச்சரவர்கள், இந்த ராஜ்யத்தில் 30 லட்சம் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டியிருக்கிறதென்றும், அப்படிச் செய்தவற்கு இன்னும் ரூபாய் -9 அல்லது 10 கோடி தேவைப்படும் என்றும் சொன்னார்கள். அப்படி 30 லட்சம் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்க வசதியேற்படும் அந்த நல்ல நாளை எதிர்பார்ப்போமாக என்று கூறி அந்த நாள் வரும் என்று கூறி— என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

10-37 a.m. SRIMATHI KOLANTHAI AMMAL : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் கொண்டுவந்திருக்கும் கல்வி மானியக் கோரிக்கையை நான் முழுமனதுடன் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விழைகின்றேன். சென்ற பல ஆண்டுகளாக நம்முடைய ஆசிரிய பெருமக்களுக்கும் மாணவர்களுக்கும் கல்வி அமைச்சரவர்களுடைய நிர்வாகத்தின் கீழ் செய்யப்பட்டிருக்கும் சில நன்மைகளுக்காக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசிரியை என்ற முறையிலும், மாணவர்களுக்காகவும், அந்த நன்மையானது மேலும் பல முறைகளில் நீடிக்க வேண்டும் என்பதற்காகவும் ஒரு சில கருத்துக்களை எடுத்துக் கூற விழைகின்றேன். உயர் நிலைப் பள்ளிகளிலே வேலை செய்யும் தமிழாசிரியர்கள் ஓராண்டு Entrance Test-க்கு படித்துவிட்டு பிறகு நான்கு ஆண்டுகள் கல்லூரிகளில் படித்துவிட்டு ‘புலவர்’ பட்டம் பெறுகிறார்கள். அம்மாதிரிப் பட்டம் பெற்றவர்களுக்கு குறைந்தது S.S.L.C. வகுப்புடன் Pandit Training என்று சொல்லக்கூடிய இன்னொரு ஆண்டு பயிற்சியும் இருந்தால்தான் ஒரு L.T. ஆசிரியருக்குக் கொடுக்கப்படும் சம்பளம் தரப்படும் என்று நிர்வாகத்தில் ஓர் விதியிருக்கிறது. தமிழ் மொழியே ஆட்சி மொழியாகக் கொண்ட இந்த அரசாங்கத்தில், தமிழாசிரியர்களுடைய நிலைமையானது ஆங்கிலேயரின் ஆட்சியில் இருந்ததுபோலவே இருக்கிறது என்கின்ற குறைபாட்டை கனம் அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதோடு அதனை உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டுமென கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழாசிரியர்களுக்கு ரூபாய் 45 என்ற சம்பள Scale-ஐ மாற்றி ஒரு B.A. பட்டதாரிக்கு ஆரம்பத்திலேயே ரூபாய் 65 கொடுப்பதுபோல் அவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்றும், உயர்நிலைப் பள்ளிகளில் வேலை



17th July 1957] [Srimathi Kolanthai Ammal]

செய்கின்ற தமிழாசிரியர்களை இந்த S.S.L.C. Assistant ஆசிரியர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது என்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கல்லூரிகளில் வேலை செய்கின்ற ஆசிரியர்களிலே B.O.L. பட்டம் பெற்றவர்களும், வித்வான் பட்டம் பெற்றவர்களும் வேலை செய்கிறார்கள். இரண்டு பேரும் வாரத்தில் 11 வகுப்புகள் எடுத்துக்கொள்ளுகிறார்கள். 1948–க்கு முன் B.O.L. பட்டம் பெற்றவர்கள் ஆங்கிலம், தமிழ் இரு துறைகளிலும் ஆழ்ந்த படிப்பு பெற்றவர்கள் என்றும் அவர்களுக்கு அதற்குத்தக்க Syllabus வகுக்கப்பட்டிருந்தது என்றும், கூறப்படுகிறது. அதற்குப் பிறகு பட்டம் பெற்றவர்களுக்கு, தமிழில் தக்க புலமை பெற்றும் ஓரளவு ஆங்கிலத்துறையில் அறிவு பெற்றும், அவர்களுக்கு குறைந்த பட்ச சம்பளமாக —வித்வான்களுக்குக் கொடுக்கப்படுவதை விட ஆரம்பத்திலேயே ரூபாய் 50 அதிகமாகக் கொடுக்கப்படுகின்றது என்று சொன்னால், தமிழிலேயே நல்ல நிர்வாகம் நடத்துகின்றோம் என்று சொல்வதிலே ஓர் குறைபாடு இருக்கின்றது என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கவர்ன்மெண்ட் கல்லூரிகளில், மற்ற பகுதிகளில் இல்லாத குறைபாடு தமிழ்ப் பகுதியில் இருக்கிறதென்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மேலும் பல கல்லூரிகளில், பொருளாதாரம், வரலாறு, ஆங்கிலம், ஆகிய பாடங்களைச் சொல்லிக்கொடுக்கும் புரொபஸரின் கீழ் வேலை பார்க்கும் அஸிஸ்டெண்ட் புரபஸர்களுக்குக் கொடுக்கப்படும் அளவு சம்பளம், தமிழ் பாடம் சொல்லிக்கொடுக்கும் பி. ஓ. எல். படித்த அஸிஸ்டெண்ட் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. மற்ற பாடங்கள் சொல்லிக் கொடுக்கும் அஸிஸ்டெண்ட் புரபஸர்களுக்குக் கொடுக்கப்படும் அளவு சம்பளம், தமிழ்ப் பாடம் சொல்லிக் கொடுக்கும் பி. ஓ. எல். பட்டதாரிகளுக்கும் எம். ஏ. பட்டதாரிகளுக்கும் கொடுக்கப்படுவதில்லை. கவர்ன்மெண்ட் கல்லூரிகளிலும் இந்த நிலை இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பி. ஓ. எல். பட்டம் பெற்ற தமிழ் ஆசிரியர்களிடமிருந்தும் எம். ஏ. பட்டம் பெற்ற தமிழ் ஆசிரியர்களிடமிருந்தும் அதிகமான வேலையை வாங்கிக்கொண்டு அவர்களுக்குத் தகுந்த சம்பளம் கொடுக்காதது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிகளில் தமிழ் ஆசிரியர்களை நியமிப்பதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. பி. ஏ. யில் ஐந்தாவது பிரிவில் தமிழைப் படித்திருப்பவர்களை கல்லூரிகளில் லெக்சரர்களாக நியமிக்கிறார்கள். இந்த ஆசிரியர்களுக்கு தமிழில் நல்ல ஆர்வமும் தேர்ச்சியும் இல்லை. ஆகவே இப்படிப்பட்டவர்களை தமிழ் லெக்சரர்களாக நியமிக்கக் கூடாது. அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக எல்லாக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்கவேண்டும். வெகு தூரத்திலிருந்து வரும் ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும். அவர்களுக்கு எல்லாக் கல்லூரிகளும் வீட்டு வசதி அளிக்கவேண்டும். என்ற ஒரு ஏற்பாட்டை கனம் அமைச்சர் அவர்கள் சட்டபூர்வமானதாக ஆக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இப்போது ஏராளமான பேர்கள் பூர்வாங்கக் கல்லூரி வகுப்பில் படிக்கிறார்கள். இது சம்பந்தமாக என் அனுபவத்தில் நான் நேரிடையாகக் கண்ட சில குறைபாடுகளைச் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக, தமிழ் வகுப்பு முடிந்த பிறகு ஆங்கில வகுப்பில் பரீட்சை இருந்தால், 60 சத விகித மாணவர்கள் தான் தமிழ் வகுப்புக்கு வருவார்கள். 40 சத விகித மாணவர்கள் ஆங்கிலப் பரீட்சைக்குப் படிப்பதற்காகப் போய்விடுவார்கள். இப்படிப் படித்து, ஆங்கில பாடத்தில் அதிக மார்க்குகள் வாங்குகிறார்களா என்றால், அதுவும் இல்லை ; 25 சத விகித

மார்க்குகள்தான் ஆங்கிலத்தில் வாங்குகிறார்கள். தமிழ் பாடம் படிப்பதற்கு ஒரு மாணவனுக்கு ஒரு மணி நேரம் வேண்டியிருக்கிறது என்றால், அவனுக்கு ஆங்கில பாடம் படிப்பதற்கு ஆறு மணி நேரம் வேண்டியிருக்கிறது. காரணம், அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பாடத் திட்டம் அதிகமாக இருக்கிறது. இண்டர்மீடியட்டுக்கு வைத்திருந்த பாடத் திட்டத்தை பூர்வாங்கக் கல்லூரி வகுப்பிற்கு வைத்திருக்கிறார்கள். இந்த வகுப்பிற்கு வைக்கப்பட்டிருக்கும் பாடத்திட்டத்தைக் குறைக்க வேண்டும். இதற்காக கல்லூரியில் அனுபவம் பெற்றவர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அதன் மூலம் பாடத்திட்டத்தை எவ்வளவு குறைக்கலாம் என்று ஆராய்ந்து, இந்த வகுப்பிற்கான இப்போதைய பாடத் திட்டத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இன்று ஆரம்பப் பாடசாலைகளில் படித்துவிட்டு உயர்நிலைப் பள்ளிகளுக்கு வரும் மாணவர்களின் கல்வித் தரம் மிகவும் மட்டமாக இருக்கிறது. அவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் நடத்தப்படும் பரீட்சைகளில் தேறுவதில்லை. ஆரம்பப் பாடசாலைகளில் 5-வது வகுப்பு வரை படித்த மாணவனுக்கு நன்றாக எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்கும் அளவிற்காவது ஆரம்பப் பாடசாலைகளில் கல்வியின் தரம் இருக்க வேண்டும். ஆகவே ஆரம்பப் பாடசாலைகளில் கல்வியின் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதையும் அரசாங்கத்தாருக்கு ஞாபகப்படுத்துகின்றேன்.

இப்போது உயர்நிலைப் பள்ளி வகுப்புக்களில் ஹிந்தி மூன்றாவது பாடமாகவும் கட்டாயமல்லாத பாடமாகவும் வைக்கப்பட்டிருக்கிறது. கட்டாயமில்லாத இந்த ஹிந்தி பாடத்தை நீக்கிவிட்டு, அரசியலில் ஈடுபட விரும்புபவர்களும் ஹிந்தியைப் படிக்கவேண்டும் என்று ஆர்வம் உள்ளவர்களும் தாங்களாக அதைக் கற்றுக்கொள்ளுதவற்கு ஏற்பாடு செய்யலாம். பள்ளிக்கூடப் பாடங்களுள் ஹிந்தியையும் வைத்தால் ஆங்கிலம், தமிழ், ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளைப் படிப்பதற்கு மாணவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதனால் பல மாணவர்களின் உடல் நிலை கெடுகிறது. ஆகவே உயர்நிலை வகுப்புக்களில் வைக்கப்பட்டுள்ள ஹிந்திப் பாடத்தை நீக்கிவிடவேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் கல்வித் திட்டம் வெற்றி பெறாமல் இருக்கிறது. பணமும் படிப்பும் இல்லாத பல விதவைகள் நாட்டில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் முதியோர் கல்வி அளித்து அவர்களுக்குத் தற்காப்புக் கொடுத்தால் நல்லது என்று சொல்லிக் கொள்கிறேன்.

பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்கு மத்தியான உணவு கொடுக்கப்படுவதை நேரில் பார்வையிடுவதற்காக கனம் அமைச்சரவர்கள் அதிக சிரமம் எடுத்துக்கொண்டு சுற்றுப் பிரயாணம் செய்வதாகத் தெரிகிறது. மத்தியான உணவு கொடுப்பது சம்பந்தமாகவும் யோசனை சொல்ல நான் விழைகின்றேன். மத்தியான உணவு கொடுப்பதற்கு அரசாங்கமும் உதவுகிறது. பழந் தமிழ் நாட்டில் நன்மக்களுக்கு விருதுகளும் சிறந்த பட்டங்களும் கொடுக்கப்பட்டு வந்ததுபோல், மத்தியான உணவிற்கு நிதி உதவி அளிக்கும் செல்வந்தர்களுக்கு விருதுகளும் பட்டங்களும் கொடுத்தால் பல செல்வந்தர்கள் அந்த உதவியை அளிக்க முன்வருவார்கள். கிராமத்தில் வாழ்கிற நான் பல செல்வந்தர்கள் ஏழைகளுக்கு உதவுவதை அனுபவ ரீதியாகப் பார்த்திருப்பதால் இந்த யோசனையைச் சொல்கிறேன். இதை கனம் அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துச் தேர்ச்சிபெற்ற புலவர்களுக்கும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் படித்துத் தேர்ச்சிபெற்ற புலவர்களுக்கும் சட்ட ரீதியாக ஒரே மாதிரியான மதிப்புக் கொடுக்கப்பட்டிருந்தாலும், நடைமுறையில் பல கல்லூரிகளில் அப்படி ஒரே மதிப்புக் கொடுக்கப்படுவதில்லை; சலுகைகளில் இவர்களிடையே பாரபட்சம் காட்டப்படுகிறது. இதை நான் ஆதார பூர்வமாகக் காட்ட முடியும். ஆகவே சென்னைப் பல்கலைக் கழகப் புலவர்களுக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் புலவர்களுக்கும் சமத்துவம் அளிக்கும் வகையில் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.





கல்வி மானியக் கோரிக்கையை முழு மனதுடன் ஆதரிப்பதுடன், கல்வித் துறையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எவ்வெத் துறைகளில் சலுகைகள் அளிக்க முடியுமோ அவ்வத் துறைகளில் சலுகைகள் அளிக்க முயற்சிக்க வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI T. S. RAMASWAMY PILLAI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டு பிரேரபணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். முதன் முதலில், ஏழை மாணவர்களுக்கு மத்தியான உணவு அளிப்பதற்காக அரசாங்கத்தாரை நான் பாராட்டுகிறேன். மேலும், மூன்றாவது பாரம் வரையில் ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்விச் சலுகை அளிப்பதற்கு முன்வந்திருப்பது குறித்தும் அரசாங்கத்தாரைப் பாராட்டுகிறேன். 10–47 a.m.

இதே நேரத்தில் கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த அளவில், அங்குள்ள எங்களுடைய நிலைமையைப்பற்றிக் கூற விரும்புகிறேன். பத்து வருஷங்களுக்கு முன்பே 8-வது வகுப்பு வரையில் எல்லா மாணவர்களுக்கும் அவர்களுடைய பெற்றோர்களின் எந்த வருமானத்தையும் கவனிக்காமல் கட்டாய இலவசக் கல்வி அளிக்கும் முறையும், 8-வது வகுப்பு வரையில் ஏழை மாணவர்களுக்கு இலவச உணவு அளிக்கும் முறையும் இருந்து வந்த ராஜ்யத்திலிருந்து இந்த ராஜ்யத்திற்கு நாங்கள் வந்திருக்கிறோம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட ஆசைபடுகிறேன். அங்கே கட்டாயக் கல்வி ஆரம்பித்து 16 வருஷங்கள் ஆகியிருக்கின்றன என்று நினைக்கிறேன். இப்போது கன்னியாகுமரி ஜில்லாவில் 14 வயது முதல் 21 வயது வரை உள்ள யாரும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருக்க மாட்டார்கள் என்று சொல்லலாம். அங்கே பள்ளி வயது வந்த பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பாவிட்டால் அதற்காகப் பெற்றோர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.

கனம் நிதி அமைச்சர் அவர்கள் இதற்கு முன்பு பேசும்போது, இங்கே இருப்பதை விட கேரளாவில் வரிச் சுமை அதிகம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், உண்மையில் "இங்கே வருவதற்கு முன்பு நமக்கு வரிச் சுமை குறைவாக இருந்தது. சென்னைக்கு வந்த பிறகு—தாய் நாட்டிற்கு வந்த பிறகு—வரிச் சுமை அதிகமாக இருக்கிறது. இங்கே 'வெக்கில்ஸ்' வரி, ரெஜிஸ்ட்ரேஷன் வரி, உணவு தானியங்கள் மீது வரி, நிலங்களுக்கு வரி என்று ஏராளமாக வரிகள் இருக்கின்றன. ஆகவே இங்கே வந்ததும் நமது வரிச் சுமை அதிகமாகி இருக்கிறது," என்றுதான் கன்னியாகுமரி மக்கள் நினைக்கிறார்கள். அப்படி இருந்தும், கேரளாவில் இலவசக் கல்வி அளிக்கப்படும் வகுப்புக்களின் எண்ணிக்கையை வருஷாவருஷம் ஒவ்வொரு வகுப்பாக உயர்த்தி 8-வது வகுப்பு வரையில் இலவசக் கல்வி அளிக்கும் நிலையை அடைந்திருக்கிறார்கள். இப்போது அங்கே 9-வது வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. அதே மாதிரி, இந்த ராஜ்யத்திலும் சீக்கிரம் 8-வது வகுப்பு வரை இலவசக் கல்வி அளிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை இந்த சபையின்முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமில்லாமல் எல்லோருக்கும் 14 வயது வரையில் கட்டாய இலவசக் கல்வி அளிக்கும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பது அரசியல் சட்டத்தில் 'டிரெக்டிவ் பிரின்ஸிபல்ஸ் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் ஆகும்.

அரசியல் சட்டத்தில் 45-வது விதி கூறுவது பின்வருமாறு :—

"The State shall endeavour to provide, within a period of 10 years of the commencement of this Constitution, for free and compulsory education for all children until they complete the age of fourteen years."

[Sri T. S. Ramaswamy Pillai] 17th July 1957

14 வயது வரை இலவசக் கல்வி கொடுக்க வேண்டும். இன்னும் 10 வருஷங்களில் அதாவது 1960 ஆம் வருஷத்திற்குள் இந்த ராஜ்ய முழுவதிலும் இலவசக் கல்வி கொடுத்தாக வேண்டும். நான் 'கட்டாயமாக' என்ற வார்த்தையை வற்புறுத்திச் சொல்ல விரும்புகின்றேன். ஆனால் அமைச்சர் 'முயற்சி' என்ற வார்த்தையை வற்புறுத்திச் சொல்லுகிறார்கள். உண்மையாக முயற்சித்தால் நிச்சயமாக முடியும் என்று நம்புகிறேன். திருவாங்கூர் ராஜ்யத்தில், கேரளத்தில் இது முடிகிறது என்றால் இங்கு ஏன் அது முடியக் கூடாது. இன்று அங்கே 9-வது பாரம் வரை இந்தச் சலுகையை கொடுத்திருக்கிறார்கள். அடுத்த வருஷம் எஸ்.எஸ்.எல்.சி அல்லது 'ஸ்கூல் பைனல்' வரை நிச்சயமாக கொடுப்பார்கள். எந்த ராஜ்யத்தையும் விட கேரளத்தில்தான் சீக்கிரமாக இவைகள் செய்யப்பட்டு வருகின்றன. கேரளத்தில் இதைச் செய்யும்போது இங்கே ஏன் செய்யக்கூடாது. கல்வி இலாகாவுக்கு பட்ஜெட்டில் எவ்வளவு தொகை இங்கு ஒதுக்கப்படுகிறதோ, ஏகதேசமாக அதே விகிதத்தில்தான் கேரளத்திலும் ஒதுக்கப்படுகிறது. அங்கு இதைச் செய்யும்போது இங்கே ஏன் செய்ய முடியவில்லை என்று நான் அறிய ஆசைப்படுகிறேன். மேலும் அங்கு வரிகள் குறைவு. இந்த வரிகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டு போனால் அதிக நேரமாகும். அங்கு உத்தியோகஸ்தர்களுக்கு சம்பள விகிதமும் அதிகம். அப்படி இருந்தும் அங்கே இதைச் செய்ய முடிகிறது. ஆகவே இதைப் பற்றி சர்க்கார் தரப்பிலுள்ள நண்பர்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கன்னியாகுமரி ஜில்லாவில் 516 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இந்தப் பள்ளிக்கூடங்கள் இங்கு சேர்ந்த பின்னும், கேரள ராஜ்யத்தில் இருந்த பொழுது அவை எப்படி நடத்தப்பட்டனவோ அதே மாதிரி நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். உபாத்தியாயர்கள் உற்சாகத்தோடு வேலை செய்தால்தான் கல்வியின் தரம் உயர்ந்து இருக்கும்.

கொல்லங்கோடு, செங்கோட்டை, ஆறல்வாய்மொழி, பூதப்பாண்டி போன்ற இடங்களில் தலைமை ஆசிரியர் இடம் காலியாக இருக்கிறது. கேரளாவில் இருக்கும்பொழுது அவர்களுக்கு 300 முதல் 400 ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட்டது. அதே மாதிரி இப்போது சம்பளம் கொடுக்கப்பட வில்லை. பஞ்சப்படி உயர்வும், இங்கிரிமெண்டும் ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட வில்லை. இவைகளினால் மனக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"ஹையர் டெக்னலாஜிகல் இன்ஸ்டிடியூட்" ஒன்றை தென் பிராந்தியத்தில் ஏற்படுத்தப்போவதைப் பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியுறுகிறேன். "ஸ்கூல் பைனல்," வரை பள்ளிகளில் பாடங்களை தமிழ் மொழியில் படித்துவிட்டு கல்லூரியில் ஆங்கிலத்தில் பாடங்களைப் படிப்பதில் மாணவர்கள் மிகவும் சங்கடப்படுகிறார்கள். அல்லற் படுகிறார்கள். தமிழில் இலக்கியம் வளர்ந்தாலும், கலைச் சொற்கள் இன்னும் பழக்கத்தில் வரவில்லை. அந்தக் கலைச் சொற்கள் நம்முடைய பழக்கத்தில் வந்தால் அவை நம்முடைய ரத்தத்தில் ஊறிவிடும். அந்த முறையில் வரவேண்டும் என்றால் நாடு செழிக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கை செழித்தாலன்றி அத்தனை கலைச் சொற்களும் "டெக்னிகல் வோர்ட்ஸ்" அம்மாதிரி வர முடியாது என்பது தான் என்னுடைய தாழ்மையான கருத்து.

ஆங்கில மொழியிலிருந்து தாய் மொழியை போதனு மொழியாக மாற்றுவதைக் குறித்து நான் பாராட்டுகிறேன். இதில் பல கஷ்டங்கள் இருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் உயர்தரக் கல்வி, "ஹையர் எஜுகேஷன்" "பி எச்.டி." போன்ற கல்வித் துறைகளில் ஆங்கிலம் உபயோகிப்பது அத்தியாவசியமாக இருக்கிறது. இதை மாற்றும்போது ஆங்கிலத்திலும், தமிழிலும், இந்த இரண்டிலும், இந்தச் சொற்களை உபயோகித்தால் உயர் நிலை ஆராய்ச்சி படிப்புக்கு வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

10-55 a.m. **SRI V. K. KOTHANDARAMAN :** கனம் சபா நாயகர் அவர்களே, கல்வி மான்யத்தின்பேரில் நமது கல்வி அமைச்சர் அவர்கள் மிகவும் தெளிவாகவும் புள்ளி விவரங்களுடனும் எடுத்துச் சொன்னார்கள். அதற்கு



17th July 1957] [Sri V. K. Kothandaraman]

உதாரணமாக ஒரு கோபுரத்தையும் எடுத்துக்காட்டினார்கள். ஆரம்பக் கல்வியிலிருந்து காலேஜ் கல்வி வரை இருக்கும் நிலையை ஒரு கோபுரத்திற்கு ஒப்பிட்டார்கள். இது வரையிலும் அடி கோபுரத்திலும் மத்திய கோபுரத்திலும் கவனம் செலுத்தி வந்தோம். உச்சிக் கோபுரத்தை அண்ணாந்துப் பார்த்தால் கழுத்து வலிக்குமோ என்ற நிலைமை மாறி, உச்சிக் கோபுரத்தை எட்டிப் பார்த்து விடுவதற்கு தைரியமாக முன் வந்திருக்கும் கல்வி அமைச்சரை பாராட்ட வேண்டியது அவசியமாகும். இன்றைக்கு காலேஜில் ஒரு மாணவன் சேர வேண்டும் என்றால் பல விதமான கஷ்டங்கள் இருக்கின்றன. எஸ்.எஸ்.எல்.ஸி. தேறிய மாணவனிடத்தில் "Eligible for College Course" என்று ஒரு சர்டிபிகேட் இருக்கும். ஆனால் அவன் காலேஜுக்குப் போகக் கூடிய காலத்தில் அங்கே 'இன்டர்வியூ' இருக்கும். மார்க்குகள் யார் அதிகமாக வாங்கியிருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் இடம் கிடைக்கும். சில சமயம் 50 மார்க்குகள் வாங்கியிருக்கும் மாணவன் கூட இன்றைக்கு இருக்கும் நிலையில் காலேஜில் சேர்ந்து படிக்க முடியாது. அதற்கு காலேஜ் அமைப்பு முன்பும் இப்பொழுதும் எப்படி இருக்கிறதென்பதைப் பார்த்தால் தெரியும். வெள்ளையர் காலத்தில் அவர்கள் ஆதிக்கத்தை வைத்துக் கொண்டிருப்பதற்காக அமைக்கப்பட்டது. இன்னும் பிரைவேட் காலேஜ்களில் மெஜாரிட்டி கிறிஸ்துவ காலேஜ்களாக இருக்கின்றன. இந்தக் காலேஜ்களில் கிறிஸ்தவர்களுக்கு சம்பளம் அதிகம். ஹிந்துக்களுக்கு சம்பளம் குறைவு. கிறிஸ்தவர்கள் நடத்தக்கூடிய காலேஜ்களில், கிறிஸ்தவரல்லாதவர்களுக்கு இடம் பெற முடிவதில்லை. எந்த அளவுக்கு இவையெல்லாம் இருந்துக்கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே, இது போன்ற ஒரு நிலைமையைப் பார்க்கும்போது காலேஜ்களில் இடம் கிடைக்க வேண்டும் என்றால், வசதி படைத்தவர்களுக்குத்தான் இடம் கிடைக்கிறதே ஒழிய மற்றபடி சாதாரண மக்களுக்கு இடம் கிடைக்கக் கூடிய ஒரு நிலைமை கிடையாது.

இந்த ஆண்டில் சர்வகலாசாலைப் படிப்பில் பி.ஏ. பரிட்சையில் தேறியவர்களின் லிஸ்டைப் பார்த்தால் அண்ணாமலை சர்வ கலாசாலையில் 46 சத விகிதம் பாஸ் செய்ததாக தெரிகிறது. ஆனால் சென்னை சர்வ கலாசாலையில் இம்மாதிரி லிஸ்டு வெளியிடுவது இல்லை. இருந்தபோதிலும், எனக்குத் தெரிந்த வரையில் 43 சத விகிதம் தான் பாஸ் செய்ததாக தெரிகிறது. இதற்கு காரணம் என்ன என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இன்றைக்கு சர்வ கலாசாலையில் செனட் என்கிற ஒரு சபையும், ஸிண்டிகேட் என்கிற ஒரு சபையும், இருக்கிறது. இந்த செனட் சபை ஸிண்டிகேட் சபை அங்கத்தினர்களை தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த ஸிண்டிகேட் சபை "எக்ஸாமினர்களை" தேர்ந்தெடுக்கிறார்கள். இந்த "எக்ஸாமினர்களுக்கு" 600 விடைத் தாள்களைத் கொடுத்து 21 நாட்களில் திருத்திக் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்த குறுகிய காலமான 21 நாட்களில் அவர்களால் இந்த விடைத் தாள்களைத் திருத்த முடிவது இல்லை. அந்தக் காரணத்தினால் இவைகளை சரிவர திருத்தக் கூடிய நிலைமையில்லை. இவர்களுக்கு 100 விடைத்தாள்களைக் கொடுத்தால் சரியானபடி திருத்தக் கூடிய நிலைமை இருக்க முடியும். அதிலும் நமது சென்னை சர்வகலாசாலை பரீட்சைகளில் "மெஜாரிட்டி" பேர்கள் பெயில் ஆகிறார்கள் என்பது நமக்கு தெரிந்த விஷயம். எவ்வளவோ கஷ்டப்பட்டு காலேஜில் சேர்ந்து படிப்பவர்கள் ஏன் பெயில் ஆகிறார்கள் என்ற காரணத்தைப் பார்க்கும்போது இப்பொழுது விடைத் தாள்களைத் திருத்தக்கூடிய முறையின் ஒரு அமைப்புதான் என்று தோன்றுகிறது. அதே போன்று விடைத்தாள்களை சரி வர திருத்தப்பட வில்லை, "ரி எக்ஸாமின்" செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டால் அதை அனுமதிக்க முடியாத ஒரு நிலைமை தற்பொழுது இருக்கிறது.

இன்றைக்கு சாதாரணமாக உபாத்தியாயர்களைத் தவிர மற்ற உத்தியோகங்களில் இருக்கக்கூடியவர்கள் இது போன்று காலேஜில் சேர்ந்து பரீக்ஷையில் ஈடு படுவதை அனுமதிப்பதில்லை என்றும் தெரியவருகிறது. இதற்கெல்லாம் காரணம் இந்த "சிண்டிகேட்" சபையில் எடுக்கக்கூடிய முடிவுதான். அதில் சர்க்கார் தலையிட முடியாது, சர்க்கார் அந்த

முடிவுகளைப் பற்றி கேட்க முடியாது என்ற ஒரு நிலைமை இருப்பதாகத் தெரியவருகிறது. நாம் கேள்விப்படுகிறோம், ஆந்திராவிலே இம்மாதிரி உத்தியோகத்தில் இருக்கக்கூடியவர்கள் இது போன்று பரீக்ஷையிலே ஈடுபட்டு எழுதலாம் என்று. அதே போன்று அவர்கள் நல்ல முறையிலே பரீக்ஷை தாள்களை திருத்துவதற்கு வாய்ப்புகளெல்லாம் அங்கே இருக்கின்றன என்பதையும் நாம் பார்க்கிறோம். ஆந்திராவிலே இது போன்று முறை இருக்கும்பொழுது, இங்கே ஏன் இருக்கக்கூடாது? இப்பொழுது கையாளப்படும் முறைகளை நல்ல முறையிலே திருத்திக்கொள்வதற்கு முயற்சி செய்யவேண்டும். ஆயிரக்கணக்கான பெருவாரியான மாணவர்கள் "பைல்" ஆகிறார்கள். அதனால், அவர்கள் மனச்சோர்வு அடைந்து, இன்றைய தினம் அவர்கள் பணம் செலவழித்தாலும் படிக்கக்கூடிய கஷ்டம் மிக மிக அதிகம். உடனே அரசாங்கம் இது போன்ற விஷயங்களில் பரிபூரணமாக கவனம் செலுத்த வேண்டும். சர்க்கார் இதற்காக ரூபாய் ஒரு கோடி 34 லட்சம் பணம் கொடுத்தும்கூட, இதிலே சர்க்கார் தலையிட்டு ஆலோசனை சொல்லுவதற்கோ, அல்லது கையாளப்படும் முறைகளை திருத்துவதற்கோ, அந்த அளவுக்கு நிலைமை இல்லை. அப்படியென்றால் சர்க்கார் பணம் எதற்காக கொடுக்க வேண்டுமென்று எனக்குப் புரியவில்லை. இது போன்ற நிலைமை ஆந்திராவிலே இல்லை. ஆந்திராவிலே உதாரணமாக எடுத்துக் காட்டியிருக்கிறேன். ஏனென்றால் கேரளாவை உதாரணமாக காட்டினால், கல்வி அமைச்சர் பயப்படுகிறார், சீறி விழுகிறார். அதனால் தான் ஆந்திராவை உதாரணமாகக் காட்ட முன் வந்திருக்கிறேன்.

"Tutorial College-ல் படிக்கக்கூடியவர்களுக்கு இந்த "செனட்டிலே" இடம் கிடையாது. அதே போன்று மற்றும் தனியாக படிக்கக்கூடியவர்களைப்பற்றி சொல்ல வேண்டியது அவசியமே கிடையாது. இந்த "செனட்டில்" யார் அங்கத்தினர்களாக இருக்கிறார்களோ, அவர்களுடைய காலேஜில் படிக்கக்கூடிய மாணவர்கள் அதிகப்படியாக படித்ததாக "லிஸ்டில்" வரவேண்டும், நல்ல பெயர் வரவேண்டுமென்கிற நிலைமையிலே இருந்து வருகிறது என்பதையும் நாம் கேள்விப்படுகிறோம். இது விஷயத்திலே அரசாங்கம் பரிபூரணமாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சமீபத்திலே 100 ஆண்டு விழா வரப்போகிறது. இந்த சந்தர்ப்பத்தை ஒட்டியாவது "பைல்" ஆகியிருக்கக்கூடிய ஆயிரம் மாணவர்களுக்கு சலுகை கொடுக்கக்கூடிய தன்மையிலே ஒரு இரண்டாவது ஜாபிதா (second pass list) பிரசுரிக்கப்பட வேண்டும். கட்சியை பலப்படுத்துவதற்காக வேண்டி இம்மாதிரி சொல்லுவதாக நினைக்கக்கூடாது. அமைச்சர் அவர்கள் உண்மையிலேயே மாணவர்கள் எவ்வளவு கஷ்டத்துக்கு உள்ளாகிறார்கள் என்பதை உணர்ந்து இதுபோன்று செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மாத்திரமல்ல. இப்பொழுது இருக்கும் பரீக்ஷை முறையையும் மாற்றி அமைக்க வேண்டும். இதை நான் மட்டும் சொல்லவில்லை. மதுரையில் சர்வகலாசாலை மான்யம் கமிஷன் வந்தபொழுது ஸ்ரீ. ஸி. டி. தேஷ்முக் போன்றவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சென்ற வாரம் எல்லா பத்திரிகைகளிலும் வந்திருந்தது. அதையும் பார்த்தோம். நம் சர்க்கார் இப்பொழுது புஸ்தகங்களை கையில் கொடுத்து பரீக்ஷை எழுதும் முறையில் சில "டெஸ்டுகள்" நடத்துகிறார்கள். "ரெவின்யூ அக்கவுண்டு டெஸ்டுகள்" போன்றவை அம்மாதிரி முறையில்தான் நடத்தப்படுகின்றன. பல பெரியோர்களும் இம்மாதிரி சொல்லியிருக்கிறார்கள். இதே போன்று காலேஜ் மாணவர்களிடம் எல்லா புஸ்தகங்களையும் கொடுத்து பரீக்ஷை எழுதச் சொன்னால் நலமாக இருக்கும். காலேஜ் மாணவர்கள் எல்லா புஸ்தகங்களையும் படித்து விட்டு பரீக்ஷை எழுத வேண்டுமென்று சொன்னால், திறமையாக படிப்பவர்கள்கூட, "பைல்" ஆகி விடுகிறார்கள். என்ன கேள்வி வருமோ என்று பயந்து "confusion" ஆகி திறமையாகப் படித்திருந்தாலும்கூட அந்த நேரத்தில் பல மாணவர்கள் "பைல்" ஆகிவிடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஸ்ரீ ஸி. டி. தேஷ்முக் அவர்கள் சொன்ன மாதிரி இந்த பரீக்ஷை முறையை மாற்றி அமைக்க வேண்டும். 3, 4 வருஷங்களுக்கு முன்பே கனம் லக்ஷ்மணசுவாமி



முதலியார் கூட இம்மாதிரி சொல்லியிருந்தாலும் கூட, "செனட்" சபையில் பெருவாரியான முடிவை மீறக்கூடிய நிலைமை இல்லாததால் அவர்களுடைய எண்ணத்தை அங்கே அமுலில் கொண்டு வர முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. ஆரம்பக் கல்வியில் எந்த அளவுக்கு கவனம் செலுத்துகிறோமோ அந்த அளவுக்கு காலேஜ் படிப்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று நமது கல்வி அமைச்சர் அவர்கள் இப்பொழுது நமது முன்னிலையில் சொல்லியாதாகத் தெரிகிறது. அது போன்று பரிபூரணமாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வருமானம் இருப்பவர்களின் குழந்தைகளுக்கு இப்பொழுது இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இதை குறைந்தபட்சம் 200 ரூபாயாக உயர்த்த வேண்டும். சர்க்கார் சிப்பந்திகளும் மத்தியதர வர்க்கத்தை சேர்ந்தவர்களும் 200 ரூபாயில் கூட சென்னை நகரத்திலும் சரி, மற்ற நகரங்களிலும் சரி, வாழ்க்கையை நடத்த முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு 3, 4 பிள்ளைகள் இருக்கின்றன. அவர்கள் எப்படி எல்லா பிள்ளைகளையும் படிக்க வைக்க முடியும்? அவர்கள் படிக்க வைக்க முடியாத நிலைமையில்தான் இருக்கிறார்கள். ஆகவே குறைந்தபட்சமாக மாதம் 200 ரூபாய் வரை வருமானம் பெறுபவர்களின் பிள்ளைகளுக்கும் கூட இலவசக் கல்வி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடுகூட ஓராசிரியர் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு குறைந்தபட்சம் 6 மாதம் பயிற்சி கொடுத்து அவர்களுடைய குடும்பத்துக்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

11-06 a.m.

* **Sri C. N. ANNADURAI:** சட்டமன்ற தலைவர் அவர்களே, கல்வி மான்யத்திற்காக வெட்டுப் பிரேரணையில் நான் கலந்து கொள்வதில் நிதி அமைச்சர் அவர்கள், கல்வி அமைச்சர் அவர்கள், ஏற்கனவே எடுத்துக் காட்டியதுபோல், இது பெயருக்குத் தான் வெட்டே தவிர, அதிகமான அளவில் கல்வித் தலைப்புக்கு பணம் ஒதுக்கப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்துதவற்கு இந்த முறையிலே நடக்க எதிர்க்கட்சியிலுள்ள நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். இதிலே நாங்கள் காட்டக் கூடிய குறைபாடுகளை எடுத்து விளக்குவதற்கு முன்னால் நான் ஒன்றை தெளிவாக தங்கள் மூலமாக இந்தச் சபைக்கு தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். வேறு எந்த அமைச்சர் அவையை விட இந்த அமைச்சர் அவையிடத்தில் நாங்களும் நாடும் மிக அதிகமாக எதிர்பார்க்கிறோம் என்பதை அமைச்சர் அவையும் அமைச்சர் அவை நடத்துவதற்குரிய கட்சியும் பெருமைக்குரியதாக எடுத்துக்கொள்ள வேண்டும், எதற்கு எடுத்தாலும், "நம்மால் வெறுத்து ஒதுக்கப்பட்ட, நல்லாட்சிக்கு உகந்தது அல்ல என்று ஒரு காலத்திலே கருதப்பட்ட, வெள்ளையர் ஆட்சி காலத்தை விட நாம் இப்பொழுது எவ்வளவோ முன்னேறியிருக்கிறோம்" என்ற வாதத்தை இந்தச் சபையிலே அடிக்கடி எடுத்துச் சொல்லி, வெள்ளையர் ஆட்சி காலத்திலே நடை பெற்றது அத்தனையும் சரி என்று இந்தப் பகுதியில் உள்ளவர்கள் சொல்லியதாக நீண்ட நாட்களாக குற்றம் சாட்டுவது உடனடியாக பிரச்னையை நழுவி விடுவதற்கு பயன்படுமே தவிர, பிரச்னையை உண்மையாக அறிந்து கொள்ளுவதற்கு நிச்சயமாக பயன்படாது. ஆகையினால் தான் நாட்டை ஆளுகிற இன்றைய அமைச்சர் அவை உண்மையிலேயே நாட்டு மக்களுக்கு மிக அதிகமாகச் செய்ய கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பது மாத்திரமல்ல, அதற்கேற்ற திறமை அவர்களிடத்திலே இருக்கிறது என்று நாட்டு மக்கள் நிச்சயமாக நம்புகிறோம் என்ற காரணத்தினால்தான், செய்யப்படுகின்ற பல காரியங்களில் குறைபாடுகளை எடுத்துக் காட்டி, இன்னும் கொஞ்சம் நன்றாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். உண்மையிலேயே இன்றைய தினம் இருக்கிற அரசியல் சூழ்நிலையில் இந்த அமைச்சர் அவையை விட, வேறு ஒரு அமைச்சர் அவை இதே கட்சியாலே நிறுவப்பட்டாலும் கூட, அந்த அவையினால் அதிகமான அளவுக்கு நன்மை கிடைக்கும் என்று நாங்கள் யாரும் எண்ணி ஏமாந்து கொண்டில்லை. ஆகை...

யினால் நான் சொல்லுகின்ற சிலபல குறைபாடுகள் மேலும் அதிகமான அளவுக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்பதற்காகவே தவிர, அதிகமாக குற்றங் குறைகளை எடுத்துக் காட்டுவதற்காக அல்ல.

நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இந்த மான்யக் கோரிக்கையை இந்தச் சபை முன்னிலையில் வைத்த நேரத்திலே 1933–34–லிருந்து 1957–58 வரையில் எப்படி படிப்படியாக கல்விக்கு ஒதுக்கப்பட்ட மான்யம் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது என்பதை மிக ஆர்வத்தோடு, மற்றவர்களும் ஆர்வம் பெற வேண்டுமென்ற கருத்தோடு, மிக அழகாக எடுத்துச் சொன்னார்கள். அதே நேரத்திலே அதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் எப்படி கல்வி மான்யத்திற்கு தொகை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகிறதோ, அதுபோல 1933–34–ல் கொடுக்கப்பட்ட வரித் தொகையை விட 1957–58–ல் மக்கள் கொடுக்கும் வரித் தொகையும் அதிகமான அளவுக்கு வளர்ந்து கொண்டே போவதை நினைவுக்குக் கொண்டு வருகிறார்கள். அதுமாத்திரமல்ல. அன்றைய தினம் ஆரம்பப் பள்ளியிலே படிக்கின்ற ஒரு பிள்ளைக்கு செலவிடப்படும் பணம் முதல் முதலிலே ரூபாய் 9–ல் துவங்கி, இன்றையதினம் " **together with the contingent cost of pension, the cost per pupil per annum must now be somewhere near thirty rupees,** " அதாவது ஆரம்பப் பள்ளியில் படிக்கும் ஒரு மாணவனுக்கு ரூபாய் 30 செலவழிக்கிறோம் என்று பெருமைக்குரியதாக அவர்கள் சொன்னார்கள். இந்த ஆற்றல் பெருமைக் குரியதுதான் என்றாலும், 1933–34–ல் 9 ரூபாயாக இருந்தது, இன்றைய தினம் அந்த ரூபாயின் மதிப்பு 4 மடங்கு அதிகமாகி யிருக்கிறது, பொருளாதார தத்துவப்படி 4 மடங்கு அதிகமாயிருக்கிறது. ஆகையினால் இப்பொழுது ரூபாய் 30 செலவிடப் படுவது அதிகமான அளவுக்கு பெருமை படக்கூடியதல்ல. கராச்சி தீர்மானத்தில் கூட அமைச்சர்களுக்கு ரூபாய் 500 சம்பளம் தரப்பட வேண்டும் என்று இருப்பினும் இப்போது வளர்ந்துள்ள பொருளாதார சூழ்நிலை மாற்றத்துக்கு ஏற்ப அதிகச் சம்பளம் அளிக்கப்படுவது நியாயம் தான் என்று இங்குள்ளவர்கள் மட்டுமல்ல, பாரத நாட்டு பிரதமருங்கூட வாதாடியிருக்கிறார்கள். ஆகையினால் 1933–34-ம் ஆண்டில் 9 ரூபாய் செலவழித்தார்கள், இப்போது 30 ரூபாய் செலவழிக்கிறார்கள் என்று சொல்லுவது உண்மையிலேயே அது பாராட்டுவதற்குரிய விஷயமல்ல, ஏதோ முயற்சிக்கின்றோம் என்ற வகையில் அதை எடுத்துக்கொள்ளலாமே தவிர அதிகமான அளவுக்கு பெருமைப் பட்டு கொள்வதற்கு முடியாது. 1933–34-ல் இருந்த நிலைமை, 1957–58-ல் இருக்கின்ற நிலைமை வேறு. நாட்டு மக்கள் ஆண்டுக்கு ஆண்டு வரிகள் அதிகப்படியாகவே கொடுத்துக்கொண்டிருக்கின்றனர். எவ்வளவு இருந்தாலும் கல்விக்காக இந்த வரிகளைப் போடுகிறோம் என்றால் அந்த வகையில் நாங்கள் உண்மையில் மகிழ்ச்சியுறுகின்றோம், பாராட்டுகின்றோம். இன்னும் இந்த அமைச்சரவையில் நாம் எதிர்ப்பார்ப்பதுபோல வெள்ளைக்கார அமைச்சரவையில் நாம் எதிர்ப்பார்க்கமுடியாது, எதிர்ப்பார்க்கவும் கூடாது. வெள்ளைக்கார ஆட்சி காலத்தில் நாம் எல்லாம் படித்தால் வெள்ளைக்கார ஆட்சிக்கு நஷ்டம், ஆனால் இப்போழுது நாம் எல்லாம் படித்தால் இந்த ஆட்சிக்கு லாபம். ஆகவே அதிகமான அளவில் கல்வித்துறைக்காக ஒதுக்குவதைப் பற்றி உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன், அதோடு இன்னும் இப்போதிருக்கின்ற நிலைமைக்கு அதிகப்படியாக ஒதுக்கவேண்டுமென்று வலியுறுத்தி சொல்லிக்கொள்கிறேன். கல்வித்துறையைப்பற்றி குறிப்பிட்டு அமைசசர் அவர்கள் கூறுகின்ற காலத்தில் கட்டாய இலவச கல்விக்காக, 30 லட்சம் பிள்ளைகளுக்கு 9 கோடி ரூபாய் செலவாகும் என்று சொன்னார்கள். இன்னும் அதிகம் தொகை ஒதுக்கப்படவேண்டுமானால் வரி போட்டால் தான் கிடைக்கும் என்றும், வரி போடுவதாயிருந்தால் " வரி போட்டிருக்கிறீர்களே " என்று நாங்கள் சொல்வோம் என்றும் உள்ள கருத்து அவருடைய பேச்சில் தொக்கி நிற்கிறது. என்னுடைய கட்சியின் சார்பில் சொல்லுகிறேன், நாங்கள் யாரும் இம்மாதிரியான காரியங்களுக்காக வரிகள் போடுவதை எதிர்க்கவில்லை. அதோடு போடுகின்ற வரிகள் யாரை தாக்குகின்றன, வரி போடுவதால் யாருக்கு பலன் ஏற்படுகிறது என்பதை கணக்கிட்டு பார்க்கவேண்டுமென்று தான் நாங்கள் கூறுகிறோம். இங்கு



ஒரு நாள் காங்கிரஸ் சட்டசபை கொறடா அவர்கள் சற்றுக் கோபத்தோடு தான் பேசினார்கள் என்றே நினைக்கிறேன். நாங்கள் ஏதோ கொடி பிடித்துக்கொண்டு வரிகளை எதிர்க்கிறோம் என்று. நாங்கள் இந்த சென்னை சர்க்காரால் விதிக்கப்பட்டிருக்கிற வரிகளை எதிர்த்ததாக எனக்கு நினைவு இல்லை. வேண்டுமானால் மத்திய சர்க்காரால் விதிக்கப்பட்ட வரிகளை எதிர்த்திருக்கலாம். ஆனால் எந்த வரிகளை போட்டாலும் எதிர்க்காமல் இருப்பது உண்மையில் ஜனநாயகத்திற்கு புறம்பானது என்பதை வலியுறுத்திக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடு கல்விக்கு அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிற முறையை நான் பாராட்டுகின்றேன். அதே நேரத்தில் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். ஆரம்ப கல்விக்கு அதிகமாய் செலவு செய்யப்படுகின்ற பணம், அதன் மூலம் பெறுகின்ற கல்வி பிற்காலத்தில் அவர்களுக்கும் நாட்டுமக்களுக்கும் பயன்படுகிறதா என்பதை பார்த்து அதற்கு அதிமாக பணம் செலவு செய்யப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாம் செலவு செய்வதில் மாத்திரமல்ல அதன் மூலம் கிடைக்கிற பலன் என்ன என்பதையும் நாம் பார்க்கவேண்டும். உண்ட சோறு ஜீரணமானால்தான் வலுவு பெற முடியும். ஆகவே ஏதோ 6 கோடி ரூபாய் செலவு செய்கிறோம் என்று மாத்திரம் பெருமைப்பட்டு கொள்ளலாமே தவிர இதனால் எந்தவிதமான பலன் ஏற்படுகிறது, இதிலிருந்து எத்தனை சதவிகிதம் மேல்படிப்புக்கு பயன்படுகின்றது என்பதையும் நாம் பார்க்கவேண்டியது அவசியமாகிறது. இன்றைக்கு அதிகமாக ஏற்பட்டிருக்கிற பொருளாதார கஷ்டத்தினாலும் வாழ்க்கைத்தரத்தினாலும் மேல்படிப்புக்கு அதிக சதவிகிதம் பேர்கள் போக முடியாமல் இருக்கின்ற நிலைமையில் இந்த ஆரம்ப கல்வி எந்த அளவு சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் பயன்படும் என்பதை சொல்லவேண்டுமென்றால் நாம் அறிந்தவரையில், அடக்கமாகவே சொல்லிக்கொள்கிறேன், இதுபற்றிய புள்ளிவிவர இலாகா எதிர்கட்சியில் இல்லாத காரணத்தால், சரியாகக் கூறமுடியாவிட்டாலும் ஓரளவு கூற முடியும், தங்களது பொருளாதார நிலையின் காரணமாக மேல்படிப்புக்கு போக முடியாமல் ஏதோ கொஞ்சம் படித்ததையும் மறந்து விட்டு, ஏதோ இரண்டு மூன்று ஆண்டுகள் படித்து விட்டு கார்டு, கவர் வந்தால் எழுத்துக்கூட்டி படிக்கிற அளவுக்குத்தான் அதிகம் பேர் இருக்கின்றனர் என்பதை எனக்கு சொல்லமுடியும். அடுத்ததாக சொல்வேன், கல்வித் துறையில் இன்று நாளுக்குநாள் பற்பல பரீட்சைகள் அனாவசியமாக என்று கூட சொல்வேன், பல்வேறு பரீட்சைகள் வைக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமான பரீட்சைகள் நாம் வரவேற்கத்தகுந்த நிலையில் இல்லை. மனிதனுடைய வாழ் நாள் பூராவுக்கும் அவர்கள் ஒரே அடிப்படையில் இருக்க வேண்டும் என்று விரும்பினாலும் அவ்விதம் இருக்க முடியாது என்பதை நாம் கண்டு வருகிறோம். இப்போதுள்ள முறையில் மாற்றம் காணவேண்டும் என்றுள்ள கருத்து சர்க்காருக்கு இருப்பதாக காணவில்லை. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி குறிப்பிடுகிற நேரத்தில் கண்டிப்பாக சொன்னார்கள். இந்த சர்க்காருடைய கொள்கை ஆதாரக் கல்விதான் என்று சொன்னார்கள். அதைப்பற்றி அவர்கள் கண்டிப்பாக சொல்வதற்கு காரணம், ஆதார கல்வியைப்பற்றி நீங்கள் ஆயிரம் குற்றங்கள் சொல்லலாம். அதற்காக எல்லாம் நாங்கள் இந்த கொள்கையை மாற்ற தயாராயில்லை, என்று தான் அவர்கள் கூறினதை நமக்கு எடுத்துக்கொள்ள முடியும். நாங்கள் அமைச்சர் அவர்களிடம் சொல்லி அதை மாற்றாவிட்டாலும்கூட பிளானிங் கமிஷன் மெம்பர் டாக்டர் கோஷ் அவர்கள் இரண்டொரு நாட்களுக்கு முன்னால் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள், நாங்கள் சாமான்யமானவர்கள் என்பதற்காக நீங்கள் நாங்கள் சொல்வதை கேட்காவிட்டாலும் பிளானிங் கமிஷன் மெம்பர் சொல்லியிருப்பதை நீங்கள் கவனிப்பீர்கள் என்ற காரணத்தால் அதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

**" Perhaps the time has come when we may forget the artificial difference between the basic and non-basic type of schools. What we want are, better type of schools and better type of teachers. This is because in some States, there is a feeling that basic schools are creating a caste of pupils who are meant to live for ever in rural areas."**

[Sri C. N. Annadurai] [17th July 1957

இதைவிட தெளிவாக உண்மை நிலைமை யாரும் எடுத்துக்காட்ட முடியாது. மேலும் இந்த ஆதார கல்வியைப்பற்றி பொறுப்புள்ள தலைவர்களில் ஒருவர் சொல்லியிருப்பது என் நினைவுக்கு வருகிறது. இந்த ஆதாரக் கல்வியின் திட்டவட்டமான கொள்கை என்ன என்பது அவை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை என்று எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். ஆகையினால் ஆதார கல்வியை நாம் கையாள்வதற்கு முன்னால் இன்று இந்த சர்க்கார் மத்திய சர்க்காருடைய கொள்கையின் கீழ் இருந்தாலும்கூட ஆதார கல்வி சம்பந்தமாக இந்த சர்க்காருடைய கொள்கை என்ன, கல்வித்துறையில் அடிப்படையான கொள்கை என்ன என்பதை வகுத்தால் நல்லது என்று கருதுகிறேன். கல்வித்துறையில் மாற்றம் காணவேண்டும் என்று சின்னதுரை அவர்கள் சோஷலிஸபாணியில் கல்வி இருக்கவேண்டும் என்று எடுத்துச்சொன்னதை கட்சிக்குரியதாக எடுத்துக்கொண்டாலும் கவலையில்லை. உண்மையில் சமுதாயத்தின் நன்மைக்காக அப்படி இருக்கவேண்டும் என்றும் அதற்குரிய விதத்தில் கல்வி திட்டம் அமையவேண்டும் என்பதையும் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். உண்மையில் ஆதார கல்வி கொள்கையை எடுத்துப்பார்த்தால் கிராம சுயராஜ்யம் தான் புகுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இதை குறிப்பிடுகிற நேரத்தில் இன்றைக்கு புதிய நவீன முறைகளுக்கும், விஞ்ஞன முறைகளுக்கும் செலவு செய்யப்படுகிற கோடிக்கணக்கான பணங்கள் எல்லாம் விரயம் என்று தான் கருத வேண்டியிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மட்டும் கன ரகத்தொழில்களுக்காகவும், நவீன விஞ்ஞான தொழில்களுக்காகவும் ஏராளமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாரத நாட்டு பிரதமர் கூட அணுசக்தி குறித்து, அதை எவ்விதத்தில் பயன்படுத்தலாம் என்பதில் அக்கரை காட்டிக்கொண்டு இருக்கிறார். தனது வெளிநாட்டு பிரயாணத்தின் போது எல்லாம் நவீன விஞ்ஞான முறைகளையும் எவ்விதம் கொண்டுவர வேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் அடிக்கடி அறிக்கை மூலமாகவும், சொற்பொழிவு மூலமாகவும் தன்னுடைய கருத்துக்களை சொல்லிக்கொண்டிருக்கிறார். ஒருபுறத்தில் நவீன விஞ்ஞான முறைகள்கொண்டு வரவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிற அதே நேரத்தில் மற்றொரு புறம் கிராம சுயராஜ்யத்திற்கு மட்டும் வழிவகுக்கக்கூடிய ஆதார கல்வியை கொண்டு வருகிறோம் என்று சொன்னால் நம்மை இவர்கள் எங்கே அழைத்து செல்கிறார்கள் என்பதை கண்டு நானும் திகைக்கின்றேன், நாடும் திகைக்கிறது. எவ்விதமிருந்தாலும் இதை கொண்டு வந்தவர்களுக்கு இதைப்பற்றி தெளிவான காரணம் இருக்கவேண்டும். அதை நிதி அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக ஓராசிரியர் பள்ளிகளைப்பற்றி நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்ன கருத்துக்களைப்பற்றி நான் கொண்டிருக்கின்ற எண்ணம் தவறாக இருக்குமானால், அதிலுள்ள உண்மைகளை எடுத்துச்சொல்லி என்னை திருத்தவேண்டிய கடமை அவர்களுக்குஇருக்கிறது. மேற்படி பயிற்சி பெறாத ஆசிரியர்களைக் குறித்து முன்பு சட்டசபையில் சொன்னதிலிருந்து முதலில் அவர்களுக்கு 4 வார பயிற்சி கொடுத்து அவர்கள் ஆசிரியர் தொழிலில் 3 வருஷம் அனுபவம் பெற்றவுடன் குறுகிய கால பயிற்சி அளித்து நிர்ணயிக்கப்படுவர் என்று கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் மேற்படி கொள்கையை அறிவித்தார் என்று ஓராசிரியர் கழகம் ஒன்று எனக்கு எழுதியிருக்கிறது. சுப்ரமணியம் அவர்கள் இந்தக் கொள்கை விளக்கத்தை அளித்தபோது அதிர்ஷ்டவசமாகவோ அல்லது துரதிர்ஷ்டவசமாகவோ நான் இங்கு இல்லாத காரணத்தால் இதற்கு ஒரு விளக்கத்தை அவர்கள் அளிக்க வேண்டுமென்று தான் இதை குறிப்பிட்டேன். அடுத்தபடியாக, " ப்ரீவொக்கேஷனல் டீச்சர்ஸ் "க்கு முதலில் 39 ரூபாய் சம்பளமும் படியும் என்று அறிவிக்கப்பட்டு கடைசியாக அவர்களுக்கு

" **The pay of part-time pre-vocational teachers in Board Higher Elementary Schools is fixed at rupees ten only with effect from 12th June 1957** "

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொழில் கல்வி வளரவேண்டும் என்பதை பற்றி யாருக்கும் கருத்து வேற்றுமை இல்லாதிருக்கிற இந்த நாளில் தொழில் கல்வியை சாதாரணமாக பள்ளிக்கூடங்களில் கற்றுத் தருவதை



17th July 1957] [Sri C. N. Annadurai]

ஆசிரியர்களுக்கு 10 ரூபாய் மாதச் சம்பளம் என்று கூறப்பட்டிருப்பது உண்மையிலே சர்க்காரின் கண்யத்திற்கும் நாட்டின் நிலைமைக்கும், கல்விக்கு நாம் அளிக்கும் அக்கரைக்கும் உகந்ததல்ல. அடுத்தபடியாக, கல்லூரிகளிலும் தமிழை போதனா மொழியாக ஆக்க வேண்டுமென்று கனம் கல்வி அமைச்சரவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். உண்மையிலே, இந்தத் தலைமுறையில் ஆங்கிலம் படித்தவர்கள்தான் அறிவாளிகள் என்ற மூடப்பழக்கத்தையும் ஆங்கிலத்திலேதான் அறிவைப் பெற்றுக் கொள்ளமுடியுமென்றிருக்கிற வைதீகத்தையும் போக்கிட, தமிழ் மொழி மூலம் எல்லாத் துறைகளிலும் பயிற்சி பெற முடியும், எல்லாத் துறைகளிலும் நன்கு நிர்வாகம் நடத்தமுடியுமென்று எடுத்துக்காட்டும் பொறுப்பு நம் சர்க்காருக்கு ஏற்பட்டு இருக்கிறது. அந்தக்காரியத்தை சாதிக்கும் வாய்ப்பு நமது கனம் கல்வி அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. அந்தத் துறையில் கனம் கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்கிற எல்லா முயற்சிகளுக்கும் நானும் என் கட்சியும் அவருக்கு துணையாக நிற்போம் என்று இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். அதோடு, கல்வித் துறையின் அடிப்படைக் கொள்கையை சரியான முறையில் வகுத்துக் கொண்டு அதற்கேற்றபடி அதற்கு நிதி அதிகம் தேவை என்று இருக்குமானால் அதற்காக கனம் நிதி மந்திரியவர்கள் கூடுதல் வரி போட நிச்சயமாக தயங்கவேண்டாம். ஆனால் போடுகிற வரி யார் பேரில் இருக்க வேண்டும் என்பதும் அது எப்படி எப்படி வசூலிக்கப்பட வேண்டும் என்பதும் அதன் பலன் யார் யாருக்குக் கிடைக்க வேண்டும் என்பவைகளைத்தான் நாங்கள் முக்கியமாக கருதுகிறோமே தவிர அதிகமாக செலவு செய்ய வேண்டாம் என்றோ அல்லது வரி போடாமலேயே ஆட்சி நடத்தலாம் என்றோ நாங்கள் சொல்லவில்லை. அதற்கு, இந்த சர்க்காரிடம் ஒரு அலாவுதீன் தீபம் இல்லை என்பதை நாங்கள் உணர்கிறோம். ஆகவே பெற வேண்டிய இடங்களில் பெறுங்கள் தர வேண்டிய இடங்களில் தாருங்கள் என்றுதான் நாங்கள் சொல்கிறோம், என்று சொல்லிக்கொண்டு இந்தக் கோரிக்கையின் மேலுள்ள வெட்டுப்பிரேரணையில் நான் கலந்து கொண்டதின் முக்கியமான நோக்கம் இதிலுள்ள குறைபாடுகளை நீக்கவேண்டும் என்பதே. ஆனால் இதுவரையில் எதிர்கட்சியிலிருந்து வந்த எந்த யோசனையையும், எந்த பணிவான வேண்டுகோளையும் கவனித்து சர்க்கார் தரப்பிலிருந்து அவைகளை நீக்கவோ அல்லது திருத்திக்கொள்ளவோ செய்யவில்லை என்றிருந்தாலும் நாங்கள் பொறுமை இழந்துவிடப் போவதில்லை. ஒவ்வொரு நேரத்திலும் சொல்கிறோம், சொல்லிக்கொண்டுதான் இருப்போம், நாங்கள் சொல்கிற சிலபல நல்ல கருத்துக்களை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று எங்களுக்குத் தெரிந்தால் எங்களுக்கு இத்துறையில் கூடுதல் ஊக்கம் பிறக்கும் என்று தெரிவித்துக் கொண்டு இந்த வெட்டுப்பிரேரணையை ஆதரிக்கிறேன்.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR :** கனம் சபாநாயகர் அவர் 11-26
களே, இப்பொழுது மன்றத்தின் முன்பாக இருக்கும் வெட்டுப்பிரேரணையை a.m.
ரித்து சில வார்த்தைகள் சொல்ல நான் விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள் சிலர் ஆதரித்தும் சிலர் எதிர்த்தும் பேசியிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையைப்பற்றி நான் முக்கியமாக இரண்டொரு வார்த்தைகள் மட்டும் சொல்லிவிட்டு எனது பேச்சை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மென்ட் கொடுத்திருக்கிறார்கள்.

இச்சமயத்தில் சில அங்கத்தினர்கள் இடத்தைவிட்டு எழுந்து சென்றார்கள்.

**Mr. SPEAKER :** தயவு செய்து ஒரு அங்கத்தினர் பேசும்போது மற்ற அங்கத்தினர்கள் நடுவில் எழுந்து போகக்கூடாது. அவர் பேசி முடிந்த பிறகு போகட்டும். ஏனென்றால் சப்தம் அதிகமாகி விடுகிறது, சப்தம் ஏற்படுமானால் அவர் பேசுவது எனக்கும் உங்களுக்கும் கேட்காத நிலைமை ஏற்படும்.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR :** இந்த கல்வி இலாகாவில் வருஷா வாரி தொகை அதிகரித்துக் கொண்டு வந்து கடைசியாக சுமார் 11 கோடி 68 லட்சம் ரூபாய் வரையில் செலவாகி இருக்கிறது. அவர் சொன்னபடியே நம்முடைய ராஜ்ய வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கு கிட்டத்தட்ட கல்விக்காக கொடுக்கப்பட்டு செலவழிக்கப்பட்டு வருகிறது. வருஷா வாரி

[Sri V. K. Ramaswami Mudaliyar] [17th July 1957]

அதிகம் பிள்ளைகளும் பள்ளிகளில் சேர்ந்து படித்து வருகிறார்கள். வருஷாவாரி கிட்டத்தட்ட ஒரு லட்சம் குழந்தைகளுக்குக் குறையாமல் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து வருகிறார்கள். அதைப்பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். பொதுவாக ஆரம்பப் பாடசாலைகளில், அதாவது ஸ்தலஸ்தாபனம் மூலம் நடக்கிற ஆரம்பப் பள்ளிக்கூடங்களும், மானேஜ்மெண்டு மூலம் நடத்தப்படுகிற பள்ளிக்கூடங்களும் சரியாக சரிவர நடக்கிறதா என்பதைப் பற்றி யோசிக்கவேண்டும். அவைகளில் கண்காணிப்பு சரியாக இல்லை என்பது என்னுடைய முக்கியமான எண்ணம். இப்பொழுது டெப்யூடி இன்ஸ்பெக்டர்களை போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு டெப்யூட்டி இன்ஸ்பெக்டருக்கும் சுமார் 80, 90 பள்ளிக்கூடங்கள் அவர்களுக்குக் கீழ் இருக்கின்றன. அநேகமாக வருஷத்திற்கு ஒருமுறைதான் பள்ளிக்கூடங்களை பார்த்து வருகிறார்கள். அதோடு ரோடு வசதி, போக்குவரத்து வசதி இல்லாத இடங்களுக்கு அவர்களால் போகமுடியவில்லை என்பதை இங்கு நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இந்த டெப்டி இன்ஸ்பெக்டர்களுக்கு வேறு வேலைகளும் இருக்கின்றன. ஈ. எஸ். எல். சி., ட்ரையினிங் ஸ்கூல் சார்ஜ் இவைகளையும் கவனித்து வரவேண்டியிருக்கிறது. ஆகவே இந்தப் பள்ளிக்கூடங்கள் சரிவர கவனிக்கப்படுவதில்லை. நான் ஜில்லா போர்டு தலைவராக இருந்த காலத்தில் ஒவ்வொரு தாலூக்காவிற்கு ஒவ்வொரு சூப்பர்வைசர் போட்டால் கண்காணிப்பு நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டிருந்தோம். அதற்காக இது வரையில் சர்க்கார் உத்தரவு போடவில்லை. இதில் ட்யூப்பிளிக்கேஷன் ஆப் வொர்க் இருக்கும் என்று சொன்னார்கள். இதனால் ஒரு ஜில்லா போர்டுக்கு 10,000 ரூபாய்க்கு மேல் செலவாகாது. ஒவ்வொரு பள்ளிக்கூடங்களுக்கும் போய் அங்குள்ள கருவிகள் சரியாக இருக்கிறதா, பள்ளிக்கூடம் நடக்கிறதா என்று பார்த்து வந்தால் போதும். அவர்கள் இன்ஸ்பெக்ஷன் செய்ய வேண்டியதில்லை. அப்படிச் செய்தால் அநேக பள்ளிக்கூடங்கள் நல்ல முறையில் நடக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதை உடனடியாக அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் இன்ஸ்பெக்ஷன் செய்யவேண்டியதில்லை. இம்மாதிரியான காரியங்களை அவர்கள் செய்தால்போதும்.

தவிர ஜில்லா போர்டுப் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்குச் சம்பளம் சரிவரப் போய்ச் சேருவது கிடையாது. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் முக்கியமான காரணம் சட்ட சபையில் பணம் ஒதுக்கப்பட வேண்டும், வோடட், நான் வோடட் என்று இனங்கள் இருக்கின்றன. ஆதலால் சட்ட சபையில் பணம் ஒதுக்கிய பிற்பாடுதான் பணம் கொடுக்கப்படவேண்டும் என்பது. அப்படியெல்லாம் இல்லாமல், துண்டு விழும் பட்ஜெட்டுள்ள ஜில்லா போர்டுகளுக்கு "எக்ஸ்க்ரேஷியா கிராண்டு" என்று ஒதுக்கி வைத்து உடனுக்குடன் சம்பளம் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தான் ஸ்தல ஸ்தாபனத்தில் கீழ் வேலை செய்யும் ஆரம்பப் பாடசாலை ஆசியர்களுக்கு உடனுக்குடன் மாதாமாதம் சம்பளம் போய்ச் சேரும்; அதனால் ஒரு பெரிய கூக்குரல் ஏற்படாமல் இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன்.

தவிர, இந்த ஆசியர்களுக்கு மணியாடர் மூலமாகத் தொகை அனுப்பப்படவேண்டுமென்று சர்க்கார் உத்தரவு போட்டிருப்பதாகத் தெரிகிறது. அது மிகவும் வருந்தத்தக்கது. அநேக இடங்களில் சப்-போஸ்டாபீஸ் இல்லாத காரணத்தாலும், போக்கு வரத்து சாதனங்கள் இல்லாத காரணத்தாலும், வேண்டிய தொகையில்லாத காரணத்தாலும் தொலை தூரத்தில் இருக்கிற பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்கு மேல் சம்பளம் போகாமல் இருக்கிறது. 5 மைல்களுக்கு உட்பட்ட பிரதேசத்திற்கு ஒரு செண்டர் அமைத்து அதன் மூலமாகச் சம்பளத்தைப் பட்டுவாடா செய்யும் வழக்கம் இப்பொழுதும் சில இடங்களில் இருந்து வருகிறது. தாலூகா கஜானாவில் பணம் மாதாமாதம் வாங்கிக் கொடுக்கும் படியான ஏற்பாட்டைச் செய்ய சர்க்கார் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், கவர்ன்மெண்டு ஸ்கேல் ஆப் பே-க்கும் ஜில்லா போர்டு கொடுக்கும் சம்பளத்துக்கும் வித்தியாசம் இருக்கிறதென்று சொன்னோம். "அந்த வித்தியாசம் இருக்க வேண்டியதில்லை. சர்க்கார் கொடுக்கும்



17th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

ஊதியப்படியே நீங்களும் கொடுக்கலாம்" என்று சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும், ஜில்லா போர்டிடம் நிதி இல்லாத காரணத்தால், சில ஜில்லா போர்டுகளில் சர்க்கார் சம்பள விகிதம் அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லையென்று நான் நினைக்கிறேன். அதைப் பற்றியும் கனம் அமைச்சர் அவர்கள் கொஞ்சம் யோசனை செய்ய வேண்டும்.

ஈ.எஸ்.எல்.ஸி. பரீக்ஷை இருக்க வேண்டுமா என்பதைப்பற்றி எனக்கு வெகுநாளாக யோசனை. தபால் இலாகாவிற்கும் இன்னும் மற்ற கீழ்த்தர உத்தியோகஸ்தர் வேலைகளுக்கும் போவதற்கு அது ஆதாரமாக இருக்கலாம். இருந்தபோதிலும், ஆசிரியர்களாக வருவதற்கு அவர்களுக்குத் தகுதி இருக்கிறதா என்று எனக்குச் சந்தேகம். ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், எஸ்.எஸ்.எல்.ஸி. படித்த ஆசிரியர்களையே எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் போட வேண்டுமென்பது என்னுடைய கருத்து. இதைப்பற்றி நான் அநேக இடங்களில் சொல்லியிருக்கிறேன். முக்கியமாக, ஈ.எஸ்.எல்.ஸி. படித்த ஆசிரியர்கள் ரிடயர் ஆன பிற்பாடு எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களையே உபாத்தியாயர்களாகப் போடவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆரம்பப் பாடசாலைகள் சம்பந்தப்பட்ட வரையில், ஒரு உபாத்தியாயர் இருக்கும் பள்ளிக்கூடங்கள் சரிவர நடக்கவில்லை என்று சர்க்கார் அநேக தடவைகள் ரிப்போர்ட்டுகள் அனுப்பியிருக்கிறார்கள். ஜில்லா போர்டைப் பொறுத்தமட்டில், ஒரு உபாத்தியாயர் இருக்கும் ஆரம்பப் பாடசாலைகள் அநேக இடங்களில் சரிவர நடக்கவில்லையென்று என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்வேன். இப்பொழுது கனம் அமைச்சர் அவர்கள் அதைப் பற்றி என்ன நினைக்கிறார்களோ தெரியவில்லை. கூடிய வரையில், குறைந்தது இரண்டு உபாத்தியாயர்களுக்குக் குறையாமல் இப்பள்ளிக்கூடங்கள் நிறுவப்படவேண்டும். அதைப் பற்றியும் கனம் அமைச்சர் அவர்கள் நன்றாக யோசிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது யுனிவர்ஸிடி கமிஷன் சில சிபார்சுகள் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய சிபாரிசுப் பிரகாரம் அண்ணாமலை யுனிவர்ஸிடியில் ஆசிரியர்களுக்கு ஊதியங்களைக் கொடுத்து விட்டார்கள். நம்முடைய சென்னை சர்வகலாசாலையைச் சேர்ந்த கல்லூரிகளில் அவ்வாறு கொடுக்கப்படவில்லையென்று நான் கேள்விப்பட்டேன். அதைப் பற்றியும் சர்க்கார் சீக்கிரம் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மத்தியான உணவு அளிப்பதைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். அநேக இடங்களில் மத்தியான உணவு சரிவர விநியோகம் செய்யப்படுவதில்லை. அதைப்பற்றி அநேகம் புகார்கள் இருக்கின்றன. முக்கியமாக, கிராமத்தில் சில பேர் சேர்ந்து கொண்டு காண்டிராக்ட் எடுத்துக் கொண்டு லாபம் சம்பாதிப்பதற்காக இதை நடத்துகிறார்களே தவிர, கண்காணிப்பு சரியாக இருப்பதில்லை. பிள்ளைகளுக்கு நல்ல சாப்பாடும் போடுவதில்லை. இதைப்பற்றியும் சர்க்கார் ஆலோசனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சில விஷயங்கள் சொல்ல வேண்டியிருந்தபோதிலும், எனக்குக் கொடுக்கப்பட்ட காலம் குறைவாக இருப்பதால், அவைகளை நான் இப்போது சொல்ல விரும்பவில்லை. கல்வி இலாகாவைப்பற்றி விவாதிப்பதற்காக இன்னும் ஒரு நாள் ஒதுக்கி வைப்பதாகக் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த சமயத்தில் இன்னும் சொல்ல வேண்டியதைச் சொல்லிக்கொள்ளுகிறேன். இத்துடன் என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன். வெட்டுப் பிரேரணையை நானும் ஆதரிக்கிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே இந்த 11-
விவாதத்திலே கலந்துகொண்ட எல்லா அங்கத்தினர்களுக்கும் என்னுடைய a.m.
மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எல்லோரும் கல்வித் துறை இன்னும் மேலும் மேலும் சிறப்புற்று நல்ல சேவை செய்ய வேண்டுமென்கின்ற எண்ணத்துடனே, அதிலே இன்னும் என்னென்ன

மாற்றங்கள் ஏற்படவேண்டும், என்னென்ன குறைகள் இருக்கின்றன, அவைகள் எப்படி தவிர்க்கப்பட வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இந்த மனப்பான்மையுடன் இந்த விவாதம் நடந்ததை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன்.

கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்கள் பேசும்பொழுது, நாம் எந்த சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்று நிர்ணயித்துக் கொண்டிருக்கின்றோமோ அதற்குத் தகுந்தபடி கல்வி முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டார்கள். அது அடிப்படையான கொள்கை. ஜெர்மானிய தேசத்திலே ஹிட்லர் தனக்கு உதவியாக இருக்கக்கூடிய ஒரு சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று விரும்பியபோது, ஆரம்பம் பள்ளிக்கூடங்களிலே செய்யப்பட்டது. அந்த முறையில் தான் வாலிபர்கள் எல்லாம் பாசிஸக் கொள்கையை ஆதரிக்கக் கூடியவர்களாக அமைந்தார்கள். ஆகையால், நாம் ஒரு சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்று விரும்பும்போது, அந்த சமுதாயத்திற்கு ஏற்ற கல்வித் திட்டத்தையும் அமைத்துக் கொள்வது மிகவும் முக்கியம். அந்த முறையில் தான், இன்றைக்கு கல்வித் துறையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்று சொல்லும்போது, ஆரம்பக் கல்வித் திட்டமும் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் மற்றக் கட்சித் தலைவர்களும் யோசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதற்கு முன்பு இருந்த படிப்பிலே இருக்கக்கூடிய முக்கியமான குறை என்ன என்று நாம் யோசித்துப் பார்போமேயானால், வெறும் படிப்புப் படித்துவிட்டு உழைக்காமல் மேஜை நாற்காலி போட்டு உட்கார்ந்துகொண்டு சம்பாத்தியம் செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே படிப்புச் சொல்லிக் கொடுக்கப்பட்டு வந்தது. அந்தப் படிப்பு நீடித்துக்கொண்டு போகின்ற வரையில், அந்த மனப்பான்மை நீங்காத வரையில், சோஷலிஸ சமுதாயம் அமையவே முடியாது. சோஷலிஸ் சமுதாயத்திற்கு அடிப்படையே உழைப்பில் நம்பிக்கை வேண்டும். உழைப்பில் நம்பிக்கை இல்லாமல், சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க முடியாது. உழைப்பின் மூலமாகத்தான் ஒருவன் வாழ்க்கை நடத்த வேண்டுமென்று அடிப்படையான எண்ணம் ஏற்படாத வரையில், சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க முடியாது. ஆகையால், ஆதாரக் கல்வியை ஒரு கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்றால், சோஷலிஸ சமுதாயத்தை ஏற்றுக்கொண்டதன் காரணமாக அதற்கேற்ப ஒரு கல்வித் திட்டமும் அமையவேண்டுமென்ற காரணத்தினால் தான். வேறு யாராவது நிபுணர்கள் இந்த சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க வேறு கல்வித் திட்டத்தை அமைக்கலாமென்று யோசனை சொல்வார்களேயானால், அதைப்பற்றியும் யோசிக்கத் தயாராயிருக்கிறோம். இது எதையும் யோசனை செய்யாமல் ஏற்றுக்கொண்ட திட்டமல்லவென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அந்த மனோபாவம் குழந்தைகள் மனதில் ஏற்படவேண்டுமென்றால், ஆரம்ப காலத்திலிருந்தே உழைப்புக்கு மதிப்புக் கொடுத்து உழைப்பின் அடிப்படையிலே வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற உணர்ச்சி அவர்கள் மனதிலே ஏற்படவேண்டும். அது இந்தத் திட்டங்களால்தான் ஏற்படுமென்று நாங்கள் நினைக்கிறோம். அதற்கு மேலாக, இன்றைக்கு இருக்கக்கூடிய கல்வி நிபுணர்கள் எல்லாம் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்ப்போமேயானால், வெறும் புத்தகத்தின் மூலமாகப் படிப்பதைவிட அனுபவத்தின் மூலமாக, காரியங்கள் செய்வதன் மூலமாக அறிவைப் பெறுவது ரொம்பவும் சிறப்பானது, அதன் மூலமாகத்தான் நல்ல அறிவு ஏற்படுமென்று எல்லோரும் அபிப்பிராயப் படுகிறார்கள். இந்த முறையிலே அமைந்திருக்கக் கூடியதுதான் ஆதாரக் கல்வி. அதிலுள்ள தொழில் பகுதியை விட்டு விடுங்கள். அந்தக் கொள்கையை நிறைவேற்றுவதற்காக அந்தத் திட்டங்களைப் போடுகிறோம், வேறு ஏதாவது மாற்றங்கள் செய்ய வேண்டுமென்றால், அவைகளைச் செய்யலாம் என்பது என்னுடைய கொள்கை. சில பேர், "ஆதாரக் கல்வி என்றால், ஒரு மதத்தை எழுதி வைத்த பிறகு அதை ஒன்றும் மாற்ற முடியாது என்பதுபோல், இதையும் மாற்ற முடியாது" என்று நினைக்கிறார்கள், நான் அப்படி எண்ணவில்லை. அடிப்படையான கொள்கையை வைத்துக்கொண்டு பலவிதமான மாற்றங்கள் செய்யலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். நான் அதை அடிக்கடி சொல்லி வந்திருக்கிறேன்.





மற்றவர்களும் சொல்வதைப் பார்த்து, நான் சொல்வதாக இருந்தாலும், இன்றைக்கு இன்னும் பல பேர் இந்த மாதிரி நினைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இன்னும் சில பேர் ஆதாரக் கல்வி என்றால், நூற்பு தான் இருக்க வேண்டும் அல்லது விவசாயம் தான் இருக்கவேண்டும் என்று கருதுகிறார்கள். அதற்கு அவசியமே கிடையாது. எந்தத் தொழிலை வேண்டுமானாலும் அடிப்படையை வைத்துக்கொண்டு நடத்தலாம். ஆனால் குழந்தைகள் வயதுக்கேற்ற தொழிலாக இருக்கவேண்டும். அந்த முறையில் சிறிய மோட்டார்கள் செய்யக்கூடிய தொழிலைக் கூட புகுத்த முடியுமானால், புகுத்தலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஆகையால் இதில் ஏதோ பிடிவாதமாக, இந்தத் திட்டம்தான், இதில் ஒன்றும் மாறுதல் கூடாது என்று ஏற்படுத்தவில்லை. நல்ல முறையிலே, நல்லபடியாக எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி கொடுக்கவேண்டுமென்ற கொள்கையடிப்படையில் இம்மாதிரி ஏற்படுத்தியிருக்கிறோம். இன்றைக்கு இதில் முன்னேற்றம் ஏற்படவும் மாறுதல் ஏற்படவும் நிறைய வழியிருக்கிறது. மாறுதல்கள் ஏற்படுமென்றும் நினைக்கிறேன். மாறுதல் ஏற்படாத முறையில் வளர்ச்சி ஒன்றும் இருக்க முடியாது. நாங்கள் இந்தக் கொள்கையை இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கும் காரணம், நல்ல கல்வி இருந்தால் தான் எல்லோருக்கும் நல்ல மனப்பான்மை ஏற்படும். ஆசிரியர்களுக்கும் இந்த மனப்பான்மை இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். போதனா பள்ளிகளும் ஆதாரக் கல்வி முறையில் அமைய வேண்டுமென்று அதற்காக எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். எல்லா பயிற்சிப் பள்ளிகளையும் ஆதாரக் கல்வி அடிப்படையில் மாற்ற வேண்டுமென்பது தான் சர்க்காருடைய கொள்கை. எப்போதும் புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவும் புதிய மாறுதல்களைச் செய்யவும் இந்தக் கல்வித் துறையாளர்கள் தயாராயிருப்பார்கள் என்று உறுதியாக இந்தச் சபையின் முன் சொல்லிக் கொள்ள முடியும். ஆதாரக் கல்வி முறையை அமைப்பது ஆரம்பப் பள்ளிகளில் மட்டுமல்ல. உயர்தரப் பள்ளிகளிலும் புத்தகப் படிப்பு மட்டுமல்லாமல், ஏதாவது ஒரு தொழில் படிப்பும் இருக்கவேண்டுமென்று வைத்து தொழில் படிப்பும் வேண்டுகிறவர்களுக்கு படிக்க வேண்டிய வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது இந்த மாதிரி, ஒரு சோஷலிஸ சமுதாயத்தை அமைப்பதில் எங்களால் இயன்ற அளவு வெற்றிகரமாக நடத்தி வருகிறோம்.

யாரோ ஒரு நண்பர் பேசும்போது இன்றைக்கு உள்ள 21 ஆயிரம் பள்ளிகளில் இரண்டு ஆயிரம் பள்ளிகள்தான் ஆதாரப்பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னார். அவசரப்பட்டு போதுமான அவகாசம் இல்லாமல், போதுமான ஆசிரியர்கள் இல்லாமல் செய்வதால் கெடுதல்கள் ஏற்படக்கூடாது என்று, வேண்டிய பிரயத்தினங்கள் செய்து நல்ல சூழ்நிலை ஏற்பட்ட பிற்பாடு, போதிய ஆசிரியர்கள் கிடைத்த பிற்பாடு இப்பொழுது இருக்கும் பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். சென்ற வருஷத்தில் இந்தப் பள்ளிகளை ரொம்ப மாற்றமுடியாமல் போய்விட்டது. இந்த வருஷம் ஓராயிரம் பள்ளிகளை மாற்றுவதாக இருக்கிறோம். மற்றபடி ஸ்ரீ கோஷ் சொன்ன கருத்தை வெளியிட்டார்கள். அந்தக் கருத்தை நானும் படித்திருக்கிறேன். அதாவது அவர் Basic, Non-Basic என்று பிரித்து வைக்கக்கூடாது என்றுதான் சொல்லுகிறார்கள். ஒரு சில பகுதி மட்டும் ஒரு தனி வகுப்பு என்று வைத்து இருப்பது பாக்கியிருப்பவர்களுக்கு கஷ்டமாக இருக்கும். எது நல்ல கல்வி முறையென்றால், சரி பாதி மட்டும் Basic, பாதி Non-Basic என்று வைத்துக்கொண்டிருப்பது சரியல்ல, ஆனால் பூராவும் ஒன்றாக இருக்கவேண்டுமென்றுதான் நான் படித்த அளவுக்கு புரிந்து கொண்டேன். கனம் அண்ணாதுரை படித்த வாசகத்திலும் எனக்கு அதுதான் பட்டது. Basic Education ஐப்பற்றி நன்றாக ஆலோசனை செய்து தான் இன்றைக்கு முடிக்கும் கட்டத்தில் இருக்கிறோம். இதை ஏற்றுக்கொண்டிருப்பது மூட நம்பிக்கையால் அல்ல; காந்திஜி சொன்னார்கள், அதனால் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்றல்ல. நம் நாட்டிலுள்ள நிபுணர்களையும், அதோடுமட்டுமல்லாமல் வெளிநாட்டு நிபுணர்களையும் கலந்து ஆலோசித்து சரியான முடிவுக்கு வந்ததற்குப் பிறகு இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம்.

இன்னொரு முக்கியமான விஷயம் சொல்லப்பட்டது. இன்றைய முறையில் ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. மிடில் ஸ்கூல்கள், அதாவது முதலாவது பாரத்திலிருந்து மூன்றாவது பாரம் வரை இருக்கின்றன. ஆரம்பப் பள்ளிகளில் படித்தவர்கள் இப்போது உயர்நிலைப்பள்ளிகளில் சேர்வது, அதாவது முதலாவது பாரத்திலும், நான்காவது பாரத்திலும சேர்வது கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள். இந்தக் கஷ்டத்தை உணர்ந்துதான் 8-வது பிரிவு வரை இரண்டு பிரிவாக இருக்க வேண்டியதில்லை, இதனால் மிகவும் கஷ்டப்படுபவர்கள் கிராம மக்கள்தான், ஆகவே இந்த தரத்தை உயர்த்தி 8-வது வகுப்பு வரையில் ஒரே முறையாக, ஒரே படியாக, இருக்க வேண்டுமென்று White paper-ல் இருக்கிறது. அதையேதான் சென்னை சட்ட சபை கமிட்டியும் சிபார்சு செய்திருக்கிறது. இது அமுலுக்கு வந்த பிறகு இந்த கஷ்டங்கள் நீங்கும். சீக்கிரம் அமுல் நடத்தினால் இந்த கஷ்டமெல்லாம் நீங்கும்.

இன்னொன்று பள்ளிகளில் சம்பளம் வாங்குவதைப்பற்றியும் சொன்னார்கள். முதலாவது பாரத்திலிருந்து மூன்றாவது பாரம் வரையில் 100 ரூபாய்க்கு மேலாக சம்பாதிக்கக்கூடிய பெற்றோர்கள், குழந்தைகளுக்கு சம்பளம் கொடுக்கவேண்டிய நிர்பந்தம் இருக்கிறது. அதை எடுத்துவிட வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு அரசியலமைப்பிலிருந்து விதிகளையும் ஆதாரம் காட்டினார்கள். நான் அதை ஒப்புக்கொள்ளுகிறேன். இன்றைக்கு மிடில் ஸ்கூலில் படிக்கிறவர்களுக்கு சம்பளம் வாங்கப்படுகிறது. ஆரம்பப் பள்ளிகளில், அதாவது, ஒன்றாவது வகுப்பிலிருந்து எட்டாவது வகுப்பு வரையில், பணக்காரர்களாக இருந்தாலும் சரி, ஏழைகளாக இருந்தாலும் சரி, சம்பளம் கிடையாது. இலவசக்கல்வியளிக்கப்படுகிறது. ஸ்பெஷல் ஸ்கூல்களைத் தவிர கூடிய சீக்கிரத்திலேயே ஒன்றாவது வகுப்பிலிருந்து எட்டாவது வகுப்பு மட்டும் எல்லோருக்கும், பணக்காரர்களுக்கும் கூட, சம்பளம் இல்லாமல்போய் விடும். அடுத்தபடி அரசியலமைப்பின் 45-வது விதி அமுலுக்குவந்து விடும். அது இன்னும் 10 வருஷ காலத்திற்குள் வந்துவிடுமென்று கனம் அங்கத்தினர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அது ஒன்று.

இன்னொன்று, இன்றைக்கு நம் ராஜ்யத்தில் பல்வேறு இலாக்காக்கள் பள்ளிகளை நடத்துகின்றன. ஹரிஜன் வெல்பேர் இலாகா ஹரிஜனங்களுக்காக பள்ளிகளை நடத்துகிறது. பரதவர்களுக்கு, அதாவது மீன் பிடிப்பவர்களுக்கு தனியாக பள்ளிகள் நடக்கிறது. கள்ளர் Reclamation scheme பிரகாரம் அந்த டிபார்ட்மெண்ட் வேறு பள்ளிகள் நடத்துகிறது. இப்போது இருக்கக்கூடிய முறையில் தனித்தனியாக ஒதுக்கிவைத்து கல்வி போதிப்பதால் பல பிரச்னைகள் வருகின்றன. ஒரு உயர்ந்த பண்பாடு ஏற்பட இன்றைக்கு இருக்கிற முறை வசதியாக இல்லை. ஆகவே எல்லாப் பள்ளிகளையும் கல்வி இலாகாவின் கீழ் கொண்டுவந்து, அவரவர்களுக்கு வேண்டுமானால் சம்பளச் சலுகை, இலவசமாக புத்தகங்கள் கொடுப்பது, இலவசமாக சாப்பாடு போடுவது முதலிய இனங்களுக்கு தனியாக சலுகை கொடுக்கச் செய்யவேண்டுமே தவிர, எல்லாம் பொதுப் பள்ளியாக இருந்து, எல்லோரும் ஒன்றாக இருந்து ஒன்றாகப் படித்து, ஒன்றாக வளரவேண்டும் என்ற அடிப்படையில் தீர்மானித்திருக்கிறோம். அது இந்த வருஷமே அமலுக்கு வருமென்று எதிர்பார்க்கிறேன்.

இதே சமயத்திலே இந்தப் பள்ளிகளை விரிவாக்க 30 லட்சம் பிள்ளைகளை பள்ளிக்கு கொண்டுவர 9 கோடி ரூபாய் செலவாகும் என்கிற புள்ளி விவரத்தைக் கொடுத்தேன். பெருமைப்படவோ அல்லது வருத்தப்படவோ அந்த புள்ளி விவரங்களை யெல்லாம் சொல்லவில்லை. உள்ள நிலைமையை அங்கத்தினர்கள் உணர வேண்டுமென்றுதான் புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். இப்போது நம் முன் இருக்கக்கூடிய பிரச்னைகளையும் அதில் உள்ள கஷ்டங்களையும் அங்கத்தினர்கள் உணர எடுத்துச்சொல்லுகிறேன். அதைத் தவிர வேறு இல்லை. 9 கோடி ரூபாய் செலவழித்து 14 வயது வரை எல்லோருக்கும், அரசியல் சட்டப்பிரகாரம், அதுவும் இன்னும் இரண்டு மூன்று வருஷத்திற்குள், கல்வியளிக்க முடியுமா, எல்லோரையும், 14 வயது வரை, பள்ளிகளுக்கு அனுப்பமுடியுமா என்





பதை ஆலோசிக்கவேண்டுமென்று சொல்லுகிறேன். பூரா புள்ளி விவரங்களும் இல்லையென்று சொன்னார்கள். White paper ஐயும், சட்டசபை கமிட்டியின் ரிபோர்ட்டையும் பார்த்தால் இன்று புள்ளி விவரம் வேண்டியமட்டில் இருக்கிறது. நான் சொல்லுவதானால் கூட அதில் பார்த்துத்தான் சொல்லவேண்டியிருக்கிறது.

" எத்தனை பேர் மேல் படிப்புக்குப் போகிறார்கள் ? " என்று அவர்கள் கேட்டார்கள். ஐந்தாவது வகுப்பு, ஆறாவது வகுப்பு போகிறவர்கள் இருக்கட்டும். அறிக்கையைப் படித்துப் பார்த்தால், ஒன்றாவது வகுப்பிலேயே நின்றுவிடுகிறவர்கள் எத்தனை பேர், இரண்டாவது வகுப்பிலேயே நின்று விடுகிறவர்கள் எத்தனை பேர், மூன்றாவது வகுப்பிலேயே நின்றுவிடுகிறவர்கள் எத்தனை பேர், நான்காவது வகுப்பிலேயே நின்று விடுகிறவர்கள் எத்தனை பேர் என்று எல்லாப் புள்ளி விவரங்களும் கொடுக்கப்பட்டிருப்பது தெரியும். மொத்தமாகப் பார்த்தால், இத்தனை குழந்தைகளாவது பள்ளிக்கூடத்திற்கு போய்க்கொண்டிருக்கிறார்களே என்று மனத் திருப்தி ஏற்பட்டுவிடலாம். 40 சத விகிதம் குழந்தைகள் ஐந்தாவதுகூட எட்டிப் பார்ப்பது இல்லை. இதையெல்லாம் எப்படி மாற்றியமைக்கவேண்டும் என்பதைப்பற்றித்தான் அதிலே சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அரசியலமைப்புச் சட்டப் பிரகாரம், 1960-க்குள் நாடு முழுவதும் 14 வயதுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வி கொடுக்க முடியுமா என்பதை அகில இந்திய ரீதியில் பூனா மகாநாட்டில் ஆலோசனை செய்து பார்த்ததில், " அது முடியாது " என்ற முடிவுக்கு வந்து, இன்றைக்கு நம்முடைய சட்டசபைக் கமிட்டியினுடைய சிபார்சை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள், அதாவது 1965–66-க்குள்ளாக, ஐந்தாவது வகுப்பு வரையிலாவது 11 வயது உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயப் படிப்பு கொடுக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அவ்வாறுதான் செய்ய முடியும் என்ற நம்முடைய சட்டசபைக் கமிட்டி செய்திருந்த சிபார்சை அகில இந்தியக் குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதைக் கண்டு நாம் ஓரளவு பெருமைப்படலாம். அந்த அளவு விஷயங்களை அறிந்து நம் சட்ட சபைக் கமிட்டி நல்ல முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி நாம் ஓரளவு பெருமைப்படலாம் என்று நான் சொல்லிக் கொள்ளுகிறேன். (கனம் அங்கத்தினர் ஸ்ரீ டி. எஸ். ராமசாமி பிள்ளை குறுக்கிடுதல்) அவ்வளவு தூரம் யோசித்து நல்ல முடிவுக்கு வரக்கூடிய திறமை நம் சட்ட சபைக் கமிட்டிக்கு இருந்தது கட்டாயம் பெருமைப்படக்கூடியதே. அப்படியில்லாமல் ஏதோ ஒரு சட்டத்தைப் போட்டுவிட்டு, வெறும் கனவு கண்டுகொண்டிருப்பதால் என்ன பயன் ? ஆகவே, அவசியம் பெருமைப்படலாம். பெருமைப்படவேண்டாம் என்று கனம் அங்கத்தினர் நினைத்தால், அவர் இதில் கலந்துகொள்ளவேண்டாம்.

இதே முறையில் இன்றைக்கு ஒரு திட்டம் போட்டுத்தான் மற்ற பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த வேண்டியதாக இருக்கிறது. ஹைஸ்கூல் திறப்பது பற்றி கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராமச்சந்திர ரெட்டியாரும் இன்னும் பல கனம் அங்கத்தினர்களும் சொன்னார்கள். " ரூ. 4,500 நாங்கள் ஜில்லா போர்டினிடம் கொடுத்துவிட்டோம் ; ஒரு ஹைஸ்கூல் ஆரம்பித்துவிடவேண்டும் " என்று நினைத்து விடுகிறார்கள். வெகு சுலபமாக உத்திரவு போட்டுவிடலாம். இன்றைக்கு இருக்கும் நிலைமையில் பள்ளிக்கூடம் ஆரம்பிப்பது என்றால், அதற்குக் கட்டிடங்கள் கட்டிவிட்டால் மாத்திரம் போதாது. பணம் இருந்தால் மாத்திரம் போதாது. உபாத்தியாயர்கள் வேண்டும். உபாத்தியாயர்கள் நெருக்கடி எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவிப்பதற்கு ஒரு சின்ன புள்ளி விவரத்தை நான் காட்டுகிறேன். இன்றைக்கு பி.டி. படித்தவர்கள்தான் உயர்தரப் பள்ளிக்கூடங்களில் பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. நிறைய கல்லூரிகளைத் திறந்துவிட்டோம். இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஐந்து புதிய கல்லூரிகளைத் திறந்தோம். சென்ற வருஷம் இன்னும் ஒரு புதிய பயிற்சிக் கல்லூரியை திறந்திருக்கிறோம். அதிலே, தனிப்பட்டோர் நடத்தக்கூடிய கல்லூரி ஒருபுறமிருக்க, சர்க்கார் நடத்தக்

கூடிய கல்லூரியிலே 375 ஸ்தானங்கள் ஆண்களுக்காக இருக்கின்றன. அதிலே இதுவரைக்கும் வந்து சேர்ந்திருக்கக்கூடியவர்கள் 230 பேர்கள் தான். இன்னும் 145 பேர்கள் (ஆண்கள்) வந்து சேரவில்லை. அந்த இடங்கள் காலியாக இருக்கின்றன. பெண்கள் கல்லூரியில் 185 ஸ்தானங்களில் 181 பேர்கள் (பெண்கள்) வந்து சேர்ந்திருக்கிறார்கள். அதிலேகூட "அப்ளை" பண்ணிக்கொண்டவர்கள் இடம் இல்லை என்று போகவில்லை. இன்னும் நான்கு ஸ்தானங்கள் காலி இருக்கின்றன.

பள்ளிக்கூடங்களை ஆரம்பித்துவிடலாம். ஆரம்பித்தால் கட்டாயமாக, நமக்கு நஷ்டம்தான் ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இன்றைக்கு ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தோம் என்றால், அதைத் தொடர்ந்து நடத்தக்கூடிய முறையில் இருக்க வேண்டும். அதைத் தொடர்ந்து நடத்துவது மாத்திரம் அல்ல. வேறு எங்கெங்கோயோ படித்துக்கொண்டிருக்கும் பிள்ளைகள் இந்தப் பள்ளிக்கூடத்திலே சேரும்போது, இப்பொழுது ஏற்படக்கூடிய செலவுக்கு மேல் அதிகச் செலவாகிறது என்பதையும் நாம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆகையால் தான், இன்றைக்கு உயர்தரப் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்க உத்திரவு போடுவதற்குத் தயக்கம் ஏற்படுகிறதென்றால், உயர்தரப் பள்ளிக்கூடங்களே ஏற்படக்கூடாது என்பது என்னுடைய எண்ணம் அல்ல. கல்வித் துறை டைரக்டர் அவர்களுக்கும், "இன்னும் ஏன் அதிகப் பள்ளிக்கூடம்" என்ற கவலை ஏற்பட்டு அல்ல. அதிலே இருக்கும் கஷ்டங்களை உணர்ந்து மற்ற பள்ளிக்கூட வசதிகளை அனுசரித்து, பக்கத்தில் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவா என்று தெரிந்து, ஒரு பள்ளிக்கூடம் இருக்கும் இடத்தில் இன்னொரு பள்ளிக்கூடம் வைப்பதிலே வீண் செலவும் நஷ்டமும் ஏற்படுமா என்பதைக் கவனித்து உத்திரவு இட வேண்டியிருக்கிறது. அதுதான் திட்டத்தில் இருக்கும் முக்கியமான விஷயம்.

திருவாங்கூர் ராஜ்யத்தின் கல்வி நிலைமையோடு நம் ராஜ்யத்தை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டுமானால் அதைப்பற்றியும் புள்ளி விவரங்கள் "வெள்ளை அறிக்கையில்" கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் படித்திருந்தால், கனம் அங்கத்தினர் அந்த argument ஐச் சொல்லியிருக்கமாட்டார்கள். இன்றைக்கு கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ கணக்குச் சொன்னார்கள். ஒரு குழந்தைக்கு ஆரம்பப் படிப்பு சொல்லிக் கொடுப்பதற்கு சுமார் 30 ரூபாய் ஆகிறது. முன்பு ரூ. 24-ஆக இருந்து, இப்பொழுது ரூ. 30 ஆகியிருக்கிறது. குறைந்தது ரூ. 24வது நாம் சராசரி செலவு செய்ய வேண்டி ஏற்படுகிறது. மற்ற ராஜ்யங்களைவிட நம் ராஜ்யத்தில் தான் அதிகமாகச் செலவாகிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றியும் விளக்குகிறேன்.

ஒரு குழந்தைக்கு நாம் ஆரம்பப் படிப்பு சொல்லிக் கொடுக்க சராசரி ரூ. 24 செலவு ஆகிறது என்று சொன்னால், திருவாங்கூர்-கொச்சியில் ரூ. 10-3-0-க்கு சொல்லிக் கொடுக்க முடிவதற்குக் காரணம் என்னவென்றால். . . (கனம் அங்கத்தினர் ஸ்ரீ டி.எஸ். ராமசாமி பிள்ளை குறுக்கீடு) அறிக்கையைப் படித்துப் பார்த்திருந்தால் அவர்கள் இதைச் சொல்லியே இருக்கமாட்டார்கள்.

இந்தப் புள்ளி விவரங்கள் எடுத்த நேரத்தில் 91,638 ஆசிரியர்கள் நம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலே வேலை செய்து வந்தார்கள். அதிலே ஆண்கள் 62,700 பேர்கள். அவர்களிலே பயிற்சி பெறாதவர்கள் 3,275 பேர்கள். அதாவது 6 சத விகிதம் ஆகிறது. பெண்களில் 29,139 பேர்கள் இருக்கிறார்கள். அதிலே பயிற்சி பெறாதவர்கள் 593 பேர்கள். ஆகவே, மொத்தம் 91,638 ஆசிரியர்களில் 3,868 பேர்கள்தான் பயிர்சி பெறாத ஆசிரியர்கள். மற்றவர்கள் எல்லாம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள். இது நம்முடைய ராஜ்யத்தின் நிலைமை. கனம் அங்கத்தினர் சொன்ன மாதிரி, திருவாங்கூர் ராஜ்யத்தில் ஆசிரியர்களுக்கு ஒரு வருஷப் பயிற்சி கொடுக்கிறார்கள், நாம் இரண்டு வருஷப் பயிற்சி கொடுக்கிறோம். இரண்டு





வருஷப் பயிற்சி ஆசிரியர்களுக்கு அவசியமா இல்லையா என்பதையும் அகில இந்திய ரீதியில் பரிசீலனை செய்து பார்த்து, இரண்டு வருஷப் பயிற்சி அவசியம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

திருவாங்கூர்-கொச்சியில் எப்படி இருக்கிறது என்று பார்க்கும்போது, அங்கு 40 சத விகிதம்தான் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். 60 சத விகிதம் பயிற்சி பெறாதவர்கள். பயிற்சி பெற்றவர்களுக்கு சம்பள விகிதம் ரூ. 45லிருந்து ரூ. 50 வரையில் போகலாம். ஆனால், பயிற்சி பெறாதவர்களுக்கு ரூ. 30லிருந்து ரூ. 35 தான் கொடுக்கிறார்கள். இப்படி 60 சத விகிதம் ஆசிரியர்கள் பயிற்சி பெறாதவர்களாக இருக்கும்போது, அவர்களுடைய சம்பளமும் குறைவாக இருக்கும்போது, சராசரி ஒரு குழந்தைக்குப் படிப்புச் சொல்லிக்கொடுப்பதற்கு ஆகும் செலவும் ரொம்பக் குறைந்துவிடுகிறது—நம்மைவிட.

இன்னொரு விஷயத்தையும் நாம் மனதிலே கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அங்கு 1 முதல் 4 வகுப்பு வரையில் "ஷிப்ட்" முறையைக் கையாளுகிறார்கள். அதாவது ஒரு உபாத்தியாயரைக்கொண்டு இரண்டு பங்கு பிள்ளைகளுக்குப் பாடம் கற்றுக்கொடுக்கும் முறை அங்கு கையாளப் படுகிறது. நாம் அதை வேண்டாம் என்று இங்கு முடிவு செய்து விட்டோம். இப்படி இருக்கும்போது நமக்கு ஒரு குழந்தைக்கு ஆரம்பப் படிப்புச் சொல்லிக் கொடுக்க ரூ. 30 செலவு ஏற்பட்டுத்தான் தீரும் என்பதை நாம் மனதிலே வைத்துக்கொண்டு, இதற்குத் தகுந்தபடி நாம் திட்டம் போடவேண்டியிருக்கிறது. இதைப் புள்ளி விவரத்திலிருந்து தெரிந்துகொண்டிருந்தால், "திருவாங்கூரில் நடக்கிறதே, இங்கே ஏன் நடக்க முடியாது?" என்று அவர்கள் குறை கூறியிருக்கமாட்டார் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, அறிக்கையை அவர்கள் படித்துப் பார்க்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப் படித்துப் பார்த்த பிறகு இன்னும் சந்தேகம் இருந்தால் அதைப்பற்றி விவாதத்தில், கிளப்பினால், அப்பொழுது நான் பதில் சொல்வதற்குச் சௌகரியமாக இருக்கும்.

"மானேஜ்மெண்ட்" பள்ளிகளை நடத்துவதிலே சில பேர் வியாபாரமாக நடத்துகிறார்கள் என்று சொல்லப்பட்டது. சில இடங்களில் வியாபாரமாக நடத்தலாம். ஆனால், இன்றைக்கு இருக்கும் முறையிலே பல மானேஜ்மெண்ட் பள்ளிகளை திறமையாக நல்ல முறையிலே நடத்தி வருகிறார்கள். சர்க்கார் இந்தத் துறையிலே வந்து இறங்குவதற்கு முன்னால் ஒரு விஷயத்தை மறந்துவிடக்கூடாது. பல மானேஜ்மெண்டார்கள் இதிலே நல்ல சேவை செய்து இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் ஓரளவு பாராட்டுதலையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கிருஸ்துவ மிஷனரிகளைப் பற்றிச் சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். கிருஸ்துவ மிஷனரிகளுடைய நோக்கம் எப்படியாக இருந்தாலும் இப்பொழுது அந்த நோக்கம் எல்லாம் மாறிவிட்டது. இன்றைக்கு நாட்டுக்காக உழைக்க வேண்டும் என்ற அடிப்படையிலே அவர்கள் கல்வித் துறையிலே சேவை செய்து வந்திருக்கிறார்கள். கல்வித்துறையிலே ஓரளவு நாம் முன்னேற்றம் அடைவதற்கு இங்கு அன்னிய அரசாங்கம் இருந்த காலத்திலுங்கூட கிருஸ்தவ மிஷனரிகள் பெருத்த உதவியும் பெருத்த சேவையும் நமக்குச் செய்திருக்கிறார்கள், சேவை செய்து வருகிறார்கள் என்பதை நாம் என்றும் மறந்துவிடக்கூடாது என்று மட்டும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, குழந்தைகளுக்குப் பகல் உணவு பள்ளிக்கூடத்தில் அளிப்பது பற்றி பேசப்பட்டது. இதற்கென பத்து லட்ச ரூபாய் ஒதுக்கியிருப்பது போதாது என்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இந்தத் தொகை போதாது என்று தெரியும். இருந்தாலும், படிப்படியாக நல்ல முறையிலே இந்த சிறுவர்களுக்கு உணவு அளிக்கும் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக சிறிது சிறிதாக ஆரம்பித்து விஸ்தரித்துக்கொண்டு வருகிறோம். பள்ளிகளில் குழந்தைகளுக்கு உணவு அளிப்பதைக் "கண்டிராக்ட்" முறையில் வைத்துக்கொண்டு சிலர் வியாபாரமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். பல இடங்களில் ஹரிஜன நலப் பள்ளிகளில் இதுமாதிரி

தான் நடந்து வருகின்றன. "காண்டிராக்ட்" டில் விட்டால் இப்படித் தான் வரும். ஆகையால், இன்றைக்கு சர்க்காருடைய கொள்கை என்னவென்றால் அந்தந்த ஊரில் இருக்கக்கூடியவர்களே ஒன்றுசேர்ந்து இந்தத் திட்டத்தை நடத்தவேண்டும் என்பது. உண்மையாகவே சொல்லுகிறேன். பெருமையாகக்கூடச் சொல்லிக்கொள்ளுகிறேன். பல ஊர்களில் இன்றைக்கு நம்முடைய தாய்மார்கள் தாங்களே உணவைப் சமைத்து, பள்ளிகளில் படிக்கும் ஏழை எளிய மாணவ மாணவிகளுக்கு சுவை மிக்க உணவு அளித்து வருகிறார்கள். தாய்மார்களில் வீட்டுக்கு ஒருவராகப் போட்டி போட்டுக்கொண்டு, ஒவ்வொரு நாளும் சமைத்துப் போடுவதையும் பார்த்திருக்கிறேன். அப்போது உண்மையில் அந்தச் சாப்பாடு சுவைக்கும். கண்டிராக்டர்கள் எப்படிச் சமைத்துப் போட்டாலும் அது ஜெயில் சாப்பாடாகத்தான் இருக்கும். தாய்மார்களுடைய புனித கரம்பட்ட சாப்பாடு என்றால் அதற்கு நிச்சயமாகத் தனிச் சுவை உண்டு. ஆகையால் இந்த மாதிரி ஏழை மாணவர்களுக்கு பிற்பகல் உணவைத் தாங்களே சமைத்துப் போடும் பெரும் தொண்டைச் செய்ய தாய்மார்கள் மேலும் மேலும் முன்வரவேண்டும், அதற்கு வேண்டிய ஊக்கத்தை இங்குள்ள பெண் அங்கத்தினர்கள் எல்லாம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri M. JAGANNATHAN** : லேடி காண்டிராக்டர்களிடம் விடலாம்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கண்டிராக்டர்கள் என்றால் ஆண்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும் எப்படிச் சுருக்கி லாபம் அடையலாம் என்பதிலேயே கவனம் உடையவர்களாக இருப்பார்கள். அன்பு உள்ளத்தோடு தாய்மார்கள் தாங்களாகவே சேவா மனப்பான்மையுடன் இந்த உணவைச் சமைத்துப் படைக்க வந்தால் தான் அது சுவைமிக்க உணவாக இருக்குமென்று சொன்னேன். இந்தத் திட்டம் நல்ல முறையில் நடக்கும். ஆகவே இந்த முறையை அமைக்க வேண்டுமென்பதற்காக ஊரில் இருக்கக்கூடியவர்கள் எல்லோரும் அக்கறை எடுத்துக்கொண்டு பணிபுரிய முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். பொதுவாக ஒரு ஊரில் உள்ள பள்ளிக்கூடம் நன்றாக நடக்க வேண்டுமென்றால், அந்தப் பள்ளிக்கூடத்தின் தரம் உயரவேண்டுமென்றால் ஊரில் உள்ளவர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொண்டால் தான் முடியும். அக்கறை எடுத்துக் கொள்வது என்றால் அன்றாடம் பள்ளி நிர்வாகத்தில் சென்று தாங்களும் தலையிட்டு கலந்துகொள்ளவேண்டும் என்று சொல்லவில்லை. அடிக்கடி அந்தப் பள்ளிக்கூடத்திற்குச் சென்று அவர்களுக்கு வேண்டிய உதவியை எல்லாம் இவர்கள் அளிக்க முன்வந்தால், அந்தப் பள்ளிக்கூடம் நன்றாக நடப்பதற்கு எவ்வளவு உதவி வேண்டுமோ அவ்வளவையும் செய்வார்களேயானால் அந்த ஊரில் உள்ள பள்ளிக்கூடம் நிச்சயமாக முன்னேற்றம் அடையும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஓராசியர்களுக்கு பயிற்சி வேண்டும், அவர்களும் இரண்டாண்டு பயிற்சி பெற்று வரவேண்டும் என்பதைப் பற்றிக்குறை கூறப்பட்டது. அவர்களுக்கு பயிற்சியே தேவை இல்லை, இருந்தாலும் குறைந்தகால பயிற்சி அளித்தால் போதும் என்பதாகவும் சொல்லப்பட்டது. இன்று நாம் இந்த பிரச்சினைக்கு முடிவு காண வேண்டும் என்று முயற்சிக்கும் போது ஒரு விஷயத்தை கவனத்தில் கண்டிப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். நல்ல நல்ல ஆசிரியர்களாக அவர்கள் பணியாற்ற வேண்டுமென்றால் அதற்குச் சிறந்த வழி என்ன என்பதை ஆலோசிக்க வேண்டும். இன்றைக்கு ஏதோ ஓராசிரியப் பள்ளியில் வேலை செய்பவர்களுக்கு பயிற்சியே வேண்டாம் என்பதாக நாம் முடிவு செய்துவிடலாம். ஆனால் அவர்கள் வருங்காலத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குக் கல்வி போதிக்க வேண்டியவர்கள். அவர்களிடம் படிக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் நலனை பொறுத்தும் எது நல்லது என்று முடிவு செய்ய வேண்டிய பொறுப்புடையவர்கள் நாம். ஏதோ ஒரு சில பேர்களுடைய சொந்தக் கஷ்டத்தை மனதில் வைத்துக் கொண்டு நாம் இவ்விஷயத்தில் முடிவு செய்துவிட முடியாது. நம்முடைய குழந்தைகளுக்கு நல்ல கல்வியை போதிக்கக் கூடிய திறமை உடையவர்களாக அவர்கள் ஆகவேண்டுமானால் அவர்களுக்கு இரண்டு வருஷப் பயிற்சி வேண்டும் என்று நாம் முடிவு செய்து இதர ஆசிரியர்களுக்கு எல்லாம் அப்படித்தான் பயிற்சி கொடுக்கப்பட்டும் வருகிறது. அதேமாதிரியாக இந்த ஓராசிரியர்களும் கூட இரண்டாண்டு பயிற்சி பெறத்தான் வேண்டும் என்பதில் சில கஷ்டங்கள் இந்த ஆசிரியர்களுக்கு வருகிறது என்றாலும், அதை வருங்கால மாணவ சமுதாயத்தின் நன்மையை உத்தேசித்து அவர்கள் பொருத்துக்கொள்ளக் கூடாதா? அதை ஏற்றுக் கொள்ளக் கூடாதா என்பதையும் நாம் யோசிக்கவேண்டும். அதுவும் ஆசிரியர்கள் தியாக உணர்ச்சி, சேவா உணர்ச்சி உள்ளவரையில்தான் நல்லாசிரியர்களாக இருக்க முடியும் என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். ஆகவே இந்தச் சிறு கஷ்டத்தை அவர்கள், வருங்காலச் சந்ததிகளின் நன்மையை உத்தேசித்து, தங்கள் மூலமாக ஆயிரக்கணக்கான மாணவர்கள் படித்து வெளியேறுவார்கள், அவர்களுக்கு உயர்ந்த கல்வியை, ஒழுக்கத்தை பண்பாட்டை வளர்க்கும் கல்வியைத் தருவதற்குத் தகுதி உடையவர்களாக நாம் இருக்கவேண்டும் என்கிற தியாக மனப்பான்மையில் ஏற்றுக்கொள்ள வேண்டாமா?



மற்ற ஆசிரியர்களுக்கு எல்லாம் இரண்டாண்டு பயிற்சியை முடித்துவிட்டு வந்த பிறகே அந்த உத்தியோகத்திற்கு அரசாங்கத்தாரால் நிர்ணயிக்கப்பட்டுள்ள சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால், இவர்களுடைய கஷ்டத்தை உணர்ந்து, எஸ். எஸ். எல். சி. படித்தவுடனேயே, அவர்களை பயிற்சி இல்லாமலேயே ஆசிரிய உத்யோகத்துக்கு எடுத்துக்கொண்டு, அதிகச் சம்பளம் கொடுத்து உதவி செய்து வருகிறோம். இவர்கள் தொடர்ந்து ஆசிரியர்களாகவே பணியாற்ற விரும்பினால், மாணவர்களுடைய நன்மைக்காக, நாட்டினுடைய நன்மைக்காக, இவர்களும் இரண்டாண்டு சென்று ஆசிரியர் பயிற்சியைப் பெற்று வரவேண்டும் என்று சர்க்கார் முடிவு செய்திருப்பதை சந்தோஷமாக ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**Mr. SPEAKER** : இப்போது மணி பன்னிரண்டு ஆகிவிட்டது. விதிப்படி இந்த மானியத்தை நான் வோட்டுக்கு விடவேண்டும். கனம் மந்திரி அவர்களை முடித்துக் கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இன்னும் எனக்குப் பத்து நிமிஷங்கள் தேவை. விதிப்படி நான் முடித்துக்கொள்ள வேண்டும் என்றாலும், அந்த விதியை மாற்றுவதற்கு சபைக்கு அதிகாரம் இருக்கிறது.

**Mr. SPEAKER** : விதியை மாற்ற சபைக்கு அதிகாரம் உண்டு என்றாலும் விதியை சபை மாற்றுதவரையில் நான் விதிப்படிதான் நடக்கவேண்டும்.

## VI.—MOTION FOR THE SUSPENSION OF RULE 154 (3) OF THE ASSEMBLY RULES.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : Sir, I move—

"That Rule 154 (3) of the Assembly Rules be suspended till the reply to the debate on the Educational Demand is finished."

**Mr. SPEAKER** : According to the rules, the Demand must be put to vote at 12 noon. But if the House desires to extend the time limit, I have no objection.

I now put the motion to the vote of the House. The question is—

"That Rule 154 (3) of the Assembly Rules be suspended till the reply to the debate on the Education Demand is finished."

The motion was put and carried.

## (1) DEMAND RV—EDUCATION—*cont.*

**The Hon. Sri C. SUBRAMANIAM** : தமிழாசிரியர்களைப்பற்றி சிலர் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய கஷ்டங்களையும் சம்பளத்தில் இருக்கக்கூடிய குறைபாட்டையும் சொன்னார்கள். அதை நீக்கவேண்டும் என்பது தான்

சர்க்காரின் கொள்கை. அதுவும் முக்கியமாக இந்தி ஆசிரியர்களுக்கு பயிற்சி பெறும் காலத்தில் உதவித்தொகை 30 ரூபாய் கொடுக்கப்படுகிறது, தமிழாசிரியர்களுக்கு மிகவும் குறைவாகக் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதற்கு நான் என்ன சமாதானம் சொல்வேனோ என்று யோசிக்கவேண்டாம். இந்தி பண்டிட்டுக்களுக்கு கொடுப்பது போலவே தமிழ் பண்டிட்டுகளுக்கும் கொடுக்கவேண்டுமென்பதாக இதற்கு முன்பே உத்திரவு போட்டாய் விட்டது என்கிற சமாதானத்தைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (கரகோஷம்).

இன்னும் ஏதாவது குறைபாடுகள் இருந்தாலும், அவற்றை நீக்கி, மற்றவர்களை விட அதிக அந்தஸ்து உடையவர்களாகச் செய்யாவிட்டாலும், சம அந்தஸ்துடன் சேவை செய்வதற்கு வேண்டிய வாய்ப்பை உண்டு பண்ணிக் கொடுக்கவேண்டும் என்பதுதான் சர்க்காரின் கொள்கை. பல அங்கத்தினர்களையும் கலந்துகொண்டு அவர்கள் எடுத்துச் சொல்கின்ற யோசனைகளின்படி எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

அதற்கு அடுத்தபடியாக இந்தியைப் பற்றிச் சொன்னார்கள். இந்தியை எடுத்துவிடவேண்டும் என்று சொன்னார்கள். என்னுடைய சொந்தக் கருத்தைச் சொல்லுகிறேன். தமிழ்நாடு பிரிந்து தனி நாடாகத்தான் இருக்கவேண்டுமென்று நாம் முடிவு செய்தால் இந்தி படிக்க வேண்டிய அவசியமே இல்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய அளவில் சர்க்காரின் கொள்கை என்ன என்பதை நேற்றும் கூட சபையில் விளக்கினேன். ஒரு ஐக்கிய இந்தியா, ஒன்றுபட்ட இந்தியாதான் இருக்கவேண்டுமென்று நாம் விரும்பினால் ஐக்கிய இந்தியாவுக்கு ஒரு பொதுமொழி இருக்கத்தான் வேண்டும். அந்தப் பொதுமொழி இந்தியாக முடிவு செய்யப்பட்டதனால் இந்தி மொழியை நாம் கற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். கற்காவிட்டால் பின்னால் குறை சொல்லிப் பிரயோசனம் இல்லை. மத்திய அரசாங்க உத்தியோகங்கள் எல்லாம் இந்தி தெரிந்தவர்களுக்குத்தான் கொடுக்கப்படும் என்றால் அப்போது நம்முடைய வாலிபர்கள் இந்தியைக் கற்காத காரணத்தால் அந்த உத்தியோகங்களுக்குப் போகக்கூடிய தகுதியையே இழந்துவிடுகிறார்கள். ஆங்கிலம் படித்தால்தான் உத்தியோகம் என்னும் போது ஆங்கிலம் படிக்காதவர்கள் உத்தியோகத்திற்குப் போக முடியாது திண்டாடியதைப்போன்ற நிலைமை உண்டாகிவிடும். இதே நிலைமையை உண்டாக்க யாராவது விரும்பினால் இந்தியைக் கற்கவேண்டாம் என்பதாகக் கிளர்ச்சி செய்யலாம். நாம் ஐக்கிய இந்தியாவின் ஒரு உறுப் பாகத்தான் இருக்கவேண்டுமென்று முடிவு செய்துவிட்டால் நிச்சயமாக இந்தியைக் கற்கத்தான் வேண்டும். ஐக்கிய இந்தியாவில் ஒரு உருப்பாக இருக்கும் வரையில் இந்தியைக் கற்க வேண்டாம், படிக்கவேண்டாம் என்று சொல்கிறவர்கள் வருங்காலச் சந்ததிகள் மத்திய சர்க்கார் உத்தியோகத்திற்கு போகமுடியாத ஒரு சூழ்நிலையை உண்டாக்கிவிடுகிறார்கள் என்பதை மறுக்கமுடியாது. சபை எப்படி முடிவு செய்தாலும் அதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். பொதுவாக இந்தியை எதிர்கிறவர்கள் தமிழ் மொழிக்கு உதவி செய்கிறவர்களாக நினைக்கிறார்கள். என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல விரும்புகிறேன். கூடிய சீக்கிரம் அவர்களே உணர்வார்கள். " தமிழர்களுக்கு, தமிழ் மொழிக்கு அவர்கள் பெரிய அநீதியை இழைத்தவர்களாகத்தான் ஆவார்கள்" என்பதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

Sri A. Govindasamy rose.

MR. SPEAKER : The Hon. Minister is not yielding.

THE HON. SRI C. SUBRAMANIAM : மொழியின் மூலமாக உணர்ச்சியை வெகு சுலபமாக தட்டிவிடமுடியும். " இந்தி மொழி நமக்கு வேண்டாம், வடநாட்டு ஆதிக்க மொழி அது " என்றெல்லாம் நம்முடைய வாலிபர்களிடத்திலே சொல்லி, இந்தியைக் கற்பதன் மூலம் தமிழ் அழிந்துவிடும் என்பதாகச் சொன்னால் அவர்கள் நிச்சயமாக உணர்ச்சி வசப்பட்டு இந்தி வேண்டாம் என்று கற்காமல் விட்டுவிடக்கூடும். அது நன்மையா ?



அப்படி அவர்களுடைய உணர்ச்சியை கிளப்பி விடலாமா? என்பதை பொறுப்புள்ள நாம்தான் யோசித்துப் பார்க்கவேண்டும். நல்லது எது, தீயது எது என்பதை உணர்ந்து நல்லதை எடுத்துச் சொல்வதனால் சில பேர்களுடைய விரோதம் மனக்கசப்பு ஏற்பட்டாலும் கூட அதைப் பொருட்படுத்தாமல் நல்லதையே எடுத்து வலியுறுத்த வேண்டிய கடமை யுள்ளவர்களாகிய நாம் அந்த வகையில் செய்யாவிட்டால் மக்களிடத்தில் எதைச் சொன்னால் கைதட்டுகளைப் பெறலாம், அவர்களுடைய ஆதரவைப் பெறலாம், என்பதாக சுயநலத்தோடு எண்ணிக்கொண்டு சொன்னவர்களாகவே நாம் ஆவோம். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் இந்தியை நாம் கற்றுக்கொள்ளவேண்டாம் என்று சொன்னால் நல்லதைச் சொல்லாமல் சுயநலத்தோடு சொன்னவர்களாக வருங் காலச் சந்ததிகளுக்குத் தீமை விளைவிக்கும் கருத்தை சுயநலத்தோடு சொன்னவர்களாகத்தான் ஆவோம் என்பது என்னுடைய அபிப்பிராயம். இதை யோசித்துப் பார்க்கவேண்டும் என்று சொல்லி விட்டு விடுகிறேன்.

அடுத்தபடியாக கல்லூரிகளைப்பற்றி பல அங்கத்தினர்கள் பேசினார்கள். இன்றைக்குக் கல்லூரிகள் அதிகம் இருக்கின்றன. முன்பு தஞ்சாவூரிலே ஒரே ஒரு கல்லூரிதான் கும்பகோணத்தில் இருந்தது. இப்போது ஐந்து கல்லூரிகள் தஞ்சை ஜில்லாவில் இருக்கின்றன. இன்றைக்குக் கேள்விப்பட்டேன் ஒரு கல்லூரியை இந்த மாதம் ஆரம்பிக்கலாமா, செப்டம்பரில் ஆரம்பிக்கலாமா, என்பதாகவெல்லாம் யோசித்துக்கொண்டு இருக்கிறார்கள். என்ன காரணம்? மாணவர்கள் இன்னும் வந்துசேரவில்லை. பொதுவாக இன்றைக்கு மாணவர்களுடைய மனோபாவம் எப்படி இருக்கிறது என்றால் எல்லோரும் லயோலா காலேஜில் சேரவேண்டும் என்று விரும்புகிறார்கள். கிரிஸ்டியன் காலேஜில் விண்ணப்பம் போடுகிறார்கள். காரணம் சில காலேஜ்களுக்கு ஒரு சிறப்பும் பெருமையும் ஏற்பட்டிருக்கின்றன. அதை மறுக்கவில்லை. எல்லோரும் ஒரு காலேஜுக்கே விண்ணப்பம் போட்டுக்கொண்டு இடம் கிடைக்கவில்லை என்று திண்டாடுகிறார்கள் என்பதற்குச் சொல்கிறேனே ஒழிய பல இடங்களில் பல கல்லூரிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. கல்லூரிகள் போதாது என்று சொல்ல முடியாது.

இன்றைக்கு அவர்களுக்கு வேண்டிய கல்லூரிகளில் இடம் கிடைக்கவில்லை என்பதுதான் பிரச்னை. திருநெல்வேலியிலிருப்பவர்கள்கூட சென்னையில் உள்ள லயோலா கல்லூரியில் சேரவேண்டும் என்று சொல்லுகிறார்கள். தஞ்சையில் உள்ளவர்கள், அங்கே எத்தனையோ கல்லூரிகள் இருந்தும், சென்னையில் உள்ள கல்லூரிகளில் இடம் இல்லாமல் இருந்தால்தான் அங்கே போய் சேருகிறார்கள். போதுமான கல்லூரிகள் ஆரம்பித்து வைத்து இருக்கிறோம். அந்த கல்லூரிகளில் அவைகளுடைய தரத்தை எப்படி உயர்த்தவேண்டும் என்பதைத்தான் இன்று நாம் யோசிக்கவேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். எவ்வளவுக்கெவ்வளவு கல்லூரி படிப்பில் தரத்தை உயர்த்துகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு கீழ்படியிலுள்ள மற்ற படிப்புகளில் தரம் உயரும். ஆகையால்தான் கல்லூரி படிப்புக்கு இன்றைக்கு முக்கியத்துவம் காட்டி வருகிறோம். கீழே இருப்பவர்களுக்கு படிப்பு சொல்லி கொடுப்பதற்கும் மற்ற விவகாரங்களை நடத்துகிறவர்களுக்கும் அது அவசியமாகிறது. இன்றைக்கு கல்லூரிகளில் தரத்தை உயர்த்துவது எப்படி என்பதுதான் முக்கியமான பிரச்னை. நல்ல ஆசிரியர்கள் கிடைப்பதில்லை. அதற்கு முக்கிய காரணம், ஊதிய குறைவுதான். நன்றாக படித்துப் பட்டம் பெற்றவர்கள் முதலிலேயே ஆசிரியர்களாக வேலை புரிய வருவதில்லை. அதற்கு காரணம் ஊதிய குறைவும் மதிப்பு இல்லாமையும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் முதலியவைகளுக்கு மனு செய்து பார்த்து விட்டு அவை ஒன்றும் கிடைக்காமல் போனால்தான் ஆசிரியர் தொழிலுக்கு வருகிறார்கள். இந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும். கல்லூரிகளிலேயே அதிகமாக செலவழிப்பதற்கு பதிலாக ஆரம்பப் பள்ளியிலே அதிகம் செலவழிக்க வேண்டும் என்று சிலர் நினைத்தாலும் கூட, கல்வி தரத்தை உயர்த்துவதற்கு அந்த ஆசிரியர்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்ற கருத்தை டாக்டர் தேஷ்முக் அவர்கள் கூட சமீபத்தில் பேசும்போது உணர்த்தி இருக்கிறார்கள்.

Pre-University சம்பந்தமான recordகளை பார்த்தபொழுது சில முக்கியமான கஷ்டங்கள் ஏற்பட்டு இருப்பதை நான் பார்த்தேன். இப்பொழுது தொழில் கல்லூரிகளில் சேருவதற்கு Pre-professional course என்று ' வைத்திருக்கிறோம். அதற்கு விண்ணப்பங்கள் போடவேண்டும் என்ற விஷயம் பலருக்கு தெரியவில்லைபோல் இருக்கிறது. ஆகையால் அதற்கு போதுமான அளவு விண்ணப்பங்கள் வரவில்லை. சென்ற வருஷம் இன்டர்மிடியட் பாஸ் செய்தவர்கள் ஒரு ஸ்தானத்திற்கு இரண்டு மூன்று பங்காக விண்ணப்பங்கள் போட்டிருந்தார்கள். அந்த நிலைமை இப்போது இல்லை. Pre-professional course என்பது ஒன்று இருக்கிறது பலருக்கு தெரியவில்லை. இன்ஜினீயரிங் கல்லூரிக்கும், Veterinary college-க்கும் பல ஜில்லாக்களிலிருந்து போதுமான அளவு விண்ணப்பங்கள் வரவில்லை. அக்ரிகல்ச்சர் கல்லூரிக்கும் போதுமான விண்ணப்பங்கள் வரவில்லை. இந்த நிலைமையை யோசித்துப் பார்க்கவேண்டிய அவசியம் இருக்கிறது. என்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று யோசித்துக்கொண்டுதான் இருக்கிறோம். Pre-professional course ஆல் அல்ல சில கஷ்டங்கள் ஏற்பட்டு இருக்கிறது. இதை ஆராய்ந்து கொண்டுதான் இருக்கிறோம். ஆராய்ச்சி செய்து பார்க்கும்போது எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்பது மேலும்மேலும் வலியுறுத்தப்படுகிறது. ஆனால் முடிவு செய்தாகிவிட்டது. அந்த முடிவு ஏற்பட்டுவிட்ட பிறகு, கஷ்டங்களை எப்படி நீக்குவது என்பதைப் பற்றி சர்க்கார் ஆலோசனை செய்துகொண்டு வருகிறார்கள். அப்படி நீக்கும் முறையில் தரத்தை உயர்த்துவதற்கும் படிப்பை நல்ல முறையில் சொல்லி கொடுப்பதற்கும் வேறு வழி ஏற்படுத்தலாமா என்று ஒரு திட்டத்தை ஆலோசனை செய்துகொண்டு இருக்கிறோம். இந்த திட்டத்தை முடிவுசெய்து சபைமுன் உங்கள் விவாதத்திற்கு வைக்கப்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அநேகமாக இங்கு சொன்ன எல்லாவற்றிற்கும் ஓரளவு பதில் சொல்லி இருக்கிறேன் என்று நினைக்கிறேன். சில நுணுக்மான விஷயங்களுக்கு பதில் சொல்லாமல் இருக்கலாம். அவைகளை ஆராய்ந்து பார்த்து இன்னும் கல்வி தரத்தை உயர்த்த தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கல்வி தரத்தை உயர்த்தவேண்டு மென்றும் சிறந்த முறையில் சேவை செய்ய வேண்டுமென்றும் கல்வி துறையில் வேலை செய்து வருகிறவர்கள் எல்லோரும் உணர்ந்து இருக்கிறார்கள். நல்ல முறையில் அவர்கள் வேலைசெய்து கொண்டு வருகிறார்கள். அதனால்தான் இத் துறையில் இவ்வளவு பெருக்கம் ஏற்பட்டுள்ளது. கல்வி துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றால் மந்திரிகள் அதற்கு முக்கிய காரணமல்ல. அவர்கள் கொள்கைகளை வகுக்கிறார்கள் ; ஆனால் இன்று ஏற்பட்டு இருக்கிற முன்னேற்றத்திற்கு முக்கிய காரணம் கல்வித்துறையில் இருக்கிற அதிகாரிகள் எல்லோரும் நல்ல மனப்பான்மையுடன் சேவை செய்து கொண்டு வருகிறார்கள். இதுவரையில் ஆதாரக் கல்வியை தனிப்பட்ட நபர்கள் கவனிக்க வேண்டியது என்று ஒதுக்கி வைத்து இருந்தோம். இன்றைக்கு நிலைமை அப்படி அல்ல. டைரக்டர் அவர்களே பொறுப்பாளியாக பங்கு எடுத்துக்கொண்டு வேலைசெய்து வருகிறார்கள். முன்பெல்லாம் நமது ராஜ்யத்தை இரண்டாகப் பிரித்து இரண்டு அதிகாரிகளை நியமித்து அவர்களை இந்த முறையை மேற்பார்க்கும்படி செய்திருந்தோம். இன்றைக்கு அப்படி இல்லாமல் District Educational Officers எல்லோருக்கும் ஆதாரக்கல்வி பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த பயிற்சி நடந்துக்கொண்டிருந்தபோது அதை பார்த்துவிட்டு என்னிடம் வந்து அந்த அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மன மாற்றத்தை பற்றி சொன்னபொழுது நான் மிகவும் பெருமைப்பட்டேன். வயது முதிர்ந்தவர்களும் கூட இந்த பயிற்சிக்கு சென்று, காலையில் நான்கு, ஐந்து மணிக்கு எழுந்து வெயிலையும் பாராமல் வேலை செய்யவேண்டும் என்ற அடிப்படையில் நல்ல பயிற்சி பெற்று நல்ல மனப்பான்மையை வெளிப்படுத்தினார்கள் என்பதை கேள்விப்பட்டபொழுது நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். இந்த சபையும் அதைப்பற்றி பெருமைப்படும் என்று நினைக்கிறேன். இந்த நல்ல சேவையை செய்யக்கூடிய அதிகாரிகளும் ஆசிரியர்களும் எவ்வளவுக்கெவ்வளவு சிறந்தவர்களாக இருக்கிறார்களோ



அவ்வளவுக்கவ்வளவு கல்வி தரம் உயரும். அதற்கு மேலாக ஆசிரியர்களுக்கு புதிய வாழ்வும் புதிய மதிப்பும் கொடுப்பதற்கு சபையிலுள்ளவர்கள் முன் வரவேண்டும். மேன்மேலும் புதிய மதிப்பும் புதிய உற்சாகமும் அவர்களுக்கு ஏற்படுத்தி அதன் மூலம் நல்ல உயர்ந்த கல்வி, ஒழுக்கம்தரும் கல்வி, ஆக்கம் தரக்கூடிய கல்வி நம் நாட்டில் வளரவேண்டும் என்று பிரார்த்தித்து இந்த மான்யத்தின் கீழ் இன்னும் அதிகமான தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்று எல்லோரும் சொல்லியிருப்பதால் சம்பிரதாயப்படி இந்த மான்யத்தின் கீழ் கோரப்பட்ட தொகையை குறைக்கவேண்டும் என்று பிரேரேரிக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக்கொண்டு இந்த மான்யத்தை ஏக மனதாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**Sri K. ANBAZHAGAN :** Sir, on a point of information. கல்வி நிதி அமைச்சர் அவர்கள் இந்தியை பயின்று கொண்டால்தான் எதிர்காலத்தில் வேலை கிடைக்கும் என்றும் ஆங்கிலத்தை பயிலாதவர்களுக்கு வேலை கிடைக்காமல் போனதுபோல இந்தியை பயிலாதவர்களுக்கும் வேலை கிடைக்காமல் போகலாம், என்றும் தெரிவித்தார்கள். அப்படியானால் ஆங்கிலம் போல் இந்தியும் ஓர் ஆதிக்க மொழி என்று அமைச்சர் ஒப்புக் கொள்ளுவார்களா ?

ஓராசிரியர் பள்ளிகளில் ஆசிரியர்களாக இருப்பவர்கள் பயிற்சிபெற்றிருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். பயிற்சிபெறும் காலத்தில் பல இடையூறுகள் ஏற்படுவதினாலும் அதனால் அவர்களுடைய வாழ்க்கை நடத்தமுடியாமல் அவதிக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்ற காரணத்தினாலும் அவர்களுக்கு தக்க ஊதியம் தரப்படுமா என்கின்ற எதிர் கட்சி உறுப்பினர்களின் கேள்விக்கு விடையும், அதேபோல் செங்கல்பட்டு மாவட்டத்தில் தொழில் துறை ஆசிரியர்களுக்கு ரூபாய் பத்து வழங்கப்படுகிற இந்த முறையை மாற்றுவதற்கு கல்வி அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் தருவாரா என்றும் அறிய விரும்புகிறேன்.

**Sri T. P. ELUMALAI :** On a point of order. கனம் நிதி அமைச்சர் பதில் அளித்த பிறகு ஒரு அங்கத்தினர் ஒழுங்கு பிரச்னையை எழுப்பலாமா ?

**Mr. SPEAKER :** கனம் அங்கத்தினர் அன்பழகன் கேட்டது point of order அல்ல point of information தான்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** முதலிலே இந்தியைப் பற்றி என் அபிப்பிராயத்தை சொன்னேன். நம் நாட்டின் அரசியல[illegible] வட நாட்டு ஆதிக்கம் என்று நினைக்கிறவர்கள் இதை ஆதிக்க மொழி என்று எடுத்துக்கொள்ளலாம். அதனால் நாம் எல்லோரும் பாரத தேசம் ஒன்று என்று நினைக்கின்றவர்கள் இதை நம் நாட்டு மொழியாக எடுத்துக் கொள்ளலாம். (கரகோஷம்.)

இன்று எஸ்.எஸ்.எல்.ஸி. படித்துவிட்டு, பயிற்சிக்குப் போகிறவர்களுக்கும், இவர்களுக்கும் ஒரேமாதிரியாக 18 ரூபாய் தான் ஸ்டைபண்டு கொடுக்கப்படுகிறது. இவர்கள் நான்கு ஐந்து வருஷங்கள் ஆசிரியராகப் பணியாற்றிவிட்டுப் பயிற்சிக்குப் போவதால் இவர்கள் விஷயத்தில் ஏதாவது கஷ்டம் இருக்குமானால் அதைப் பரிசீலனை செய்து பார்த்தபிறகே என்ன செய்யலாம் என்று சொல்லமுடியும். முடிவாக எதையும் எடுத்துக் கொள்ளக்கூடாது.

இன்றைக்கு Craft instructors களுக்கு பத்து ரூபாய் தரப்படுவதாக சொன்னார்கள். இவர்கள் வேலை எப்படி, எவ்வளவு நேரம் வேலை செய்ய வேண்டுமென்று உடனடியாகச் சொல்ல என்னிடம் புள்ளி விவரம் இல்லை. ஆனால் part-time craft instructors களுக்குத்தான் பத்து ரூபாய் கொடுக்கப்படுகிறது. Full-time craft instructors களுக்கு குறிப்பிட்ட

64783

[Sri C. Subramaniam] [17th July 1957

அளவு கொடுக்கப்படுகிறது. நான் கல்வி மந்திரியாக இருந்தாலும் இந்தச் சம்பள விகிதம், வேலை நேரம் போன்ற எல்லாவற்றையும் மனதில் வைத்திருக்கமுடியாது. விவாதத்தில் நான் பல விஷயங்களுக்குப் பதில் சொல்லாவிட்டாலும் அவை எல்லாவற்றையும் பின்னர் கவனிக்கிறேன். அங்கத்தினர்கள் தனித்தனியாக எந்த விஷயத்தைப்பற்றி எழுதினாலும் நான் அதை கவனித்து உறுதியாகப் பதில் அளிப்பேன்.

**Mr. SPEAKER** : கனம் அங்கத்தினர் ஸ்ரீ எம். பி. சுப்ரமணியம் அவரது வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**Sri M. P. SUBRAMANIAM** : இல்லை, வற்புறுத்துகிறேன்.

**Mr. SPEAKER** : The question is—

"That the allotment of Rs. 11,73,63,100 under Demand No. XV—Education be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

**Mr. SPEAKER** : I now put the main motion to the vote of the House. The question is :

"That the Government be granted a sum not exceeding Rs. 11,73,63,100 under Demand No. XV—Education."

The Demand was put and carried and the Grant was made.

(2) DEMAND XVI—MEDICAL—RS. 4,03,74,300.

(3) DEMAND XVII—PUBLIC HEALTH—RS. 95,98,200.

(4) DEMAND XXXVII—CAPITAL OUTLAY ON PUBLIC HEALTH—RS. 1,44,79,400.

**Mr. SPEAKER** : The Demands to be taken up now are Medical, Public Health, and Capital Outlay on Public Health. The time allowed for the discussion of these Demands is three hours. There will be discussion for two hours to-day and one hour to-morrow. We have already spent twenty minutes more. Is it the desire of the House that we should sit twenty minutes more after 2 o'clock or is it the desire of the House to reduce the time by 20 minutes.

**Sri M. P. SUBRAMANIAM** : We can have these 20 minutes to-morrow.

**Mr. SPEAKER** : That will have repercussions on other Demands. The House must decide whether the time-limit must be cut by 20 minutes or it should sit for twenty minutes more after 2 p.m. I should like to have the decision of the House. If I am unable to provide twenty minutes more, the House must be satisfied with one hour to-morrow.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : In the Question-hour to-morrow, there may be some time available. We will take the chance.



17th July 1957]

**The Hon. Sri M. A. MANICKAVELU** : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,03,74,300 under Demand No. XVI—Medical."

On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 95,98,200 under Demand No. XVII—Public Health."

On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,44,79,400 under Demand XXXVII—Capital Outlay on Public Health."

**The Hon. Sri M. A. MANICKAVELU** : கனம் சபாநாயகர் அவர்களே, சில விவரங்களை நான் முன்னாலேயே எடுத்துச் சொன்னால், கனம் அங்கத்தினர்கள் இந்த மானியத்தைக் குறித்துப் பேசும்போது அவை அவர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என்று எண்ணி நான் இப்போது அந்த விவரங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1956–57-ம் வருஷத்திற்கு முன்பு கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிகளின் மொத்தப் படுக்கை அளவு (பெட் ஸ்ட்ரெங்த்) 11,888 ஆக இருந்தது. அது 1956–57-ல் 12,238 ஆக அதிகரிக்கப்பட்டது. இந்த வருஷம் அது 12,357-ஆக ஆகும்.

ஜில்லாத் தலைநகர் ஆஸ்பத்திரிகளில் "ப்ளட் டரான்ஸ்ப்யூஷன்"-க்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எல்லா சர்க்கார் ஆஸ்பத்திரிகளிலும் அதற்கு வசதி இருக்கிறது. இந்த வருஷம் இந்த ஏற்பாட்டைத் தாலூகா தலை நகர் ஆஸ்பத்திரிகளுக்கும் விஸ்தரிக்கும் உத்தேசத்தோடு நடவடிக்கை எடுக்கப்படும். கும்பகோணம், கூனூர் ஆஸ்பத்திரிகளுக்கும் இந்த வசதி செய்து கொடுக்கப்படும். இது வரையில் இரத்த தானம் கொடுப்பவர்களுக்கு 5 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. அந்தத் தொகை குறைவாக இருப்பதால் அது 7 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் குறைந்தது 50 நோயாளிகளுக்காவது இடம் இருக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய வைத்திய வசதிகளுக்கும், ரண சிகிச்சை வசதிகளுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.

இப்போது ஆங்காங்கு "ப்ரைமரி ஸெண்டர்ஸ்" என்ற ஆஸ்பத்திரிகள் திறக்கப்பட்டு வருகின்றன. இந்த வருஷம் சுமார் 34 இடங்களில் ப்ரைமரி ஸெண்டர்ஸ் ஏற்படுத்தப்படும். ஒவ்வொரு ப்ரைமரி ஸெண்டரிலும் ஒரு வைத்தியரும், ஒரு சுகாதார இன்ஸ்பெக்டரும், நான்கு மருத்துவ உதவியாளர்களும், ஒரு பார்மஸிஸ்டும், இதர சிப்பந்திகளும் இருப்பார்கள். ஒவ்வொரு ப்ரைமரி ஸெண்டருக்கும் ஒரு ஜீப் காரும் உண்டு. அந்த ஜீப் காரின் மூலம் பக்கத்திலுள்ள கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு வைத்திய உதவி அளிக்கிறார்கள்.

வைத்தியத்தில் "போஸ்ட் கிராஜுவேட்" படிப்புக்கு இப்போது சென்னையில் இருக்கும் வைத்தியக் கல்லூரிகளில், ஏற்கனவே மூன்று டிபார்டுமெண்டுகளில் "அப்கிரேட்" செய்து வசதி செய்யப்பட்டிருக்கிறது. அவை Department of Obstetrics and Gynaecology-யும், Department of Anantomy-யும் Department of Venereology-யும் ஆகும். ரேடியோலாஜி டிபார்ட்மெண்டையும் "அப்கிரேட்" செய்து அதில் உயர்தரப் படிப்பிற்கு வசதிசெய்து கொடுக்கப்படும். Social and Preventive Medicines படிப்பிற்கும் வசதி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

மதுரை வைத்தியக் கல்லூரி சமீபகாலத்தில்தான் திறக்கப்பட்டது. அங்கே இப்போது எல்லா வசதிகளும் இல்லை. அங்கே இனிமேல் காது, மூக்கு, தொண்டை ஆகிய அவையவங்கள் சம்பந்தமான நோய்களுக்கு சிகிச்சை செய்வது சம்பந்தமான டிபார்டுமெண்டுகளும், க்ஷயரோகம் போன்ற வியாதிகளின் சிகிச்சை டிபார்டுமெண்டுகளும் திறக்கப்படும் ; பல் நோய்கள் சிகிச்சை டிபார்டுமெண்டும் திறக்கப்படும்.

வைத்தியக் கல்வியை நன்ருக அளிப்பதற்காக வைத்தியர்களுக்கு நல்ல பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேல்நாடுகளில் வைத்தியம் சிறந்த முறையில் இருக்கிறது. ஆகவே அந்த நாடுகளுக்கு வைத்தியர்களை அனுப்பி தேர்ச்சிபெறச் செய்வதற்காக வருஷா வருஷம் 5 திறமையுள்ள வைத்தியர்கள் மேல்நாடுகளுக்கு அனுப்பப்படுகிருர்கள்.

வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதி வசதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அறுநூறு மாணவர்களுக்கு விடுதி வசதி அளிப்பதற்கு இப்போது கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இதற்கு 24 லட்ச ரூபாய் செலவாகும். மேலும், 80 ஹவுஸ் ஸர்ஜன்களுக்கு இருப்பிட வசதி அளிப்பதற்காக கட்டிடம் கட்டப்படுகிறது.

மேலும், சென்னையில் ஸைகாலஜி டிபார்டுமெண்டுக்கும், பார்மகாலஜி டிபார்ட்மெண்டுக்கும், கெமிஸ்டிரி ப்ளாக்கிற்கும் கட்டிடம் கட்டுவதற்காக, பத்தொன்பதே லட்சத்திச் சொச்சம் ரூபாய் செலவிடப்படும்.

பல் நோய் சிகிச்சைக்கு, எல்லா ஜில்லா தலைநகர் ஆஸ்பத்திரிகளிலும் இந்த ஐந்தாண்டு கால முடிவிற்குள் வசதி செய்து கொடுக்கப்படும். இந்த வருஷம், தெற்கு தஞ்சாவூர், மதுரை, பாளையங்கோட்டை, கடலூர், திருச்சி ஆகிய ஐந்து ஜில்லாக்களில் ஏற்பாடு செய்யப்படும்.

கெட்ட வியாதிகளைத் தீர்ப்பதற்கான கிளினிக்குகளுக்கு, இந்த வருஷத்தில், கடலூர், வேலூர், கோயம்பத்தூர், மதுரை, ராமனுதபுரம் ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப்படும்.

க்ஷய ரோகத்தைத் தீர்ப்பதற்காக 30 படுக்கைகளுடன் உள்ள க்ளினிக்குகளுக்கு, ஒவ்வொரு ஜில்லா தலைநகர் ஆஸ்பத்திரியிலும், இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் ஏற்பாடு செய்யப்படும்.

தண்ணீர் பரிசோதனை, உணவுப் பொருள்கள் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை ஆகியவைகளைச் செய்வதற்கான லாபரெடரி எல்லா ஜில்லாத் தலைநகர் ஆஸ்பத்திரிகளிலும் இருக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த லாபொரெடரிகள் திருநெல்வேலியிலும், வேலூரிலும் ஏற்கெனவே திறக்கப்பட்டிருக்கின்றன ; சேலத்திலும், தஞ்சாவூரிலும் கூடிய சீக்கிரம் திறக்கப்படும்.

குடும்பக் கட்டுப்பாடு ஒரு பெரிய பிரச்சனையாக இருக்கிறது. இந்த விஷயத்தில் நமது ராஜ்யம்தான் ரொம்ப முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று மத்திய அரசாங்கத்தார் சொல்கிருர்கள். இந்த வருஷத்தில், நகரங்களில் 9 இடங்களிலும், கிராமாந்தரங்களில் 74 இடங்களிலும் குடும்பக் கட்டுப்பாடு க்ளினிக்குகளுக்கு ஏற்பாடு செய்யப்படும்,

நம் மாகாணத்தில் " **Family Planning Board** " என்ற ஒரு குழு இருக்கிறது. அது எப்படி எந்த விதமாக காரியங்களைச் செய்யவேண்டும் என்று ஆராய்கிறது. ஜனங்களுக்கு பிரசாரம் செய்வதற்காக ஆங்கிலத்திலேயும் தமிழிலேயும் ஒரு புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. அங்கத்தினர்களுக்கு அது கிடைத்ததோ, இல்லையோ என்பது தெரியாது. அங்கத்தினர்களுக்கு அது வேண்டுமென்ருல் அதை அவர்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்கிறேன். இந்த விஷயத்திலே பயிற்சி கொடுப்பதற்கு சென்னையிலேயே ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

மத்திய அரசாங்கம் பம்பாயில், குடும்ப கட்டுப்பாடு விஷயமாக நல்ல முறையில் பயிற்சி கொடுப்பதற்காக ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்க போகிருர்கள். அதில் டாக்டர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி கொடுக்கப்படும்.





" நர்சிங் " இதை நல்ல வகையிலேயே இன்னும் நல்ல மாதிரியாக அவர்கள் வேலை பார்ப்பதற்கு அவர்களை மேற்பார்வை பார்ப்பதற்கு எட் நர்ஸ் வார்டனுகை நியமித்து அவர்களுடைய பணியை இன்னும் நல்ல வகையிலேயே செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஒவ்வொரு வருஷத்திலும் அதிகப்படியாக 29 நர்ஸ்கள் எடுத்து அவர்களுக்கு புதிய முறையில் " டிரெயின்ங் " கொடுப்பதற்கு ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. இதுவும் அல்லாமல் " ஆக்ஸிலியரி நர்ஸ் " என்று பிரசவம், மற்ற விஷயங்களில் சிறந்த பயிற்சி கொடுக்க வருஷத்துக்கு 30 பேராக எடுக்க ஒரு திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்றும் " **Public Health with Basic Nursing** " என்பதில் வருஷத்திற்கு 12 நர்ஸ்களுக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடு ஆகிக்கொண்டிருக்கிறது. " **Refresher Course** " என்ற வகையில் நர்ஸ்களுக்கு புதுப்புது முறையில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

நம் நாட்டு வைத்திய முறை இருக்கக்கூடிய கல்லூரிகளில் சில் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அங்கு தற்கால முறையில் ஒரு " லாபரெட்டரி " ஏற்பாடாகியிருக்கிறது. " எக்ஸ்ரே டையக்னுஸ்டிக்ஸெட் " ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. " பேதாலஜி, பிஸியாலஜி " டிபார்டுமெண்டுகள் ஏற்படுத்த ரூ. 1,25,000 யில் கட்டடம் கட்ட ஏற்பாடாகியிருக்கிறது. அதோடு " **Medico-Legal** " என்ற விஷயத்தைப் பற்றியும் " **Preventive Social Medicine** " என்ற விஷயத்தைபற்றியும் அங்கு சொல்லிக்கொடுக்கப்படும். " **House Surgeons** " அந்தக் கல்லூரியில் இது வரையில் இலே. அதற்கும் இப்பொழுது ஏற்பாடாகியிருக்கிறது. " **Post-Mortem** செய்து **Certificate** " கொடுக்கவும் அவர்களுக்கு இப்போது உரிமை ஏற்பட்டிருக்கிறது. " **Employees State Insurance Scheme** " என்று ஒன்று ஏற்படுத்தி நம் ராஜ்யத்தில் 8 இடங்களில் அந்த மாதிரியான " டிஸ்பென்ஸரிகள் " இருக்கின்றன. மதுரையில் 6, விக்கிரமசிங்கபுரத்தில் 1, தூத்துக்குடியில் 1 அம்பாசமுத்திரத்திலும், ' பாபநாசத்திலும் ', " பார்ட் டைம் " டாக்டர்கள் ஏறபடுத்தப்பட்டிருக்கிருர்கள். ஆஸ்பத்திரி வசதி பெறுவதற்காக, ஆஸ்பத்திரிகளில் அவர்களுக்கு இடம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக மதுரை மிஷின் ஆஸ்பத்திரியிலும், தூத்துக்குடி, அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை முதலிய சர்க்கார் ஆஸ்பத்திரிகளிலும் இம்மாதிரியான இன்ஷ்யூரன்ஸ் தொழிலாளர்களுக்கு வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சென்னையில் " **Mobile Van Dispensary** " ஏற்படுத்தி தொழிலாளர்கள் வசிக்கும் இடத்திலேயே போய் வைத்திய வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது வரை வைத்தியத் துறையைப் பொறுத்தது.

சுகாதாரத் துறையில் பிற்போக்கான பிராந்தியங்கள் என்று சொல்லப்படும் 19 இடங்களில் 1956-ஆம் வருஷத்தில் " **Maternity and Child Welfare Centres** " திறக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஐந்து ஆண்டு திட்டத்தில் 480 இடங்களில் இம்மாதிரியான " **Maternity and Child Welfare Centres** " ஏற்படுத்தப்படவேண்டும். 1956-57ல் 96 இடங்களில் ஏற்கனவே திறக்கப்பட்டிருக்கின்றன். 1957-58-ல் மற்றும் 96 இடங்களில் " **Maternity and Child Welfare Centres** " திறக்கப்படும். அதோடு " **Health Visitors** "க்கும் " தாய் " அல்லது " தாதிகளுக்கும் " சிறந்த பயிற்சி கொடுப்பதற்கும் ஏற்பாடு ஆகியிருக்கிறது. மாணவர்களின் தேக நிலையை பரிசோதனை செய்வதற்கு " **Medical Inspection** " ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. " **Medical Inspection** "க்குப் பிற்பாடு அவர்களை கண்காணிப்பதற்கு வசதிகள் ஏற்பாடாகியிருக்கின்றன. இதற்காக இந்த திட்ட காலத்தில் $7\frac{3}{4}$ லட்சம் ரூபாய் செலவு செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1957-58-ல் இதற்காக 10 இடங்களில் சென்டர்கள் ஏற்பாடாகும்.

" மலேரியா " வை தடுப்பதற்கு இப்பொழுது 10,705 சதுர மைல் விஸ்தீரணத்தில், 27 லட்சம் ஜனங்களுக்கும் பிரயோசனப்படும்படியாக வேலை செய்யப்பட்டு வருகிறது. அதோடு " **Filaria** " வை தடுப்பதற்கு 6 இடங்களை

[Sri M. A. Manickavelu] [17th July 1957

நிர்ணயித்து சுமார் 16 லட்சம் ஜனங்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடாகியிருக்கிறது. " Anti-Filarial Scheme " ல் 71 திட்டங்கள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் நிறைவேற்றினால் " Filaria " வையே நம் நாட்டிலிருந்து நிவர்த்திக்கலாம் என்று நினைக்கிறேன்.

" Orientation Training Centre " என்ற பிரிவு பூனமல்லியில் இருக்கிறது. " Environmental Sanitation" என்ற முறையில், கிராமங்களை சுகாதாரமாகவும் சுத்தமாகவும் வைத்துக்கொள்ளுவதற்கு பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

மூன்றாவது டிமாண்ட் " Capital Outlay " என்று சொன்னேன். பைப்புகள் வாங்கி Stock - " ரிசர்வ் " செய்வதற்கும், கிராமங்களில் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கும் இந்தப் பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. 10,000 ஜனத்தொகை உள்ள கிராமங்களில் " Rural Water-Supply " வசதி செய்ய திட்டம் இருக்கிறது. கிராமங்களில் பல வகைகளில் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடாகிக்கொண்டிருக்கிறது. இவை பின் வருமாறு :—

(1) " Bore Wells ".

(2) கிணறு வெட்டி தண்ணீரை மேலே " ஓவர்ஹெட் டாங்குகளுக்கு " பம்ப் செய்வது.

(3) ஏற்கனவே தண்ணீர் இருந்தால், அந்த இடத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவது.

(4) கிணறு வெட்டி அதை அசுத்தமில்லாமல் பாதுகாப்பது.

இதில் ஜனங்கள் கொடுக்கவேண்டிய பகுதி 100-க்கு 25 தான். இந்த முறையில் முதல் " Plan Period " ல் 467 கிணறுகள் வெட்டப்பட்டன. 1956–57-ல் 1,721 கிணறுகள் வெட்டப்பட்டன. இரண்டாவது " Plan Period " ஒவ்வொரு வருஷத்திலும் 1,700 கிணறுகள் வெட்டுவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது. 68 " Composite Schemes " வேறு இருக்கின்றன. இந்த ஐந்து ஆண்டு முடிவுக்குள் பல இடங்களில் தண்ணீர் வசதி ஏற்படுத்தப்படும். " National Water Supply and Sanitation Scheme " பிரகாரம் 5,000 சில்லரை ஜனத்தொகை உள்ள கிராமங்களில், காலரா போன்ற " water-borne disease " பரவக்கூடிய பிராந்தியங்களிலே தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்காக ரூ. 120 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அம்மாதிரி தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சி, ராமனாதபுரம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. மதுரையையும் இந்தத் திட்டத்தில் சேர்க்கவேண்டுமென்றும் அதற்காக ரூ. 24 லட்சம் ஒதுக்கவேண்டுமென்றும் கேட்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான திட்டத்தின் மூலம் தண்ணீர் வசதி பெறும் மக்கள் 100-க்கு 5 விகிதம்தான் பணம் கொடுக்கவேண்டும். மீதி 95 பாகம் செலவை அரசாங்கம் அல்லது ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்றுக்கொள்ளுகின்றன. 1957–58-வது வருஷத்திய பட்ஜெட்டில் இதற்காக ரூ. 20,58,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1957–58-ல் 124 கிராமங்களில் இந்த வகையிலே தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய திட்டங்கள் இருக்கின்றன. அதோடுகூட, கார்பொரேஷனுக்கு தண்ணீர் வசதியை அதிகப்படுத்துவதற்காக மத்திய அரசாங்கம் ரூ. 125 லட்சம் கொடுக்கும். கார்ப்பொரேஷன் இன்னும் அதிகமாக, அதாவது ரூ. 160 லட்சம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறது. அந்த விஷயம் கடிதப் போக்குவரத்து நிலையிலே இருக்கிறது. ஆகையால் நான் சொல்லுவது என்னவென்றால், இம்மாதிரி திட்டங்களை நல்ல முறையிலே நிறைவேற்றினால் நம்முடைய நாட்டிலே சுகாதார வசதியும், வைத்திய வசதியும் நன்றாக அளிக்கப்படும் என்று நினைக்கிறேன். அதோடு கனம் அங்கத்தினர்கள் பேசுவதை உன்னிப்பாகக் கேட்டு அவைகளுக்கு பிறகு பதில் சொல்லுகிறேன்.



17th July 1957]

SRI S. B. ADITYAN : On a point of information, Sir, மந்திரி அவர்கள் பேசும்போது கெட்ட வியாதிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக சில ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தப்போவதாகச் சொன்னார்கள். எல்லா வியாதிகளும் கெட்ட வியாதிகள்தான். குறிப்பாக எதை கெட்ட வியாதி என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் குறிப்பிட்டது என்ன வியாதி என்பதை கனம் அங்கத்தினர் தெரிந்துகொண்டிருக்கிறார். ஆனால் மற்றவர்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதற்காக கேட்கிறார். என் மனதிலே இருந்தது venereal disease.

MR. SPEAKER : Motion moved—

" That on the recommendation of the Governor, Government be granted a sum not exceeding Rs. 4,03,74,300 under Demand No. XVI—Medical Department, Rs. 95,98,200 under Demand No. XVII—Public Health and Rs. 1,44,79,400 under Demand XXXVII—Capital Outlay on Public Health."

I understand that the Opposition Parties are united and have told me that with regard to Demand No. XVI. Medical, Srimathi Sathiyavanimuthu will move her cut motion; with regard to Demand No. XVII. Public Health, Sri Adityan will move his cut motion and with regard to Demand No. XXXVII. Capital Outlay on Public Health, Sri Karayalar will move his cut motion. I would request them to move the cut motions formally and then they may speak.

DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : Sir, I move—

" That the allotment of Rs. 4,03,74,300 under Demand No. XVI. Medical Department be reduced by Rs. 100."

SRI S. B. ADITYAN : இந்த பப்ளிக் ஹெல்த் மான்யம் ஆகிய allotment 95,98,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறேன்.

* SRI K. SATTANATHA KARAYALAR : I move—

" That the allotment of Rs. 1,44,79,400 under Demand No. XXXVII. Capital Outlay on Public Health, be reduced by Rs. 100."

MR. SPEAKER : The three demands and the cut motions are before the House for discussion.

DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறைக்கு கொடுக்கப்படும் மான்யத்தில் ரூ. 100 குறைப்பதற்கான இந்த வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்து சில வார்த்தைகள் சொல்ல முன்வந்துள்ளேன்.

(Deputy Speaker in the Chair.)

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினாலே நாங்கள் கொண்டுவரும் வெட்டு திருத்தங்கள் வெற்றி பெறாவிட்டாலும், நாங்கள் கருதுகின்ற நல்ல கருத்துக்களை எடுத்து அதனை செயல்முறையில் செய்து காட்டவேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். கேள்வி நேரத்திலே வழக்கம்போல

குறும்புத்தனமாக பதில் சொல்லுகின்ற நமது அமைச்சர் அவர்கள் நான் கொண்டுவந்திருக்கும் இந்த வெட்டுப் பிரேரணைக்கும் கேலியாக பதில் சொல்லி தட்டிக் கழிக்கக்கூடாது என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மான்யத்தின்மீது ஏதோ பல குறைகள் இருப்பதற்காக இதைக் குறைக்கவேண்டுமென்பது அல்ல எனது நோக்கம். மருத்துவத்தை பொறுத்தவரையிலே அதிகமாக பணம் வேண்டுமென்று எண்ணம் இருந்தாலும், செய்யப்படுகின்ற செலவு இனங்கள் தேவையான செலவினங்களாக இருக்கவேண்டும் என்பது என்னுடைய விருப்பம். இன்று நாட்டிலே சாதாரணமாக கையாளப்படுகிற மருத்துவ முறைகள் மேலானதாக இருக்கிறதா, அல்லது தேவையற்ற முறையில் இருக்கிறதா

SRIMATHI T. N. ANANDANAYAKI: Sir, on a point of order. கனம் மெம்பர் used the word "குறும்புத்தனம்". Is it parliamentary?

DEPUTY SPEAKER: It is not unparliamentary. It is parliamentary.

DR. SRIMATHI SATHIYAVANIMUTHU: கிராமத்திலே கொடுக்கப்படுகிற சிகிச்சைமுறை ஏழை மக்களுக்கு பயன்படுகிற முறையில் அல்லாமல் இருக்கிறது என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன். கவர்னர் அவரது பேருரையை ஆதரித்து பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்த அம்மையார் அவர்கள்கூட ஒரு ஆஸ்பத்திரியிலே பிறந்த குழந்தையை நாய் கவ்விச் சென்றதாக ஆதாரபூர்வமாக எடுத்துச் சொன்னார்கள். அவரே இன்றைக்கு அதற்கு அத்தாட்சி. பிறக்கின்ற குழந்தையை நாய் கவ்விச் சென்றதற்கு ஆஸ்பத்திரியில் இருக்கின்ற அதிகாரிகளின் மூலமாக வருகின்ற கவனக் குறைவும் ஒரு காரணமாக இருக்கலாம். பிறக்கின்ற குழந்தை நாய் கவ்வுகின்ற அளவுக்கு சிறியதாக இருப்பதைக்கூட அது காட்டுகிறது. அப்பேற்பட்ட சிறிய உருவத்தையும் குறைந்த எடையையும் கொண்ட குழந்தை பிறப்பதற்குக் காரணம் இன்றுள்ள தாய்மார்கள் அவ்வளவு பலஹீனர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு அது ஒரு அத்தாட்சியாகக்கூட இருக்கிறது. அப்பேர்பட்ட பலஹீனம் வருவதற்குக் காரணம் என்னவென்றால், நான் வேடிக்கையாகச் சொல்லுவதாக நீங்கள் நினைக்கக்கூடாது, நமது மாநிலத்திலே அதிகமாக குழந்தைகள் பிறந்துகொண்டிருக்கிறது என்று எனக்கு முன்பு பேசிய அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நாட்டிலே எந்தச் செல்வம் இல்லாவிட்டாலும்கூட, குழந்தைச் செல்வத்தை நமக்கு ஆண்டவன் ஏராளமாக அளித்திருக்கிறார் என்றும், அதற்கு ஆண்டவனுக்கு அஞ்சலி செய்யவேண்டும் என்றும் கூறுகிறார்கள். பெற்று எடுக்கின்றவர்கள் ஆணும் பெண்ணும்தானே தவிர, ஆண்டவன் அல்ல. தவிர, "நான் என்ன செய்வது, ஆண்டவன் அளித்த பிச்சை அல்லவா" என்று கூறுகிறார்கள். குடும்பக்கட்டுப்பாடு நடக்கவேண்டுமென்ற அந்த நல்ல நீதி அவர்களுக்குத் தெரியவில்லை. அந்த நீதியை புகட்டுவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். அப்படி புகட்டுகின்ற அந்த முறை நல்ல முறையாக, உண்மையிலேயே பயன்தரக்கூடிய முறையாக இருக்கவேண்டும். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிகப்படியாய் இருந்தாலும், நாங்கள் சென்று நடத்துகின்ற சீர்திருத்த திருமணங்களில் மணமக்களை வாழ்த்தும் பொழுது "அதிகமான குழந்தைகளை பெற்றுக்கொள்ளாதீர்கள். சற்று தடை போடுங்கள், 2, 3, குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளாதீர்கள்" என்று மனமுவந்து வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம். காரணம், ஏழைகளுக்கு அதிகமாக குழந்தைகள் இருக்கின்றன. பணக்காரர்களுக்கு அதிகமாக குழந்தைகள் கிடையாது. காசி, இராமேசுவரம் சென்றாலும்கூட, குழந்தை இல்லாத குறைபாடு அங்கே இருப்பதைக் காண்கிறோம். வேண்டாத அளவுக்கு அதிகமாக டஜன் கணக்கில் குழந்தைகள் இங்கே இருப்பதைக் காண்கிறோம். சர்க்கார் செய்கின்ற நல்ல காரியங்களில் எதிர் கட்சியாக





இருந்தாலும் நாங்கள் ஒத்துழைப்போம். அப்பேற்பட்ட நல்ல காரியங்களுக்கு என்றும் நாங்கள் ஆதரவு தருகிறோம் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்திலே என் நினைவு சரியாக இருக்குமானால், 1955-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ம் தேதி நமது இந்தியாவின் பிரதமர் முடிசூடா மன்னர் நேரு அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபோது செய்த அந்த நல்லுரையில், "நாட்டிலே பல டாக்டர் தேவைப்படுகிறார்கள், ஆனால் இன்றுள்ள நிலைமையில் டாக்டர்கள் பெருகவில்லை. இன்னும் நூறு ஆண்டு காலம் ஆனாலும்கூட நாம் விரும்புகின்ற அளவுக்கு பூர்த்தி செய்ய முடியாது. எனவே, short-time course குறுகிய காலத்திலே பயிற்சி அளிக்கப்பட்ட டாக்டர்கள் தேவை. அதன் மூலம் ஓரளவுக்கு கிராமப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு சிகிச்சை தரமுடியும். Auxiliary Medical Service மூலமாக நம் தேவையை பூர்த்தி செய்துகொள்ள முடியும்" என்று பேசியிருப்பதாக எனக்கு நினைவுக்கு வருகிறது. இன்று இருக்கின்ற இரண்டாவது ஐந்து ஆண்டு திட்ட முறைப்படி நாம் எதிர்பார்ப்பது 90,000 டாக்டர்கள் தேவை என்று. ஆனால் 1961-ம் ஆண்டிலே கூட நாம் அந்த எண்ணிக்கையை எட்டிப் பிடிக்க முடியாது என்றும், எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் 82,000-க்கு மேலாக முடியாது என்றும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட புள்ளி விவரங்களில் காணப்படுகிறது. அதேபோல தாதிமார்கள் (நர்சுகள்) நாம் எண்ணுகின்ற அளவுக்கு 80,000 தேவையாக இருந்தாலும், 32,000 தான் கிடைக்குமே தவிர, அதற்கு மேல் நம்மால் ஆகாது என்று புள்ளி விவரங்களில் அவர்களே சொல்லுகிறார்கள்.

ஆகவே இப்பேர்பட்ட டாக்டர்கள், நர்ஸ்கள் இல்லாத குறையை போக்க வேண்டுமானால், இன்றைக்கு கிராமங்களில் பலவித முறைகளில் மருத்துவ பயிற்சி பெற்றவர்கள் ஏழைகளுக்கு நல்ல முறையில் உதவி புரிந்து வருகிறார்கள். அவர்களை நல்ல விதத்தில் உபயோகித்துக்கொள்ளலாம் என்று சர்க்காருக்கு சொல்லிக்கொள்ளுகிறேன். இதில் பலர் இந்திய முறைப்படியும், பலர் தமிழ்நாட்டு முறைப்படியும் மருத்துவத் துறையில் பயிற்சி பெற்று ஏழை மக்களுக்கு உதவி செய்து வருகிறார்கள். அவர்கள் பல இடங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். சமீபத்தில் பயங்கரமாக வந்த இன்புளுயென்ஸா நோய்க்கு அதிகமான முறையில் இவர்கள்தான் சிகிச்சை அளித்தார்கள் என்பதை நாம் குறிப்பாக கவனிக்கவேண்டும். சமுதாய நல திட்டத்தின்கீழும் பல ஆஸ்பத்திரிகள் நடந்து வருகின்றன. இது தவிர சில இடங்களில் சரியான விதத்தில் டாக்டர்கள் வேலை செய்வதில்லை என்று தெரிகிறது. அதாவது பெரம்பலூர் தாலூகாவில் பூலாம்பாடி கிராமத்தில் இருக்கிற குஷ்டரோக ஆஸ்பத்திரியில் இருந்த டாக்டர் சரியாக வேலை செய்யாது நான்கு மாதங்கள் கணக்கு எழுதி சம்பளம் வாங்கினார் என்ற காரணத்திற்காக அவரை வேலையிலிருந்து நீக்கப்பட்டார் என்றும், இப்போது அந்த நிலையம் மூடப்பட்டு இருப்பதாகவும், அந்த இடங்களிலுள்ள வைத்தியர்கள், அங்குள்ள மக்கள் சேர்ந்து 1957-ம் ஆண்டு மேமீ 7-ம் தேதியில் இதைப்பற்றி அமைச்சர் அவர்களுக்கு மகஜர் தந்திருந்தும் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அதை இந்த வைத்தியர்களை கொண்டு சரிவர நடத்துவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர்கள் கோரிக்கை விட்டிருக்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் இதுவரை பதில் தரவில்லை என்றும் நினைக்கிறேன். இன்று "இண்டிஜினஸ்" என்ற முறையை மாற்றி "இண்டிகிரேடடு மெடிஸன்ஸ்" என்றுள்ள பயிற்சியை படித்து தேர்ச்சி பெறுகிற மாணவர்களுக்கு சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் வேலை கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. அதேமாதிரி அலோபதியும் சித்தவைத்திய முறையும் ஒன்றாகச் சேர்த்து நடத்தப்படுகிற பயிற்சியில் எப்படி எம்.பி.பி.எஸ். மாணவர்களுக்கு கொடுக்கப்படுகிறதோ அதே முறையில் நடத்தப்படுகிற பயிற்சியில் தேற்சி பெற்ற மாணவர்களுக்கு அரசாங்கத்தாரால் நடத்தப்படுகின்ற ஆஸ்பத்திரிகளில் வேலை இல்லை என்று கூறிவிடுகிறார்கள். ஆகவே இந்த முறை மாற்றப்படவேண்டும் என்றும், இதற்கு அரசாங்கம் பதில்

[Dr. (Srimathi) Sathiyavanimuthu] [17th July 1957

தர வேண்டும் என்றும் அவர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று இன்று எம். பி. பி. எஸ். மாணவர்களுக்கு கொடுக்கப்படும் பயிற்சிகள் போன்று ஜி.ஸி.எம். படிக்கும் மாணவர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை என்ற முறை இருப்பது வருந்தத்தக்கதாகும். எம்.பி.பி.எஸ். மாணவர்கள் வருடம் ஒன்றுக்கு 240 ரூபாய் கட்டுகிறார்கள் என்றாலும், இப்போது 200 ரூபாய் வரை கட்டிக்கொண்டிருக்கிற இந்த ஜி.ஸி.எம். படிக்கும் மாணவர்களும் 240 ரூபாய் பீஸ் கட்டுவதற்கு தயாராக இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு எம்.பி.பி.எஸ். மாணவர்களுக்கு அளித்துள்ளதைபோல் மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ற ஆசிரியர்கள் வேண்டும் என்று அந்த மாணவர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அந்த கோரிக்கையை அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்ததாக ஹோமியோபதியைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அதாவது இன்று நாட்டில் ஹோமியோபதி என்றால் கடுகு போன்று மாத்திரையை மாத்திரம் கொடுக்கும் வைத்தியம்தானே என்று சிலர் எள்ளி நகையாடக்கூடிய நிலையில் இருக்கிறது. இந்த ஹோமியோபதி என்பது ஜெர்மனியில் "ஹனிமன்" என்பவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு இன்று உலகம் எங்கும் புகழ் பெற்று விளங்கி வருகிறது. இதையறியாமலோ அல்லது இதைப்பற்றி நன்றாக தெரிந்துகொள்ளாமலோ, தெரியாத்தனமாக இதைப்பற்றி தவறாக கூறுகிறார்கள். ரஷ்யாவைப்பார்த்து பாடம் படிக்க வேண்டும் என்று சொல்வதாக கருதக்கூடாது, அங்கு இந்த மருத்துவ முறையை குறிப்பாக ஹோமியோபதி முறையை மிகவும் சிறந்த முறையில் கையாண்டு பலவித நோய்களுக்கும் சிகிச்சை செய்து வருகிறார்கள் என்று நாம் அறிந்து கொண்டிருக்கிறோம். அலோபதியின் மூலம் கூட குணப்படாத பெரும் நோய்கள் கூட இதனால் தவிர்க்கப்படுகின்றன என்று அங்கிருந்து வருகின்ற குறிப்புகள் கூறுகிறது. எனக்கு முன்னால் பேசிய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், பல நாடுகளுக்கும் மருத்துவ முறைகளை கண்டுபிடிப்பதற்காக பல தூதுகோஷ்டிகள் அனுப்பப்படுவதாக கூறினார்கள். நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன், இந்த ஹோமியோபதி முறையைப்பற்றி ரஷியாவிலிருந்து தெரிந்து கொள்வதற்கு இங்கிருந்து ஒருவரை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் பின் இதனுடைய பெருமையை உணர்ந்தாவது இதற்கு அங்கீகாரம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்று மத்திய சர்க்காரிலிருந்து எல்லாவற்றையும் எதிர்பார்க்கின்ற நாம் இதற்கு அங்கீகாரம் கொடுக்கப்படாவிட்டாலும்கூட, இன்றைக்கு டெல்லி அரசாங்கத்தின் கீழ் இருக்கும் ஒரிஸா, மத்திய பிரதேசம், உத்திர பிரதேசம், வங்காளம், பீகார், டெல்லி, ஆந்திரா போன்ற மாகாணங்களில் ஹோமியோபதி முறையை சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அப்பேர்பட்ட அங்கீகாரம் இங்கும் ஆக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் இதைப்பற்றி குறிப்பாக சொல்லப் போனால் இந்த முறையை கேலி செய்பவர்கள் இதை சுலபமாக படித்துக் கொள்ளலாம் என்று எளிதாக நினைத்துவிடுகிறார்கள். இதை எல்லோரும் படித்துவிடலாம் என்று நினைப்புக்கு பதிலாக இது ஒரு உயர்தரமான படிப்பு என்ற நினைவு, இதைக்கண்டு கேவலமாக எண்ணுகிறவர்களின் நினைவு மாறவேண்டுமானால் இதற்கு போதுமான கல்லூரிகள் இருக்க வேண்டும். இதற்கு நல்ல முறையில் பயிற்சி பெற்றவர்களைக்கொண்டு மாணவர்களை தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இவ்விதம் பயிற்சி பெற்ற குழுவால் மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி கொடுத்தால் இந்த நாட்டில் இருக்கின்ற ஆயிரமாயிரம் ஏழைகளுக்கு நல்ல முறையில் மருத்துவம் அளிக்க முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன். அடுத்ததாக ஹோமியோபதி மருத்துவத்திற்கு ஸ்பிரிட் தேவையாக இருக்கிறது. இந்த "ரெக்டிபைட்ஸ்பிரிட்" இன்று யார் யாருக்கோ கொடுக்கப்படுகிறது. இதற்காக லாகிரி வஸ்துக்களும் அதிகமாக விற்கப்படுகின்றன. இதனால் தேவைப்படுகிற ஸ்பிரிட் டாக்டர்களுக்கு கிடைப்பதில்லை. ஆகவே இவர்களுக்கு இந்த ஸ்பிரிட் ஏராளமாக கிடைப்பதற்கு அனுமதிக்கவேண்டும். அல்லது அவர்களுக்கு கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு



17th July 1957] [Dr. Srimathi Sathiyavanimuthu]

அளிக்கவேண்டும், அல்லது அவர்களுக்கு Excise Duty யிலிருந்தாவது "கன்ஸஷன்" கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பேர்பட்ட முறையில் ஏழை மக்களுக்கு நல்ல முறையில் மருத்துவம் செய்வதற்கு ஏற்ற முறையில் ஒரு நிவாரணம் அளிக்கப்படுமானால் அது பெரிய உதவியாய் இருக்கும் என்று கூறி, ஹோமியோபதி முறை ஒரு சிறந்த மருத்துவ முறை அதை சர்க்கார் உடனேயே அங்கீகரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

SRI S. B. ADITYAN: இந்த வெட்டுத் தீர்மானத்தை ஆதரிக்கின்ற 12-55 p.m.
வகையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் இந்த மான்யத்தைப்பற்றி பேசுகின்ற நேரத்தில் மிக உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்தேன். கவனமாக கேட்டுக்கொண்டிருந்தவர்களில் நானும் ஒருவன். அதில் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் சிப்பந்திகளைப்பற்றி ஏதாவது சொல்லுவார் என்று எதிர்பார்த்துகொண்டிருந்தேன். ஆனால் அவர் அதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை.

ஆஸ்பத்திரிகளில் பல குறைகள் இருப்பதாக பலர் சொன்னார்கள். ஆனால் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்கின்ற சிப்பந்திகளின் குறைகள் என்ன என்பதையும் நாம் பார்க்கவேண்டும். இன்றைக்கு ஆஸ்பத்திரிகளில் எவ்வளவோ குறைகள் இருக்கின்றன என்று நாம் கேள்விப்படுகிறோம். ஆஸ்பத்திரிக்கு போனால் சேர்க்கப்படுவதில்லை. அப்படியே சேர்க்கப்பட்டாலும் படுக்கை கிடைப்பதில்லை. அப்படியே படுக்கை கிடைத்தாலும் நோயாளிகள் சரியாக கவனிக்கப்படுவதில்லை என்று புகார்கள் சொல்லப்படுவதை நாம் கேள்விப்படுகிறோம்.

இதற்கெல்லாம் முக்கிய காரணம் என்ன என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். நோயாளிகளின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. ஆஸ்பத்திரிகளுக்கு முன்னைவிட எத்தனையோ மடங்கு அதிகம் நோயாளிகள் போகிறார்கள். இதற்கு காரணம் எதுவாயும் இருக்கலாம். முன் காலத்தில் இருந்தவர்களைவிட இப்பொழுது இருக்கிறவர்களின் உடல் வலு குறைவாக இருப்பது ஒரு காரணமாய் இருக்கலாம். அல்லது ஆஸ்பத்திரிகளில் போகிற பழக்கம் மக்களிடையே முன்னைவிட அதிகமாக பரவி இருப்பது ஒரு காரணமாய் இருக்கலாம். அல்லது ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளை உடனுக்குடன் குணப்படுத்தி அனுப்பாமல் இருப்பது ஒரு காரணமாயிருக்கலாம். ஆனால், நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

உதாரணமாக ராயப்பேட்டை ஆஸ்பத்திரியை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த ஆஸ்பத்திரிக்கு ஒரு ஆலோசனை கமிட்டி இருக்கிறது. அதில் பல ஆண்டுகளாக மெம்பராக இருந்து நான் பணியாற்றி இருக்கிறேன். அங்குள்ள விவகாரம் எனக்குத் தெரியும். ஒரு வார்டில் ஐம்பது பேர்களை சேர்க்க இடம் இருக்கிறது என்றால் 90 நோயாளிகளை அங்கு சேர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

அவர்களை சேர்க்கவேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஆஸ்பத்திரிகளில் வருகிறவர்களை "உங்களுக்கு சிகிச்சை செய்ய முடியாது" என்று சொல்லி யாரையும் வீட்டிற்கு அனுப்பவேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஆஸ்பத்திரியிலேயே சிகிச்சைக்கு என்று ஏற்படுத்தியிருக்கிறவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். டாக்டர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும். நர்ஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக சிப்பந்திகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும்.

நோயாளிகளைக் கவனிக்க லச்சீஸ் 'வார்ட் பாய்ஸ்' நர்வஸிங் ஆர்டர்லிகள் (M.N.O., F.N.O.) போன்றவர்கள் இருக்கிறார்கள். ஒரு நோயாளிக்கு பசி எடுக்கிறது என்று சொன்னால் அவருக்கு சோறு கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த சிப்பந்திகளுடையது. ஒரு நோயாளிக்கு வாந்தி எடுக்கிறது

[Sri S. B. Adityan] [17th July 1957

என்றால் தட்டை எடுத்துப் போகும் பொறுப்பும் இந்த சிப்பந்திகளுடையது தான். ஒரு நோயாளியை குளிப்பாட்ட வேண்டுமென்று சொன்னால் அதற்கு வேண்டிய காரியங்களை செய்வதும் இந்த சிப்பந்திகளின் பொறுப்பு தான். ஆஸ்பத்திரியில் 24 மணி நேரமும் இந்த நோயாளிகளை கவனிக்க வேண்டிய பொறுப்பு இந்த "நர்சிங் ஆர்டர்லீஸ்" உடையதுதான். ஆகவே அவர்களது எண்ணிக்கையை அதிகமாக்கவேண்டும்.

அப்படிச் செய்யாமல், ஏற்கனவே இருக்கிற சிப்பந்திகளை வைத்துக் கொண்டு நோயாளிகளை ஒன்றிற்கு இரண்டாக அனுமதித்தால் ஏன் கவனிப்பு குறைவு ஏற்படாது. ? அரசாங்கத்தில் விதி இருப்பதாகச் சொல்கிறார்கள். ஒரு சிப்பந்தி ஏழு நோயாளிக்கு மேல் பார்க்கவேண்டியதில்லை என்று விதி இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், ஒரே சிப்பந்தி ஒரே நேரத்தில் எழுபது நோயாளிகளை கவனிக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது இப்பொழுதுள்ள நிலையில். குறைந்த சிப்பந்திகளை வைத்துக்கொண்டு வேலை வாங்குவதில் என்ன ஏற்படுகிறது ? ஒரு சிப்பந்தி 12 மணி நேரம் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. 14 மணி நேரம் வேலை செய்யவேண்டியிருக்கிறது. ஏன் 18 மணி நேரம் வேலை கூட வேலை செய்யவேண்டிய நிலை ஏற்படுகிறது. 8 மணி நேர்த்திற்கு மேல் ஒருவனிடமிருந்து வேலை வாங்கக் கூடாது என்று சட்டம் இருக்கும்போது, ஒரு முதலாளி ஒரு தொழிலாளியிடமிருந்து 8 மணி நேரத்திற்கு கூடுதல் வேலை வாங்கினால் அவன் மீது வழக்கு தொடரவேண்டுமென்று சட்டம் இருக்கும்போது 8 மணி நேரத்திற்குமேல் வேலை வாங்கினால் முதலாளியை தண்டிக்க வேண்டும் என்று சட்டம் இருக்கும்போது நான் கேட்கிறேன், ஏன் அரசாங்க ஊழியர்களிடமிருந்து 8 மணி நேரத்திற்கு மேல் வேலை வாங்குகிறார்கள் என்று. அப்தால்மிக் ஹாஸ்பிட்டலில் சில தொழிலாளர்கள் 12 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்கிறார்கள். ஆகவே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அவர்களுடைய வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும்.

அடுத்தபடி, வாரத்திற்கு ஒரு நாள் ஓய்வு என்பது நம் நாட்டிலுள்ள எல்லாத் தொழிலாளர்களுக்கும் எல்லா இடங்களிலும் இருக்கக்கூடிய சட்டமாகும். அந்த விடுமுறை நாள் ஞாயிற்றுக்கிழமையாக இருக்கவேண்டும் என்பது அவசியம் இல்லை. திங்கட்கிழமையானாலும் சரி, செவ்வாய்க் கிழமையானாலும் சரி, புதன்கிழமையானாலும் சரி, வியாழக்கிழமையானாலும் சரி, எந்தக் கிழமையானாலும் சரி வாரத்திற்கு ஒரு நாள் ஓய்வு கொடுக்கவேண்டும் என்பது பொதுவாக அனுஷ்டிக்கப்படுகிற வழக்கம் மாத்திரமல்ல, அது நாட்டின் சட்டமாய் இருக்கிறது. யாராவது ஒரு முதலாளி அவர் கடையில் வேலை செய்யும் சிப்பந்திக்கு வாரத்திற்கு ஒரு நாள் லீவ் கொடுக்கவில்லை என்றால், நான் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன், நீங்கள் என்ன செய்வீர்கள் என்று. உடனே அம்முதலாளி மீது வழக்கு தொடர மாட்டீர்களா, அவரை கோர்ட்டில் கூண்டில் நிறுத்தமாட்டீர்களா என்று கேட்கிறேன். ஆனால் சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களை ஒரு ஞாயிற்றுக்கிழமை முதல் இன்னொரு ஞாயிற்றுக்கிழமை வரை வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறையே இல்லாமல் வேலை வாங்குகிறீர்களே, இது நியாயமா என்று கேட்கிறேன்.

சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் தொழிலாளி 12 மணி நேரத்திற்கு குறைவு இல்லாமல் வேலை செய்யவேண்டுமென்றால், அவனுக்கு குடும்பத்தில் இன்பம் இருக்கமுடியுமா? எத்தனையோ தொழிலாளர்கள் அவர்களின் குழந்தைகளோடு பேசி அறிய மாட்டார்கள். குழந்தைகள் எழுந்திருக்கும் முன்பு அவன் ஆஸ்பத்திரிக்கு போகவேண்டும். அவர் ஆஸ்பத்திரிக்கு காலையில் செல்லும்போது குழந்தைகள் விழித்து இருக்கமாட்டார்கள். இரவு 9 மணிக்கு வீடு திரும்பும்பொழுது அதற்குள்ளே குழந்தைகள் தூங்கிவிடுகிறார்கள். ஆகவே அவர்கள் தங்கள் குழந்தைகளிடம் பேசி அறியாமல், அக்குழந்தைகளின் மழலைச் சொற்களை கேட்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். இதுதான் ஆஸ்பத்திரி சிப்பந்திகளின் நிலைமை. இவர்களுக்கு ஒரு நிவாரணம் கொடுக்கக்கூடாதா என்று கேட்கிறேன். இதுமட்டும் அல்ல. இவர்களின் சம்பளம் என்ன என்று



17th July 1957] [Sri S. B. Adityan]

பார்ப்போம். கனம் மந்திரியவர்கள் என் அருமை நண்பர்தான். ஆனால் அவருக்கே இது தெரியுமா என்பது சந்தேகமாய் இருக்கிறது. ஆனால் இந்த "டிமாண்ட்ஸ் பார் கிராண்ட்ஸ்" என்ற புத்தகத்தில் 824-வது பக்கத்தில் இதைப்பற்றி கூறப்பட்டு இருக்கிறது. முதல் கிரேடு நர்சிங் ஆர்டர்லிஸ் என்பவர்களுக்கு அடிப்படை சம்பளம் 24 ரூபாய். வருஷாந்தர உயர்வு 8 அணா. இவர்களில் ஒரு சிலர்தான் முதல் கிரேடில் உள்ளவர்கள். பெருவாரியானவர்கள் இரண்டாவது கிரேடில் உள்ளவர்கள்தான். அவர்களுக்கு உள்ள சம்பளம் 19 ரூபாய். சம்பள உயர்வு வருஷத்திற்கு 8 அணா என்று இருக்கிறது. எனக்கு ஞாபகம் இந்த 8 அணாவை ஒரு ரூபாயாக ஆக்கி சர்க்கார் உத்தரவு இட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அப்படி என்றால் அது ஏன் இந்த பட்ஜெட்டில் வரவில்லை என்று கேட்க விரும்புகிறேன். அதோடு 31 ரூபாய் அலவன்ஸ் கொடுக்கிறார்கள். ஆனால் அடிப்படை சம்பளம் 19 ரூபாய்.

இந்த சம்பளமானது நம் நாட்டிலே மிக மிக குறைவான சம்பளம். செக்ரட்டேரியட்டில் உள்ள ஒரு பியூனிற்கு 24 ரூபாய் சம்பளமும், வாரத்திற்கு ஒரு நாள் லீவும் உண்டு. ஆனால் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்கிறவர்களுக்கு சம்பளம் 19 ரூபாய். ஏன் இவ்வளவு குறைவாக இருக்கிறது என்பதை சர்க்கார் கவனித்து பார்க்கவேண்டும். ஆஸ்பத்திரிகளில் வேலை செய்கிறவர்கள் பொது மக்களுக்கு அத்தியாவசியமான சேவை செய்பவர்கள்; ஆகவே அவர்கள் சும்மா வேலை செய்யட்டுமே என்ற எண்ணமா அல்லது சிக்கனம் என்பது காரணமா ? அரசாங்கத்திற்கு சிக்கனம் செய்யவேண்டுமென்ற அவசியம் இருக்கலாம். ஆனால் மற்ற இலாகாக்களில் எப்படி சம்பளம் இருக்கிறதோ அந்த அளவுக்காவது இவர்களுக்கும் இருக்கவேண்டும் அல்லவா ? ஆகவே இவர்களது சம்பளத்தை சற்று அதிகப்படுத்தவேண்டும்.

அடுத்தபடியாக இவர்களுக்கு "யூனிபார்ம்" சட்டை கொடுக்கப்படுகிறது. மந்திரியவர்கள் இதைச் சற்று உன்னிப்பாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இவர்களுக்கு, வருஷம் ஒன்றிற்கு 3 சட்டைகள் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தில் விதி இருக்கிறது. அரசாங்கத்தினிடமும் பணமும் இருக்கிறது. கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் அமைச்சர்களுக்கும் இலாகா தலைவர்களுக்கும் இருக்கிறது. இருந்தாலும் கொடுப்பதில்லை. அதற்கு காரணம் என்ன ? ஒரு வருடத்திற்கு 500 அல்லது 700 சட்டைகள் வேண்டுமென்று குறிப்பிட்டு ஆஸ்பத்திரி தலைமை அதிகாரி "இன்டன்ட்" அனுப்பவேண்டியிருக்கிறது. அதை அனுப்பவேண்டியது, ஒரு வருஷம் முடிந்த பிறகுதான் அனுப்பவேண்டுமென்று இப்போது சர்க்கார் விதி இருக்கிறது. ஆகவே வருஷம் முடிந்த பிறகு அனுப்பப்படுகிற "இன்டெண்ட்"டை இருபது அதிகாரிகள் பார்க்கவேண்டியிருக்கிறது. குமஸ்தாக்கள், சூப்பரிண்டெண்டெண்ட், அசிஸ்டெண்ட் செக்ரெட்டரி, செக்ரட்டெரி, பிறகு மந்திரி என்று போய் பிறகு கீழே வந்து அதை முடிவு செய்ய மாதங்கள் மூன்றாகி விடுகின்றன. ஆகவே, யூனிபாரத்துக்கு வேண்டிய இன்டென்டை வருஷம் முடிந்த பிறகு அனுப்பவேண்டும் என்பதை விட்டு விட்டு வருஷம் முடிய மூன்று மாதங்களுக்கு முன் அனுப்ப வேண்டுமென்று இப்பொழுதிருக்கிற விதியை மாற்றியமைத்தால் எலலோருக்கும் யூனிபாரம் கிடைக்க வழி ஏற்படும்.

கடைசியாக, ஆஸ்பத்திரிகளில் தாண்டவமாடும் லஞ்சத்தைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இப்போது ஜெனரல் ஆஸ்பத்திரியில் தாண்டவமாடும் லஞ்சத்தைப்பற்றி விசாரிப்பதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட சபையில் வைக்கப்பட்ட பேபர்களில் ஒன்றைப் பார்த்தேன். எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் சிபாரிசு மீது அரசாங்கம் செய்திருக்கக்கூடிய தீர்ப்பு அதில் சொல்லப்பட்டிருக்கிறது. எஸ்டிமேட்ஸ் கமிட்டி ஆஸ்பத்திரி நிர்வாகத்தைப் பற்றிப் பரிசீலித்தார்கள். அதன் பேரில் அவர்கள் ஒரு சிபாரிசு செய்திருந்தார்கள். ஆஸ்பத்திரிகளில் லஞ்சம் தாண்டவமாடுகிறதைப்பற்றி விசாரிக்க ஒரு கமிட்டி நியமிக்கவேண்டுமென்று அவர்கள் ஒரு சிபாரிசு செய்திருந்தார்கள். அதையொட்டி அரசாங்கம் ஒரு முடிவு செய்திருக்கிறது. அதாவது, சென்னையிலே

இருக்கக்கூடிய பெரிய ஆஸ்பத்திரியாகிய ஜெனரல் ஆஸ்பத்திரியில் நிலவும் லஞ்சத்தைப்பற்றி விசாரணை செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்போகிறது என்பது. என்னுடைய கோரிக்கை இந்தக் கமிட்டியில், ஆஸ்பத்திரியில் வேலை செய்கின்ற சிப்பந்திகளுக்கும் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளுக்கும் அதாவது அவர்களுடைய நன்மையைக் கருதுகிறவர்களுக்கும், ஒரு இடமளிக்கவேண்டுமென்பது.

மேலும் இந்தக் கமிட்டி பெரிய உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குவதைப்பற்றி விசாரிக்காது. ட்ரிப்யூனலுக்குப் போகக்கூடிய ரூ. 150-க்கு மேல் சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குவதாகப் புகார் செய்தால், அதை விசாரிக்க இந்தக் கமிட்டிக்கு அதிகாரமில்லை. அதற்குக் கீழே சம்பளம் வாங்குபவர்கள் லஞ்சம் வாங்குவதாகச் சொல்லும் புகார்களை விசாரிப்பதற்காக இந்தக் கமிட்டி நியமிக்கப்படப்போகிறது. இது யாரைப் பாதிக்கும் ? மிகவும் கொஞ்சம் சம்பளம் வாங்கும் சிப்பந்திகளைத்தான் இது பாதிக்கும். ஏதோ ஒருவன் சீக்கு என்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, குணமடைந்து வீட்டுக்கு போகும்போது, நாலு அணா கொடுத்தால், அது லஞ்சம் ஆகுமா ? இப்படிப்பட்ட விஷயங்களைத் தான் இந்தக்கமிட்டி விசாரிக்கும். ஆகையால், இந்தக் கமிட்டியில் சிப்பந்திகள் சங்கத்திற்கு ஒரு இடம் அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக, கனம் மந்திரி அவர்களைக் ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆஸ்பத்திரியில் வேலை செய்கின்ற சிப்பந்திகள் சர்க்கார் ஊழியர்கள். அவர்கள் சர்க்கார் ஊழியர்கள் என்ற தங்கள் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கும், அவர்கள் மற்ற மனிதர்களைப்போல் வாழ்வதற்கும் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும் ; அவர்களுடைய வேலைப் பளுவைக் குறைக்கவேண்டும் ; வாரந்தோறும் ஒரு நாள் லீவு கொடுக்க வேண்டும் ; மற்ற வசதிகளும் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

1-13 p.m. **Sri K. SATTANATHA KARAYALAR** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்ய கோரிக்கையின் மீது நான் கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணையின் மீது சில வார்த்தைகள் சொல்ல அவாவுறுகிறேன். இந்த மான்யத்தின் கீழ் சுமார் ரூ. 12½ லக்ஷம் சென்னையிலே குடி தண்ணீர் விஸ்தரிப்புக்காக ஒதுக்கப்படுள்ளது. ராஜ்யம் முழுதுக்கும் சுமார் ரூ. 82 லக்ஷம் குடி தண்ணீர் வசதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்று நாட்டில் இருக்கக்கூடிய சுகாதார நிலைமையைச் சீர் படுத்துவதற்கு இது எவ்வளவு தூரம் ஊக்கம் தரும் என்பதை நாம் ஒரளவு சிந்திக்கவேண்டும். அதைக் கவனிக்கும்பொழுது, இந்தத் தொகை மிக மிகக் குறைவு என்று நான் சொல்லும்போது, இந்தச் சபையின் எந்தப் பகுதியிலிருந்தும் அதற்கு எதிர்ப்பு வரமுடியாது. வெகு காலத்திற்கு முன்பே வகுக்கப்பட்டு ஆனால் அமுலுக்குக் கொண்டுவரப்படாத குடி தண்ணீர் திட்டங்கள் எத்தனையோ இருக்கின்றன. வடிகால் திட்டமும், குடி தண்ணீர் திட்டமும் ஒரு நகரத்திற்கும் கிராமத்திற்கும் மிக மிக அவசியம். அப்படியிருக்க, பல முக்கியமான நகரங்களுக்காக வகுக்கப்பட்ட திட்டங்கள் வெறும் " ப்ரிலிமினரி இன்வெஸ்டிகேஷன் " ஐத் தாண்டியிருக்கின்றனவே யொழிய அவை இன்னும் அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை. உதாரணமாக, தென்காசிக்கு ஒரு குடி தண்ணீர் திட்டம் நீண்ட நாட்களுக்கு முன்பு வகுக்கப்பட்டது. 1936-க்கு முன்பு அது வகுக்கப்பட்டதென்று நான் நினைக்கிறேன். ஆனால், இத்தனை காலமாக அது வெறும் திட்டமாகயிருந்து, சமீபத்தில் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அதற்கு அடிகோலப்பட்டது. ஆனால், சில நாட்களுக்கு முன்பு கனம் மந்திரி அவர்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது, அது இன்னும் ஒரு பரீட்சார்த்தத் திட்டமாக இருக்கிறதென்றும், அது இன்னும் முடிவான திட்டமாகவில்லையென்றும் சொன்னார்கள். திட்டம் வகுப்பதற்கு சுமார் 20 வருடம், அதன் பிறகு அடிகோலிய பிறகு இரண்டு ஆண்டுகள் ஆகியும் திட்டம் உருவாகவில்லையென்றால், இன்னும் அந்தத்





திட்டத்தை அமுலாக்குவதற்கு எத்தனை ஆண்டுகள் வேண்டும், எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்கள் வேண்டும் என்று கேட்க நான் அவாவுறுகிறேன். தென்காசி குடி தண்ணீர் திட்டம் என்பது தென்காசி, குற்றாலம், எலாஞ்சி, நன்னகரம், குடியிருப்பு என்ற பஞ்சாயத்துகளுக்குச் சேர்த்துத் திட்டப்பட்ட திட்டம், அதற்கு சுமார் ரூ. 37 லக்ஷம் வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள். குற்றாலத்தில் ஒழுகக்கூடிய அருவிகளிலிருந்து தண்ணீரைக் கொண்டுவந்து தென்காசிக்கும், பக்கத்திலிருக்கும் எலாஞ்சி கிராமத்திற்கும் தண்ணீர் கொடுப்பதாகத் திட்டம். அந்தத் தண்ணீரை எடுத்துக்கொள்ளும்பொழுது, விவசாயிகளுக்கு அதில் என்ன பாத்தியதை இருக்குமென்று நல்ல முறையில் பரிசீலிக்கப்படவில்லை. இன்று சில செல்வாக்குள்ள நிலவுடமைக்காரர்கள் அந்தத் திட்டத்தை அமுலாக்கக் கூடாதென்று அதற்கு எதிராக வேண்டிய சிக்கல்களையெல்லாம் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய முட்டுக்கட்டையின் காரணமாக அந்தத் திட்டம் எந்த விதமான உருவும் பெறவில்லையென்று நான் நினைக்கிறேன். இத்திட்டத்திற்காக 12 வருஷங்களாக அந்தப் பஞ்சாயத்து பொது மக்களிடமிருந்து தண்ணீர் வரி வசூலித்து வருகுகிறது. அவ்விதத்தில் சுமார் ரூ. 5 லக்ஷம் சேர்க்கப்பட்டு அது அவர்கள் கையிலிருக்கிறது. அப்படியிருந்தும், அந்தத் திட்டம் இன்னும் உருப் பெறவில்லையென்றால், அது எவ்வளவு மோசமான வகையில் இந்த இலாகா இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. முதல் அமைச்சரையும் வரவழைத்து அதற்கு அடிகோல் நாட்டிய அது ஆரம்பிக்கப்படப்போவதாக நாடகமும் நடிக்கப்பட்டது. ஆனால், அதற்கு மேல் இன்னும் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கிராமாந்திரங்களில் இருக்கக்கூடிய மருத்துவ வசதியைப் பற்றியும், அங்குள்ள ஆஸ்பத்திரிகளிலுள்ள குறைகளைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல அவாவுறுகிறேன். குறிப்பாக, தென்காசி மிகப் பெரிய நகரம். ஆனால், அந்த ஊருக்கு நல்ல முறையில் சேவை செய்யக்கூடிய ஆஸ்பத்திரி இல்லையென்றே சொல்லலாம். ஏதோ பெயரளவுக்கு ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறதென்று நான் நினைக்கிறேன்.

**Sri V. K KOTHANDARAMAN** : சட்ட சபை நடக்கவேண்டுமென்றால், மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்களாவது இருக்கவேண்டும். . .

**DEPUTY SPEAKER** : இப்பொழுது இருக்கிற அங்கத்தினர்கள் போதும். " கோரம் " இருக்கிறது. பத்தில் ஒரு பங்கு இருந்தால் போதும்.

**Sri K. SATTANATHA KARAYALAR** : துரதிருஷ்டவசமாக இந்த மான்யக் கோரிக்கை எப்படி மெலிந்திருக்கிறதோ, அதே போல இந்த சட்ட சபையும் மெலிந்திருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டே நான் பேசுகிறேன். (குறுக்கீடு) ஒருவேளை கனம் மந்திரி அவர்கள் சொல்வதைப் போல இதற்கு காரணம், பசியாக இருக்கலாம். தாகத்தை காட்டிலும் பசிக்கு முதலிடம் கொடுத்து நண்பர்கள் வெளியே போய் இருக்ககூடும்.

ஆஸ்பத்திரிகளில் நல்ல வசதியில்லை யென்று சொன்னேன். குறிப்பாக, தென்காசியில் எந்த அளவுக்கு அந்த வட்டாரத்திற்கு வசதி தேவையோ அந்த அளவுக்கு ஆஸ்பத்திரியில்லையென்று நான் அவாவுறுகிறேன். பக்கத்தில் இருக்ககூடிய செங்கோட்டையில் ஒரு நல்ல ஆஸ்பத்திரி நடந்து கொண்டு வருகிறது. அதற்கு பக்கத்தில் இருக்கக்கூடிய ஆயகுடியில் ஒரு நல்ல ஆஸ்பத்திரி இருக்கிறது. அந்த ஆஸ்பத்திரியில் மூன்று டாக்டர்கள்தான் இருந்தார்கள். இது என்னுடைய தொகுதி என்பதற்காக இதை பற்றி குறிப்பாக சொல்லவில்லை. அந்த ஆஸ்பத்திரிகளின் நிர்வாகம் சென்னை ராஜ்யத்தின் கீழ் வந்த பிறகு, அது எப்படி நடக்கிறது என்பதை காட்டுவதற்காகவே இதை சொல்லுகிறேன். அங்கு ஆயக்குடி, சாம்பவர் வடகரை ஆகிய இரண்டுக்கும் சேர்ந்து ஒரு லேடி டாக்டர் இருந்தார். சமீபத்தில் ஆயக்குடி டாக்டர் லீவ் எடுத்து கொண்டிருக்கிறார். அவருக்கு பதில் வேறு] ஒரு டாக்டர்

போடப்படவில்லை. செங்கோட்டையில் இருக்கக்கூடிய டாக்டர் ஆயக்குடி, சாம்பவர்வடகரை இரண்டு இடத்திற்கும் போகவேண்டும். இப்படி ஒரே டாக்டரை, அதிலும் குறிப்பாக லேடி டாக்டரை, 3 ஆஸ்பத்திரிகளுக்குப் எப்படி நல்ல முறையில் போட்டால் நிர்வாகம் நடக்கும், எப்படி மக்களுக்கு சேவை செய்ய முடியுமென்று நான் கேட்கிறேன்.

மேலும் எப்ரல் 1-ம் தேதி முதற்கொண்டு இந்த ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகளை வாங்கப்படவில்லையென்று தெரிகிறது. ஏதாவது "டெக்னிகல் டிபிகல்டீஸ்" இருந்திருக்கக்கூடும். இதுவரை திருவாங்கூர்-கொச்சி சர்க்காரால் மருந்துகள் கொடுக்கப்பட்டு வந்தன. இப்போது, சில மாதங்களாக சென்னை சர்க்காரிலிருந்து அவர்களுக்கு மருந்து கொடுக்கப்படவில்லை. அங்கு ஒரு ஆயுர்வேதிக் ஆஸ்பத்திரியும் இருக்கிறது. அதற்கும் வேண்டிய மருந்துகள் கிடைக்க மார்க்கமில்லை யென்று தெரியவருகிறது.

அடுத்தபடியாக, இந்த மாகாணத்திலே, எனக்கு முன்பு பேசிய கனம் சத்தியவாணி முத்து அம்மையார் சொன்னதுபோல, ஆயுர்வேதம், யுனானி, சித்த வைத்தியம் போன்ற வைத்தியங்களுக்கு முன்னேறுவதற்கு வசதி கொடுக்கபடவில்லை என்பதை வருத்தத்தோடு குறிப்பிடவிரும்புகிறேன். அலோபதி முறைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ அவ்வளவு முக்கியத்துவம் இந்த முறைகளுக்கு கொடுக்கவில்லை. ஏன் கொடுக்கவில்லை என்று நினைக்கலாம். இந்த வைத்திய முறைகளெல்லாம் சிறிய முறையில் இல்லை. Scientific basisல் இல்லை என்று தவறான கருத்து நம் மத்தியிலே இருந்து வருகிறது. குறிப்பாக சொல்லப்போனால், இன்றைக்கு சாதாரணமாக இருக்கக்கூடிய ஆஸ்த்மா சீக்கை எடுத்துக் கொள்வோம். ஆஸ்த்மாவில் பல ரகம் இருக்கிறது. ட்ராபிகல் இஸ்னோபேலிஸ் என்று ஒரு வகை ஆஸ்த்மா உண்டு. இதற்கு அலோபதிக் டாக்டர்கள் சொல்லுகிறார்கள் உடம்பிலே இருக்கக்கூடிய உதிரத்திலே உள்ள வெள்ளை அணுக்களின் பர்ஸெண்டேஜ் 40 அல்லது 50 கூடிய அளவில் போகும் போது அந்த ஆஸ்த்மா போன்ற மூச்சு முட்டல் ஏற்படுகிறது என்று குறிப்பிடுகிறார்கள். அலோபதிக் முறையில் ஒரளவு அஸிடோ ஆர்ஸெனிக் சேர்ந்த பொருளை உடம்பிலே ஏற்றுவது சாதாரணமாக செய்யப்பட்டு வருகிற முறை. இது இருதயத்திற்கு ஹானிகரமான முறை இதற்கு நாட்டு வைத்தியத்திலே ஒரு மருந்து கொடுக்கிறார்கள். ஒரு கஷாயம் கொடுக்கிறார்கள். கண்டங் கத்திரி, துளசீ போன்ற இலைகளை சேர்த்து அத்தனையும் ஒரு பாடம் செய்து, சாறை பிழிந்து எடுத்து தேனோடு கலந்து தினந்தோறும் இரு முறை காலை மாலை மூன்று நாட்கள் கொடுக்கிறார்கள். இது இந்த வியாதியை ஓரளவு மிதப்படுத்துகிறது. எப்படி இது செயல்படுகிறது என்று திட்டவட்டமாக தெரியவில்லை. ஆனால் ஒன்று தெரிகிறது. இந்த மருந்தை சாப்பிடுவதற்கு முன் உதிரத்தை பரிசோதனை செய்து சாப்பிட்ட பிறகும் பரிசோதனை செய்தால் இஸ்னோபேலிஸ் பர்ஸெண்ட்டேஜ் கணிசமான அளவு குறைந்திருக்கிறது. எந்த அளவு அது உடம்பிலே பாதிக்கிறது என்று தெரியவில்லை. ட்ராபிக்கல இஸ்னோபேலிஸ் ஓரளவு கட்டுபடுத்த இது பயன் படுகிறது.

நீண்ட நாட்களாக Blood plessure-க்கு நம் நாட்டிலே நாட்டு வைத்தியம் வீட்டுவைத்தியம் என்ற முறையில் சர்ப்பகந்தவேரை கஷாயம் கொடுக்கும் பழக்கம் இருந்து வருகிறது. Serpentina tab!ets என்று சமீபத்திலே இருந்து அலோபதிக் வைத்தியர்கள் கொடுக்கிறார்கள். எத்தனையோ இது மாதிரி கொடுக்க முடியும். சாதாரணமாக ஜலதோஷம் வந்து விட்டால் கஷ்டப்படக் கூடிய சமயத்திலே அலோபதி வைத்திய முறை Vitamin 'C' deficiency என்று சொல்லுவார்கள். அதே நேரத்தில் நமது பாட்டிமார்கள் ஜலதோஷமென்றால் முருங்கைஇலை ரசம் வைப்பார்கள். முருங்கை இலையிலே 'C' Vitamin இருக்கிறது என்பது தெரிந்த விஷயம். இந்த மாதிரி பல வைத்திய முறைகளை நல்ல முறையில் பரீட்சிக்க செய்ய வேண்டும்.





ஜாண்டிஸ் என்று இருக்குமானால் நல்ல அலோபதி வைத்திய முறை இருக்கவில்லை. ப்ரோடீன் தேவை என்று ஒய்வு கொடுக்கிறார்கள். அதே நேரத்திலே நமது நாட்டிலே சின்னங்கன்னி போன்ற இலைகளை கொடுத்தால் நல்ல முறையில் குணப்படுத்துவதை பார்க்கிறோம். ஏன் இதை குறிப்பிடுகிறேன் என்று கேட்டால் பல்வேறு கர்ண பரம்பரையாக, தலை முறையாக பழகி வரும் சிறிய பழக்கம் நமது நாட்டிலே இருக்கிறது. இவைகளை நல்ல முறையில் பரீட்சிக்க வேண்டும். இன்றைக்கு கேரளத்திலே இதற்கு நல்ல முறையில் ஆதரவு இருக்கிறது. ரூமேடிஸத்திற்கு தன்வன்திரி ஆயுர்வேத முறை பலன் தரக்கூடிய நிலையில் இருக்கிறது. ஆயுர்வேத ஆஸ்பத்திரியை எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் விஸ்தரிக்க வேண்டும். சித்தவைத்தியம், ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி போன்ற முறைகளை பெருமளவுக்கு கையாள வேண்டும். நாட்டில் இப்போதிருக்கக்கூடிய நிலையில் எந்த அளவுக்கு பயன்படுத்தமுடியுமோ அந்த அளவு பயன்படுத்த வேண்டும். அதற்கு ஒரு சிறிய திட்டம் வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் மீண்டும் வேண்டிக் கொள்வது இன்று இந்த மானியத்தில் கோரியிருக்கக்கூடிய குடி தண்ணீர் திட்டத்திற்கும் இதர மானியத்தில் கோரியிருக்கிற குறைந்த தொகை போதாது இருக்கிறது என்று கூறிக்கொண்டு அதிக தொகை ஒதுக்கி பல புதிய திட்டங்கள் வகுக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**SRI C. MUTHIAH PILLAI**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1-16 p.m. நமது ரெவன்யூ அமைச்சரவர்கள் கொண்டு வந்த மானியத்தை வரவேற்று ஒரு சில வார்த்தைகளை கூற விரும்புகிறேன். இந்த வருஷம் எல்லா வருஷத்தையும் காட்டிலும் இந்த மானியத்தை கேட்கும்போது அதில் அடங்கியுள்ள ஒவ்வொரு எதிர்கால திட்டத்தையும் பார்க்கும்போது மனதுக்கு குளிர்ச்சியாக இருக்கிறது. எதிர்கால திட்டங்களை அவ்வளவு தெள்ளத் தெளிவாக எடுத்து காட்டி இருப்பது எந்தெந்த தொகுதியில் என்னென்ன செய்யப்படும் என்று தெரிகிறது. இப்படியெல்லாம் சொல்லியிருக்குபோது இதுவரையில் நடந்த காரியங்களெல்லாம் சரிவர நடந்து கொண்டிருக்கிறதா என்று முக்கியமாக கவனிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். புதிதாக ஒரு காரியத்தை ஆரம்பிக்கும் முன் ஆரம்பித்த காரியங்கள் சரிவர நடக்கிறதா என்று ரெவின்யூ அமைச்சர் தீவிரமாக கவனிக்க வேண்டும். வருவாய் அமைச்சராக இருப்பவர் வைத்திய அமைச்சராக இருப்பதால், வரிபோட்டு ஜனங்களை கஷ்டப்படுத்துகிற அதே சமயத்தில் வைத்திய முறையில் இருப்பது புண்ணியமாக இருக்கும் என்ற காரணத்தால் அமைச்சரவர்கள் தீவிரமாக முயற்சி எடுத்து இவைகளை நல்ல முறையில் நிறைவேற்றுவார் என்று நம்புகிறேன். இன்று கிராம ஆஸ்பத்திரிகள், தாலூக்கா ஆஸ்பத்திரிகள் மற்ற நகர ஆஸ்பத்திரிகளை கண்ணோட்டமாக பார்க்கவேண்டும். நகர ஆஸ்பத்திரிகளில் எங்கு போவது எங்கு வருவது என்று தெரியவில்லை. எங்கு பார்த்தாலும் ஒரே வழவழப்பாக இருக்கிறது. அங்கு வேலை செய்பவர்கள் உற்சாகமாக இறுக்கிறார்கள். ஜில்லா தலைநகரிலோ அல்லது தாலூகா தலைநகரிலோ உள்ள ஆஸ்பத்திரியை போய்ப் பார்த்தால், மிக கேவலமாக சொன்னால், பிச்சைக்கார விடுதிபோல இருக்கிறது. நல்ல ஆஸ்பத்திரியாக மாறும் நல்ல காலம் வரும் என்று நினைக்கிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

குறிப்பாக தஞ்சையில் எடுத்துக்கொண்டு பார்த்தோமானால் இன்றைக்கு 175 பேஷண்டுகள் வெளியிலே இருக்கிறார்கள். சராசரி 650 பேஷண்டுகள் இருக்கவேண்டியது போக 175 பேர் வெளியிலே படுக்கும் நிலைமை இருக்கிறது. மேற்கொண்டு விஸ்தரித்து படுக்கை கட்டிட வசதியை அதிகப்படுத்துவது இன்றிமையாத அவசியம். தாலூகா தலைநகர ஆஸ்பத்திரியை, தேசிய விஸ்தரிப்பு திட்டத்திலும், சமுதாய நல திட்டத்திலும் பணம் இருக்கிற காரணத்தால், விஸ்தரிக்கும் நிலைமை இருக்கிறது. ஜில்லா ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் கிடைக்க முடியாத நிலையில் இருக்கின்றன.

இவைகளையெல்லாம் நிவர்த்திக்க ஆஸ்பத்திரிகளிலெல்லாம் ஒழுங்காக டாக்டர்கள் இருக்கிறார்களா ? மருந்துகள் எல்லாம் சரியாக "சப்ளை" செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதை முதலில் பார்க்கவேண்டும். ஒன்று டாக்டர் இருப்பதில்லை, அல்லது மருந்து இருப்பதில்லை. இப்படி ஒன்று இருந்தால் இன்னொன்று இல்லை என்ற நிலைமை அனேக ஆஸ்பத்திரிகளில் காணப்படுகிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். டாக்டர் தான் இல்லையென்றால், மருந்து கொடுப்பதற்கு தேவையான கம்பவுண்டரோ, மருந்தோ இருக்கிறதா என்று பார்த்தால் போதுமான மருந்து இருப்பதில்லை. ரெகுலர் டிஸ்பென்சரியில் சுமார் 300 நோயாளிகள் வந்து கொண்டிருந்தாலும் ஒரு குறித்த அளவுக்குத் தான் மருந்து சப்ளை செய்யப்படுகிறது. கம்பவுண்டரும் ஒருவரே தான் இருக்கக்கூடிய நிலைமை காணப்படுகிறது. வருடா வருடம் தலை எழுத்தே என்று ஒரு குறிப்பிட்ட தொகை தான் மருந்துக்காக ஒரு ஆஸ்பத்திரிக்கென ஒதுக்கப்பட்டு மருந்து சப்ளை செய்யப்படுகிறது. எத்தனையோ வருடங்களுக்கு முன் நிர்ணயம் செய்தபடி மருந்துக்காக வருடமொன்றுக்கு 1,200 ரூபாய் என்றால், அதே புள்ளி விவரத்தை வைத்துக்கொண்டு, அதே தொகை தான் வருடா வருடம் ஒதுக்கப்படுகிறதுதே தவிர, வருடா வருடம் வியாதியஸ்தர்களின் எண்ணிக்கை எப்படி இருக்கிறது, உயர்ந்திருக்கிறதா குறைந்திருக்கிறதா என்று பார்த்து, மருந்து சப்ளை செய்வதை கூட்ட வேண்டுமா குறைக்க வேண்டுமா என்று எண்ணிப்பார்ப்பதே இல்லை.

தாலூகாவிலே இருக்கும் ஒவ்வொரு ஆஸ்பத்திரிக்கும் மருந்து எங்கிருந்து வர வேண்டியிருக்கிறதென்றால், சென்னையிலுள்ள மெடிகல் டிபோவிலிருந்து வரவேண்டியிருக்கிறது. அங்கிருந்து மருந்து தருவிக்க வேண்டுமென்றால், "இன்டென்ட்" ஆனது பலப்பல இலாகா மூலமாக சுற்றி, கடைசியில் மெடிகல் டிபோவிலிருந்து மருந்துகள் தாலூகா ஆஸ்பத்திரிக்கு வந்து சேருவதற்கு மிக மிகக் கஷ்டம் இருக்கிறது. டிபோவிலிருந்து மருந்து வருகிற வரைக்கும் எத்தனை வியாதியஸ்தர்கள் காத்திருக்க முடியும் ? வசதியுள்ளவர்கள் ஏதோ சென்னையிலிருந்து மருந்து வரவழைத்து சிகிச்சை செய்து கொள்ளுகிறார்கள். பெரும்பாலானவர்கள் மருந்து கிடைக்காமல் பல கஷ்டங்களுக்குள்ளாக வேண்டியிருக்கிறது. ஆகவே, இம்மாதிரி காரியங்களில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு முக்கியமாக அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, தஞ்சையில் மருத்துவக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்வார்கள் என்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு தொழிற் கல்லூரியும் ஒரு மருத்துவக் கல்லூரியும் கோவையிலோ, தஞ்சையிலோ, காரைக்குடியிலோ ஆரம்பிக்கப்படும் என்பது நீண்ட நாள் பிரச்னையாக இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், எங்கு அதிகமாகப் பணம் கொடுக்கப்படுகிறதோ அந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் என்று முதலிலே தெரிவித்திருந்தார்கள். நான் முதலிலே நினைத்திருந்தேன் தர்ம ஸ்தாபனங்களின் உதவியைக் கொண்டு, அதற்குள்ள பணங்களெல்லாம் தஞ்சை ஜில்லாவில் எழுப்பிவிடலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால், இப்பொழுது புதிய யோசனை ஒன்று எனக்குத் தோன்றுகிறது. சென்ற சில வாரத்திற்கு முன், நமது அமைச்சர்களுடைய பெரு முயற்சியால் ஒரு கோடியே 75 லட்சம் ரூபாய் எங்கள் ஜில்லா போர்டுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். மாயவரத்திலிருந்து அரந்தாங்கி வரையிலுள்ள ரயில் பாதையானது தஞ்சை ஜில்லா போர்டுக்குச் சொந்தம் என்றும், அதற்காக நஷ்டஈடாக மத்திய சர்க்காரிலிருந்து ஒரு கோடியே 75 லட்சம் ரூபாய் சமரச முயற்சியிலே நமது அரசாங்க மந்திரிகள் வாங்கிக் கொடுத்திருப்பது உண்மையிலேயே பெருமைப் படத்தக்கது. தஞ்சை ஜில்லா போர்டுக்காக வாங்கிக்கொடுத்திருக்கும் பணத்தை ஜில்லா போர்டுக்கே கொடுத்து விடுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், அரசாங்கத்திலேயே அந்தத் தொகையை வைத்துக்கொண்டு, அந்தத் தொகைக்கான வட்டிப் பணத்தை மட்டும் ஜில்லா போர்டின் பராமரிப்புக்காக கொடுக்கப் போவதாக



நான் கேள்விப்படுகிறேன். ஜில்லா போர்டுக்குச் சொந்தமான இந்த ஒரு கோடி 75 லட்ச ரூபாயோ, இன்னும் அதிகமாக வேண்டுமென்றாலும் வைத்தியக் கல்லூரியை தஞ்சையில் ஆரம்பிப்பதற்கு நாங்கள் ஜில்லா போர்டு தலைவரிடமோ மற்றுமுள்ள மெம்பர்களிடமோ சொல்லி, அதற்காக ஏகமனதாகத் தீர்மானங்கள் போட்டு அனுப்பத் தயாராய் இருக்கிறோம். அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு, இன்னும் சர்க்கார் அதிகமாகப் பணம் போட்டு, தஞ்சையிலுள்ள தலைமை ஆஸ்பத்திரியை வைத்தியக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு ஏற்றபடி விஸ்தரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தஞ்சை ஜில்லாவில் இதற்கு முன்பு எல்.எம்.பி. வைத்தியப் படிப்பு சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தது. எல்.எம்.பி. வைத்தியப் படிப்பே தஞ்சையில்தான் இருந்தது என்று சொல்கிறார்கள். தஞ்சையில் இன்றைய தினம் 300 பேர் தங்கக் கூடிய வசதி இருக்கிறது. தஞ்சை ஜில்லாவின் தலைநகரத்தை அடுத்து போதுமான இடம் வைத்தியக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு இருக்கிறது. வல்லம் ரோட்டில் இடம் இருக்கிறது. நிபுணர்கள் வந்து பார்த்தபோதும் கூட தஞ்சையில் சரியான இடம் இருந்தது. அதற்குள்ள பேச்சு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், நிபுணர்கள் குழு அங்கு வந்தபோது "தஞ்சையில் வைத்தியக் கல்லூரி ஆரம்பிப்பது எப்படி சாத்தியம்" என்ற முறையில் சந்தேகத்தோடு வந்தார்களே தவிர வேறொன்றுமில்லை. அரசாங்கத்திற்கு அனுசரணையாக இருந்திருந்தால் கண்டிப்பாக வைத்தியக் கல்லூரியை அங்கு ஆரம்பிப்பதற்கு முடிந்திருக்கும். அந்த வகையில் அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பிப்பது பற்றி ரெவினியூ மந்திரி அவர்கள் கூறினார்கள். ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் சாதாரண ஆஸ்பத்திரிகளை விட மிக மிக விசேஷமாக இருக்கின்றன. மிக மிகப் பயன் படக்கூடியதாகவும் இருக்கின்றன. ஒரு தாலூகாவிலே, ஒரு ரேஞ்சில் ஒரு இடத்தில் ப்ரைமரி ஹெல்த் சென்டர் இருந்து விட்டால், அதைச் சுற்றியுள்ள இடங்களுக்கெல்லாம் வைத்திய வசதி கிடைத்து விடுகிறது என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால், ப்ரைமரி ஹெல்த் சென்டரில் எம்.பி.பி.எஸ். படித்த டாக்டரும், நர்சும், கம்பவுண்டரும், "மொபைல் வான்" இல் கிராமம் கிராமமாகச் சுற்றிப் பார்த்து, எந்தெந்த இடத்தில் என்னென்ன வைத்திய வசதி தேவை என்பதை அறிந்து, அங்கெல்லாம் வைத்திய வசதி செய்வதற்கு மிக சௌகரியமாக இருக்கிறது. இம்மாதிரி சென்டர்கள் தேசீய விஸ்தரிப்புத் திட்டப் பகுதிகளிலும், சமுதாய நலத் திட்டப் பகுதிகளிலும் அமைக்க வேண்டும். டாக்டர்கள் இல்லாமலும் மருந்துகள் இல்லாமலும் ஆஸ்பத்திரிகளை நடத்துவது சரியல்ல. இந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டு, எங்கு பார்த்தாலும் ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதோடு, அவைகளில் டாக்டர் வசதியும், மருந்து வசதியும் தாராளமாக ஏற்படுத்திக் கொடுத்தால், கிராமப் புரங்களில் நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்ற முடியும் என்று தெரிவித்துக்கொண்டு, இது விஷயத்தில் அமைச்சர் அவர்கள் விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பிப்பதில் அனாவசியமாக தாமதம் ஏற்படுகிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை. முக்கியமாக, தேசீய விஸ்தரிப்புப் பகுதியில் இப்படிப்பட்ட சென்டர்கள் ஆரம்பிப்பதற்கு உடனடியாக உத்தரவு வருகிறது. ஆனால், சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் ஆரம்பிப்பது என்றால் உடனடியாக உத்தரவு அரசாங்கத்திடமிருந்து வருவது இல்லை. காரணம் விளங்கவில்லை. தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டு பார்த்தால், தேசீய விஸ்தரிப்புத் திட்டம் இருக்கும் பகுதியில் எல்லாவற்றிலும் ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பித்தாய் விட்டது. அதே மாதிரி சமுதாய நலத்திட்டப் பகுதிகளிலும் ஆரம்பித்தால் நலமாக இருக்கும். இப்பொழுது தான் முதல் மந்திரி அவர்கள் தஞ்சை ஜில்லாவுக்கு வந்தபோது வேதாரண்யம் என்னும் இடத்தில் ஒரு ப்ரைமரி

ஹெல்த் சென்டர் ஆரம்பிக்கப்பட்டதே தவிர, இதர இடங்களில் ஆரம்பிக்கப்படவில்லை—எவ்வளவு முயற்சி எடுத்தாலும்—என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தஞ்சை ஜில்லாவிலே விசேஷமாக தனவந்தர்களுடைய உதவியைக் கொண்டு செங்கிப்பட்டி சானடோரியத்தை விசேஷ முயற்சியால் கட்டி அமைத்திருக்கிறார்கள். அதற்கு தனவந்தர்கள் கொடுத்த நிலத்திலிருந்து வருவாயும், பணத்திலிருந்து வட்டியும் வருவதைக் கொண்டு அந்த சானடோரியம் நடத்தப் படுகிறதேயொழிய, அரசாங்கத்திலிருந்து சென்ற வருஷம் கொஞ்சம் தான் பணம் ஒதுக்கப்பட்டது. **Non-paying wards**-ல் அதிகமாக "பேஷண்டு" களைச் சேர்க்கும்படியான நிலையில் இருப்பதால் **Non-paying wards** அதிகமாகத் தேவைப்படுகின்றன. இன்னும் ஒரு கட்டிடம் **Non-paying wards**-க்காக கட்டிக் கொடுக்க அரசாங்கம் சலுகை காட்டினால் நலமாக இருக்கும். அப்படிச் செய்தால், பேஷண்டுகள் சாவதற்குள்ளாகவாவது அவர்களைக் கவனிக்கும்படியாக இருக்கும். பேஷண்டுகள் அட்மிஷனுக்காக மனுச்செய்து கொண்டால், அவர்கள் செத்த பிறகுதான் "இடம் கிடைக்கும்" என்ற உத்தரவு கிடைக்கும் நிலை இப்பொழுது இருக்கிறது. தக்க உத்தரவு அளிக்க முடியாவிட்டால், நோயாளிகள் வெளியில் தங்கி செங்கிபட்டி சானடோரியத்திற்கு தினமும் வந்து வைத்திய வசதி பெற்றுக்கொள்வதற்காவது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

சென்ற வருஷம் தாலூகா ஆஸ்பத்திரியை தலைநகர ஆஸ்பத்திரியாக சர்க்காரில் சேர்த்தார்கள். சென்ற வருஷம் சீர்காழியிலுள்ள ஆஸ்பத்திரியை சர்க்கார் ஆஸ்பத்திரியாக சேர்த்துக் கொண்டார்கள். ஏதோ சர்க்கார் நிர்வாகத்தில் எடுத்துக்கொண்டுவிட்டால், ஜில்லா போர்டு நிர்வாகத்திலிருந்து சர்க்கார் மேர்பார்வையில் வந்துவிட்டால், உடனே எல்லா வசதியும் ஏற்பட்டுவிடும், கட்டிடங்கள் பெரிதாகக் கட்டப்பட்டு விடும், மருந்துகள் அதிகமாக ஒதுக்கப்பட்டு எல்லா வசதிகளும் உடனடியாக ஏற்பட்டுவிடும் என்று நான் எதிர்பார்த்தேன். நான் எதிர்பார்த்த அளவுக்கு பெரும் ஏமாற்றமாகத்தான் இருக்கிறது. சர்க்கார் நிர்வாகத்திற்கு வந்து 6, 7 மாதங்கள் ஆகியும் ஓரளவுகூட அசையவில்லை. வாட்ச்மென் கூட ஏற்படுத்தப்பட்டு, வியாதியஸ்தர்கள் நல்ல முறையில் கவனித்துக்கொள்வதற்கான ஏற்பாடு நடக்கவில்லையென்பதைப் பார்க்கும்போது, முன்பு இருந்த நிலையே போதும் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. அங்கத்தினர்கள் கேள்வி நேரத்தில், ஒவ்வொருவரும், அங்கங்கே இருக்கும் ஆஸ்பத்திரியை சர்க்கார் ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டதைப் பார்க்கும்போது, அவர்கள் அப்படி நினைப்பதை இன்னும் கொஞ்சம் நாள் பொருத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏனென்றால், சர்க்காருடைய நிர்வாகத்திற்கு ஆஸ்பத்திரி மாறிய பிறகும் நிலைமை வெகுவாக சீர்திருந்திவிடவில்லை. அமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள் குறைந்தது 50 படுக்கை வசதியாக தாலூகா ஆஸ்பத்திரியில் செய்துகொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது எந்த அளவுக்கு நிறைவேறும் என்று சொல்வதற்கில்லை என்றாலும், அடிப்படையாக ஆஸ்பத்திரியில் நோயாளிகளுக்கு வசதியாக குடிதண்ணீர் வசதி, வாட்ச்மென் வசதி, ஸ்ளார்க் வசதி இவைகளாவது உடனடியாக அரசாங்கத்திலிருந்து ஏற்பாடுத்திக் கொடுத்தால்தான் நலமாக இருக்கும். இந்தச் சிறிய விஷயத்தில் கூட ஜில்லா மெடிகல் ஆபீசருக்கு அதிகாரம் இல்லாமல், அரசாங்கமே சாங்ஷன் செய்ய வேண்டியிருக்கிறதென்றால், எப்பொழுது இந்த ஆஸ்பத்திரிகள் எல்லாம் நல்ல முறையில் நடக்கப் போகின்றன ? அரசாங்க நிர்வாகத்திற்கு மாறியதற்கு அடையாளமாக ஏதாவது நல்ல காரியம் உடனடியாக அவர்கள் செய்து கொடுக்க வேண்டும். அங்கு இருக்கும் சிப்பந்திகள் ஏற்கெனவே ஜில்லா போர்டின் கீழ் வேலை செய்ததன் காரணமாக, 10, 15 வருஷங்கள் சர்வீஸ் போட்டும், அவர்களுடைய சர்வீஸ் எல்லாம் ரெகுலரைஸ் செய்யப்படாமல் இருக்கிறது. அவர்களுடைய சர்வீசை ரெகுலரைஸ் செய்வதற்கும் தக்க உத்தரவு அரசாங்கத்திலிருந்து போடப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.





கீழ்த்தர சிப்பந்திகள் எல்லாம் பழைய நிலையிலேயே இருக்கிறார்கள். அதிகமான சம்பளம் போடுவதற்கும், இன்க்ரிமெண்ட் கொடுப்பதற்கும் முடியாமல் இருப்பதால், தோட்டி போன்ற தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் ஆஸ்பத்திரியில் வேலை செய்ய வரமாட்டேன் என்கிறார்கள். நகரத் தொழிலாளர்களாக வேலை செய்வதற்குப் போகும்படியான நிலைமையில் இருக்கிறார்கள். அது மிகவும் தர்ம சங்கடமான நிலைமையில் இருக்கிறது. ஆகவே, மாகாணம் பூராவும் ஒரே சம்பள விகிதத்தை இப்படிப்பட்ட சிப்பந்திகளுக்கெல்லாம் நிர்ணயம் செய்து, அவர்களுக்கு நல்ல வாழ்வு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI M. JAGANNATHAN : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று நாம் படித்திருக்கின்றோம்—ஏட்டளவிலே. ஆனால், நடைமுறையில், நோயற்ற வாழ்வாகிய செல்வம் நம்முடைய மாநிலத்திலுள்ள மக்களுக்கு எந்த அளவு கிடைத்திருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்த்தால், உண்மையிலேயே நாம் கண்ணீர் வடிக்கும் நிலைமையில் இருக்கிறோம். ஏனென்றால், இந்த நாட்டிலிருக்கும் மக்கள், அதிலும் பெரும்பாலான மக்கள் கிராமத்தில் வாழும் மக்கள் நோயுற்ற சமயத்தில் டாக்டரை அழைத்து தங்களுடைய நோயை நிவர்த்தித்துக் கொள்வதற்குப் பதிலாக பூசாரியை அழைத்து, உடுக்கை அடிக்க வைத்து, விபூதி பெற்றுக்கொண்டு, அவர் கூறும் யோசனை பேரில்தான் வியாதியைத் தீர்த்துக்கொள்ள முன் வருகிறார்கள். அந்த அளவுக்கு நம்முடைய நாட்டிலே டாக்டர்கள் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. இந்த உண்மையை எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள் நன்றாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். 1:37 p.m.

நம்முடைய இந்திய நாட்டிலே சுமார் ஐயாயிரம், ஆறாயிரம் ஜனங்களுக்கு ஒரு டாக்டர் வீதம் தான் இப்பொழுது இருக்கின்றார் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே தான், நம்முடைய கிராம மக்கள் சிறந்த முறையில் வைத்திய சேவை பெறுவதற்கு வசதி இல்லாமல் அவர்கள் மூடப் பழக்க வழக்கங்களை நம்பிக்கொண்டு அதிகமான கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். கிராமப் பகுதியிலே வசிக்கின்ற மக்கள், அதிலும் பெண்மணிகளை நாம் பார்த்தால், அவர்கள் படுகின்ற கஷ்டங்கள் மிக மிக எண்ணற்றவை. கிராமங்களிலே சாதாரணமாக பிரசவம் நடக்கிறது ஒரு அன்றாட வாழ்க்கைச் சம்பவமாக இருக்கிறது. இந்தப் பிரசவ வசதி கிராமங்களிலே மிக மிகக் குறைவு. எனக்குத் தெரியும்—கிராமங்களிலே பெண்கள் பிரசவ வேதனையால் கஷ்டப்படும்போது அங்கே அவர்களுக்குப் போதிய சிகிச்சை பெறுவதற்கு வசதி இல்லாத காரணத்தால், தாலூகா தலைநகரங்களில் இருக்கும் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிகளுக்கு பிரசவவேதனைபடுகிற தாயை வண்டியில் அழைத்துக் கொண்டு போகும்போது அவர்கள் நடு வழியிலேயே பிரசவம் செய்து விடுகிறார்கள். அப்படி நடுவழியில் பிரசவம் ஏற்படும்பொழுது யாராவது தாயும், சேயும் உயிரோடு இருக்க முடியும் என்று நம்பமுடியுமா ? உயிர்ச்சேதம் ஏற்படுகிறது. இது உண்மையிலேயே தாய் இனம் பெருமை படக்கூடிய நிலைமை அல்ல. இதைக் குறித்து நாம் மாத்திரம் அல்ல, நம்மை ஆட்சி செய்கின்ற இந்தச் சர்க்காரும் அவமானப்படக்கூடிய செயலாக இது இருக்கிறதென்பதை நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சமீப காலத்தில் மத்திய அரசாங்கத்திலே சுகாதார மந்திரியாக இருந்த திருமதி அமிருதகௌரி ரஷ்யாவுக்குச் சென்று, அங்கு சுற்றுப்பிரயாணம் செய்து, அங்குள்ள சுகாதார நிலைமையைப் பார்வையிட்டு, நம் நாட்டுக்கு வந்தவுடன் நல்ல கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அந்த ரஷ்ய நாட்டிலே ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பிரசவ விடுதி இருப்பதாக அந்த அம்மையார் சொன்னார்கள். நம் நாட்டிலும் அம்மாதிரி ஏற்படுவதாக இருந்தால் பொருளாதார நெருக்கடி இருக்கிறதென்றும் ஒவ்வொரு

[Sri M. Jagannathan] [17th July 1957

கிராமத்திலும் பிரசவ விடுதி வைப்பது சாத்தியம் இல்லை என்று சொன்ன போதிலும் கூட ஒவ்வொரு பிர்க்காவிற்குமாவது ஒரு பிரசவ விடுதியை ஏற்படுத்த சர்க்கார் முன் வரவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே குறிப்பாக தொத்து நோய் வியாதிகளை எல்லாம் தடை செய்வதற்கு அவர்கள் நல்ல திட்டம் போட்டிருக்கிறார்கள். அதற்குப் பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு அவர்கள் நல்ல திட்டம் வகுத்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் மலேரியா, யானைக்கால், அம்மை, காலரா முதலிய தொத்து நோய்கள் வராமல் தடுப்பதற்கு இப்போது எடுக்கப்பட்டு வருகிற நடவடிக்கை திருப்திகரமாக போதுமான அளவில் இல்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்தத் தொத்து நோய்கள் வந்த பிறகு நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக வருவதற்கு முன்பே ப்ரிவென்டிவ் மெடிசின் கொடுக்க சர்க்கார் நல்ல நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொத்து நோய்களைப் பற்றிப் பேசும்போது க்ஷயரோக வியாதியைப் பற்றிக் குறிப்பிட வேண்டியது அவசியம் ஆகிறது. லட்சக்கணக்கான பேர்கள் க்ஷயரோகத்தினாலே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வியாதியைத் தடுப்பது கிடையாது. நம்முடைய நாட்டில் குறைந்த பட்ச அளவில்தான் க்ஷயரோக ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஆஸ்பத்திரிகளில் சேர்ந்து மருந்து சாப்பிட்டு வருகிறவர்களைக் காட்டிலும் வெளியில் இருப்பவர்களும், ஆஸ்பத்திரியில் இனிமேல் சேருவதற்காக வெயிட்டிங் லிஸ்டில் இருப்பவர்களும் தான் அதிகமாக இருக்கிறார்கள். இந்த வியாதிக்காரர்களுக்கு இன்ஸ்டிடூஷனல் ட்ரீட்மெண்டு தேவைப்படுகிறது. இவர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படவேண்டும், நீண்ட காலம் நல்ல கவனிப்பில் மருந்து சாப்பிடவேண்டும், அப்போது தான் நோய் குணம் காணலாம் என்கிற நிலைமை அவசியமாவதால் அவர்களுக்குப் போதிய அளவு ஆஸ்பத்திரிகளையும், இட வசதியையும் செய்து கொடுக்க வேண்டுமென்பதாக நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். இவர்கள் இன்றைய தினம் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட வசதி இல்லாததனால் இவர்களால் வெளியில் அதிகமாக நோய் பரவுகிறது. இது மிகவும் வருந்தக்கூடிய நிலைமையாக இருக்கிறது. ஆகவே போதுமான க்ஷயரோக ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தி இவர்களை எல்லாம் அங்கே சேர்த்துவிட வேண்டும் என்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரியாக தென்னாற்காடு ஜில்லாவில் குஷ்டரோக வியாதி மிக மிக மோசமாகக், கடுமையாக இருக்கிறதென்பதை இந்தச் சமயத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். தென்னாற்காடு ஜில்லாவில் உலகத்திலேயே இல்லாத அளவு "இன்ஸிடென்ட்ஸ் ஆப் லெப்பர்ஸி" அதிகமாக இருக்கிறது என்பதை எல்லோரும் உணர்வார்கள். அந்த ஜில்லாவில் மிகப் பெரும்பாலான மக்களை வருத்திக் கொண்டிருக்கும் குஷ்டரோக வியாதியை உடனடியாகக் கவனித்து குணப்படுத்துவதற்கு, மேலும் பரவாமல் தடுப்பதற்குப் போதுமான அதிக எண்ணிக்கையில் அந்த ஜில்லாவில் குஷ்டரோக ஆஸ்பத்திரிகளை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதாகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். மேலும் தென்னாற்காடு ஜில்லாவில் தனியார் ஸ்தாபனம் ஒன்று "ஹிண்ட் குஷ்ட நிவாரண்" என்கிற ஸ்தாபனம் நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. கண்ணும் கருத்துமாக குஷ்டரோகிகளைக் கவனித்து நல்ல முறையில் சிகிச்சை அளித்து வருகிறார்கள். அவர்களுக்குப் போதுமான அளவில் மானியம் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

1-45 p.m. **SRIMATHI P. K. R LAKSHMIKANTHAM** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன் நமது சர்க்கார் சுகாதார விஷயத்தில் அதிக கவனம்



7th July 1957] [Srimathi P. K. R. Lakshmikantham]

செலுத்தி வருவதோடு கூட ஆங்காங்கே பல ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தி மக்களுக்கு நன்மை செய்வதிலே அதிகமாக முனைந்திருப்பதைப் பார்த்து நான் சந்தோஷப்படுகிறேன்.

பல வருஷங்களுக்கு முன்பு எந்த விதமான சுகாதார வசதிகளோ, ஆஸ்பத்திரி வசதிகளோ இந்த நாட்டில் இருந்தது இல்லை. குறிப்பாக பிரசவ விடுதிகள் இவ்வளவு அதிக எண்ணிக்கையில் அந்தக் காலத்தில் இருந்ததே இல்லை. ஆனால் சில ஆண்டுகளுக்குள்ளாகவே ஆங்காங்கே பிரசவ விடுதிகளை அதிகமாக ஏற்படுத்தி தாய்மார்களுக்கு அதிக வசதி செய்து கொடுத்திருப்பதோடு அவர்களுக்கு முன்பு ஏற்பட்டுக்கொண்டிருந்த கஷ்ட நஷ்டங்களை எல்லாம் நமது அரசாங்கம் நிவர்த்தி செய்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

முன்பெல்லாம் நகரப் பகுதிகளிலும் சரி, கிராமப் பகுதிகளிலும் சரி, பெண்கள் பிரசவ காலத்தில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படுவது என்பதே கிடையாது. ஆஸ்பத்திரி என்றாலே அவர்கள் மிக்வும் அஞ்சுவார்கள். இன்று சகஜமாகப் பிரசவம் என்றால் ஆஸ்பத்திரியில் சேருவது என்பது நடைமுறைக்கு வந்து விட்டது. இதற்குக் காரணமே நமது அரசாங்கமும், ஆங்காங்குள்ள முனிசிபாலிடிகளும் அதிகமான எண்ணிக்கையில் ஆங்காங்கே பிரசவ விடுதிகளை அமைத்து மக்களுக்கு நல்ல சேவை செய்து வருவது தான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

என்றாலும் நான் சில விஷயங்களை—அதாவது ஆஸ்பத்திரிகளில் உள்ள குறைபாடுகளை நான் எடுத்துச் சொல்லி குறை கூறுவதாக அல்ல—இன்னும் என்ன என்ன முறையில் ஆஸ்பத்திரிகளில் அதிக வசதி மக்களுக்கு தேவைப் படுகிறது என்பதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக மதுரையில் அரசாங்க ஆஸ்பத்திரியில் பிரசவ பகுதிகளில் பெண்கள் சேர்க்கப்பட்டால் அவர்களுடன் கூட யாரும் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இருக்கவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டாலும் "நர்சுகள் இருக்கிறார்கள். உங்களுக்கு அதைப்பற்றி என்ன தெரியும்? நீங்கள் இங்கே இருக்கக்கூடாது" என்று சொல்லி விடுகிறார்கள். எவ்வளவு தான் நல்ல முறையில் சிகிச்சை அளிக்க நர்சுகள் இருந்தாலும் தங்களுடைய உறவினர்களில் யாராவது கூட இருக்கவேண்டுமென்றே பெரும்பாலும் தாய்மார்கள் விரும்புவார்கள். ஆகையால் கண்டிப்பாக அவர்களைச் சேர்ந்தவர்களில் யாராவது தாயோ, சகோதரியோ இருப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று உத்திரவு போட்டால் நலமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. இதனால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படுகிற தாய்மார்களுக்கு மனதைரியம் அதிகம் இருக்கும். சிகிச்சையும் நன்றாக அமையும் என்பதும் என் கருத்து.

இதைப் போல, இன்னும் பல கொடிய நோய்கள் இருப்பவர்களுக்கும் ஆஸ்பத்திரிகளில் கூட ஆட்களை வைத்துக்கொள்ள அனுமதி கொடுப்பதில்லை. சாதாரணமான நோயாக இருந்தால் அதைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை; தனியாக இருந்தாலும் அதுபற்றி பீதியடைவதில்லை. ஆனால் நோய் அதிகமாய் இருந்தாலும் அல்லது "டைபாய்டு," "நிமோனியா" போன்ற ஜுரங்கள் அவர்களுக்கு இருந்தால் தம்மோடு தம் வீட்டு ஆட்கள் . இருந்தால் நலம் என்று அவர்கள் குறிப்பாக பெண்கள் நினைக்கின்றார்கள். அந்த நேரங்களிலே அவர்கள் தங்களோடு தங்கள் வீட்டு ஆட்களை வைத்துக்கொள்வதற்கு சர்க்கார் ஆஸ்பத்திரிகளிலே அனுமதிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். சாதாரணமாக சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் பொதுப்படுக்கைகளும் விசேஷ படுக்கைகளும் உண்டு. விசேஷ படுக்கைகளுக்கு (Special Wards) வருபவர்களுக்கு ஒரு சலுகை உண்டு அதாவது தங்களுடன் ஒருவரை வைத்துக் கொள்ளலாம் என்பது. ஆனால் பொதுப்படுக்கைக்கு வருபவர்கள் தங்கள் கூட இவ்விதம் யாரையும் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. சாதாரணமாகப் பொதுப் படுக்கைகளுக்கு வருபவர்கள் அதிக ஏழை மக்களாக இருக்கின்றார்கள் ஆகையால், அவர்களும் கடுமையான நோய்களால்

[Srimathi P. K. R. Lakshmikantham] [17th July 1957

பாதிக்கப்பட்ட நேரத்திலும், பிரசவகாலங்களிலும், தங்கள் கூட ஒரு ஆளை
வைத்துக்கொள்ள வசதி செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளு
கிறேன்.

இரண்டாவதாக சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் பல அரிய மருந்துகள்
நோயாளிகளின் சிகிச்சைக்காக வாங்கி வைக்கப்பட்டு இருந்தாலும், சில
சமயங்களில் ஏழைகளுக்கு நல்ல உயர்ந்த மருந்துகள் கிடைப்பதில்லை.
ஆஸ்பத்திரி அதிகாரிகள் இந்த ஏழை நோயாளிகளைப் பார்த்து 'இந்த
விலை உயர்ந்த ஊசி மருந்துகள் இங்கு இல்லை. நீங்கள் உங்கள் பணத்தைக்
கொண்டு வெளியில் வாங்கி வந்தால் நாங்கள் ஊசி போடுகிறோம்' என்று
சொல்கிறார்கள். சர்க்கார் நல்லெண்ணத்துடன் தான் இந்த உயரிய
மருந்துகள் ஏழை மக்களுக்கு பயன்படவேண்டும் என்றுதான் அவை
களை சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் வாங்கி வைக்கச் சொல்கிறார்கள். ஆனால்,
பாவம் ஏழை மக்கள் அங்கு சென்றால் அவர்களுக்கு இம்மருந்துகள்
அதிகம் கிடைப்பதில்லை வேறு யாருக்குத்தான் இம்மருந்துகள் உபயோகப்
படுகின்றனவோ தெரியவில்லை. இதனால் ஏழை மக்கள் மிக்க அவதிக்
குள்ளாகிறார்கள். ஆகையால் அவர்களுக்காக கொடுக்கப்படும் இம்மருந்து
களை அந்த ஏழை மக்களுக்கே கிடைக்கும்படி செய்யவேண்டும் என்று
அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக சுகாதாரத்தைப்பற்றி சொல்வதற்கு முன், மதுரை
மாநகர் நமது ராஜ்யத்திலே ஒரு பெரிய முதல் நரமான நகரமாக இருந்
தும், சுகாதார வசதிக்கு முதல் படியான பாதாள சாக்கடை போடும் திட்ட
த்தை தொடர்ந்து அதாவது 8-ல் இருந்து 12 வரை உள்ள திட்டத்தை,
நகர சபை தனது பங்கை செலுத்த தாயராக இருந்தும் இந்த வேலே
யைத் தொடர்ந்து நடத்த தயாராக இருந்தும் சர்க்கார் தனது பங்கை
திடீர் என்று நிறுத்திவைத்து விட்டதானது மதுரைமா நகருடைய பிரதான
திட்டமாகிய சுகாதார வசதி பாதிக்கின்றது. ஆகவே, இந்தத் திட்டத்தை
தொடர்ந்து நடத்த சர்க்கார் பங்கை கொடுத்து உதவவேண்டும் என்றும்
இது சம்மந்தமாக உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று மந்திரி
அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் குடி தண்ணீர் கஷ்டம் இருக்கிறது என்பது
ஒவ்வொரு அங்கத்தினர் பேசுவதிலிருந்து நமக்கு தெரிகிறது. அவ்
விதமே மதுரையிலும் குடி தண்ணீர் கஷ்டம் இருக்கிறது, குறிப்பாக வெயில்
காலத்தில் சுமார் 4 மாதங்கள் மக்கள் குடி தண்ணீருக்குகாக மிகவும் கஷ்டப்
படுகிறார்கள். குழாய்களில் தண்ணீர் வருவதில்லை. கிணறுகளில் உள்ள
தண்ணீர் போதுமானதாக இல்லாமலும் குடிக்க முடியாதபடியும் இருக்கி
றது. முனிஸிபாலிடியார் லாரியில் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்
கிறார்கள், அந்தத் தண்ணீரை வைத்து சமாளிக்க முடியாமல் இருக்கிறது.
ஆகையால் வைகை ரிஸர்வாயர் திட்டத்தில் மதுரைக்கு குடி தண்ணீர்
வழங்கப்படவேண்டும். அதை உடனடியாக கவனிக்க வே[illegible]மென
கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையிலே யுத்த காலத்தில் ப்ளாட்பாரத்தின் மேல் கட்டப்பட்ட
தண்ணீர் தொட்டிகள் இருக்கின்றன. அந்த தொட்டிகளில் தீ அணைக்
கும் படையினர் தண்ணீர் நிறப்பி வைக்கிறார்கள். இந்த தண்ணீரை
2 மாதத்திற்கு ஒரு தடவை கூட மாற்றுவதில்லை. ஆதலால் அந்
தண்ணீரிலே பல புழுக்களும் கொசுக்களும் உற்பத்தியாகி அக்கம் பக்கத்
தில் உள்ளவர்களது சுகாதாரத்தை பாதிக்கிறது. ஆகையால் அத்தொட்டி
களை உடனடியாக எடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

மேலும் மதுரைமாநகர் போன்ற நகரங்களில் உள்ள சர்க்கார்
ஆஸ்பத்திரிகளுக்சென்று உள்ள Advisory Committee களில்
அந்நகரங்களில் உள்ள எம்.எல்.ஏ. க்களை கமிட்டி மெம்பர்களாக
நியமனம் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால்
அங்குள்ள ஏழை மக்கள் நம்மிடம் வந்து தமக்கு இந்த நோய் இருக்கி





17th July 1957] [Srimathi P. K. R. Lakshmikantham]

றது அந்த நோய் இருக்கிறது ஆஸ்பத்திரியில் சேர்த்து விடுங்கள் என்று
கெஞ்சுகிறார்கள். அந்நிலையில் நாம் ஒன்றும் செய்யமுடியாதவர்களாக
இருக்கிறோம். ஆகையால் அவர்களுக்கு உபகாரம் செய்வதற்காக அந்த
கமிட்டிகளில் எம்.எல்.ஏ.க்களை சேர்த்தால் நலமாக இருக்கும் என்று நினைக்
கிறேன். இவைகளை எல்லாம் கவனித்து மந்திரி அவர்கள் ஆவன செய்ய
வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**Sri K. ANBAZHAGAN**: அவைத்தலைவர்கள் அவர்களே, இந்த
அரசாங்கம் சுகாதாரம் வைத்தியத் துறைகளில் முயற்சி எடுத்துக்கொண்டு பல
திட்டங்களை அவர்கள் நிறைவேற்றி வந்த போதிலும், இன்றைய நாட்டி
லுள்ள நிலைமையைச் சீர்தூக்கி பார்த்தால், ஏழ்மை நிலைமை காரணமாக
பெரும்பாலான மக்கள் காற்றில்லாத வீடுகளில் குடி இருப்பதும் குடிக்கத்
தகாத நீரைப் பருகுவதும், தூங்கத்தகாத இடங்களில் தூங்குவதும்,
அளவுக்கு மீறிய கூட்டங்களாகச் சேர்ந்து வாழ்வதும் அதன்
காரணமாக அவர்கள் பல நோய்களுக்கு ஆளாகுவதும் ஆன துர்பாக்கிய
நிலைமை இந்தப் பாரத புண்ணிய பூமியில் உருவாகி இருப்பதை
காண்கிறோம். உண்மையாகவே, நாட்டுமக்களில் கிராமங்களில் வாழ்பவர்
களினுள் தங்களுக்குத் தேவையான வைத்திய வசதியை பெறமுடியவில்லை.
நகரங்களில் வாழும் மக்கள் வைத்திய வசதி இல்லாமல் ஒரு நாள்
பொழுதுகூட ஓட்ட முடியவில்லை. கிராமங்களில் ஆஸ்பத்திரிகளையே
காணமுடியாத நிலைமையில் மக்கள் இருக்கிறார்கள். நகரங்களில் மக்கள்
ஆஸ்பத்திரிகளுக்குப் போய் இடம் கிடைக்காத நிலைமையில் திரும்பி
வந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் குறைகள் எவ்வாறு ஏற்பட்டன
என்பது பற்றி சிந்தித்து அவைகளை நீக்குவதற்கான திட்டத்தை உருவாக்க
வேண்டும்.

டாக்டர் இல்லாத ஆஸ்பத்திரிகள், தாதிமார் போதுமான அளவுக்கு
இல்லாது கஷ்டப்படும் டாக்டர்கள், மருந்து இல்லாத சீசாக்கள், டாக்டர்
கள் எழுதிக் கொடுக்கும் மருந்தை வாங்க முடியாது வாடும் நோயாளி
கள், தண்ணீர் கலந்த மருந்தைப் பெற்றுத் தவிக்கும் நோயாளிகள், சில
பெரிய மருத்துவ மனைகளில் ஏழை எளியவர்கள் வைத்தியத்திற்குச்
சென்றால் அவர்கள் பக்கம் திரும்பிக் கூட பார்க்காத டாக்டர்கள், செல்
வந்தர்கள், அதே டாக்டர்களிடம் சென்று மடி கனத்தை காட்டிய உடனே
அவர்கள் மட்டும் அனுமதிக்கப்படும் அநீதி ஆகிய நிலைமைகளை தான்
இந்த மாநிலத்திலுள்ள பல மருத்துவ நிலயங்களிலும் காணமுடிகிறது.
இதைச் சொன்னால் கனம் அமைச்சர் அவர்கள் மறுத்து விடுவார்கள்
என்று நான் கருதவில்லை. ஏனென்றால், உள்ளம் உள்ளவர்கள்
எல்லாம் இந்த நாட்டு மக்களுக்குள்ள வேதனைகளை உணர்வார்கள். ஏழை
களுக்கு உதவ வேண்டியது அரசாங்கத்தின் முதல் கடமை. பணக்
காரர்கள் பண வசதியைக் கொண்டு எப்படியும் வைத்தியம் செய்து
கொள்ள முடியும். அயல் நாடுகளுக்குப் போய்க்கூட அவர்கள் வைத்தியம்
செய்து கொள்ள முடியும். ஏழைகளாக இருப்பவர்கள் அரசாங்கத்தா
ரால்தான் கவனிக்கப்படவேண்டும்.

இந்த அரசாங்கம் தமிழ் நாடு என்ற பெயரை இந்த மாநிலத்திற்கு
வைக்கவே தயங்கினாலும், அதை வைப்பதற்கு அஞ்சினாலும், தமிழ்
நாட்டிற்குச் செய்ய வேண்டிய சில சிறப்பான தனிக் கடமைகள் இருக்
கின்றன. அதையும் கனம் அமைச்சர் அவர்கள் மறந்துவிடுவார்களோ
என்று ஐயுறுகிறேன். அதாவது தமிழ் நாட்டில் சிறந்த வைத்திய முறை
யான சித்த வைத்தியம் முறையை வளர்க்க வேண்டும். தமிழ் நாட்டிற்
குறிய வைத்திய சித்த வைத்தியந்தான். யூனானி வைத்தியம் இஸ்லா
மிய கலாசாரத்தோடு சேர்ந்தது. ஆயுர்வேதம் ஆரியர்களது வைத்தியத்
திறமையால் ஏற்பட்டது. ஹோமியோபதி ஜெர்மனிய நிபுணரின்
அறிவுத் திறமையால் உண்டானது. அலோபதிக் வைத்திய முறை ஆங்கில
நாட்டுடன் தொடர்பு உள்ளது. சித்த வைத்தியந்தான் தமிழ் நாட்டு
வைத்தியம். தமிழர்கட்குப் பெருமையளிக்கும் மருத்துவம். நமது தமிழ்
நாட்டிலே 5,000 ஆண்டுகளுக்கு முன்பு சித்தர்களால் கண்டு பிடிக்கப்பட்டு,

திருவள்ளுவரால் போற்றப்பட்டு, திருமூலரால் வரையறுக்கப்பட்டது சித்த வைத்தியம். சுதந்திரம் வருவதற்கு முன்பே சித்த வைத்தியத்தைப் பேணி வளப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், இன்று அதை வளர்ப்பதற்கு முயற்சி அடியோடு கைவிடப் பட்டிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

சென்னையில் இந்திய வைத்தியக் கல்லூரி என்ற கல்லூரியானது 1927-ம் வருஷத்தில் பனகல் அரசர் இந்த மாநில முதல் மந்திரியாக இருந்த காலத்தில், அவருடைய ஆர்வத்தினால், ஏற்படுத்தப்பட்டது. அவர் "வெள்ளையர்களின் வைத்தியமான அலோபதி வைத்தியத்திற்கு நம் நாட்டு மக்கள் இறையாக வேண்டாம். நமது நாட்டுக்கு உரிய தனி வைத்தியம் இருக்கிறது. அதுவும் வளர்ந்தே தீர வேண்டும்". என்ற ஆர்வத்தினால் பேரறிஞர் ஸ்ரீ உஸ்மான் தலைமையில் ஒரு குழுவை நியமித்து, அதன் மூலம் சித்த வைத்தியம் ஓர் சிறப்பான வைத்தியமுறை என்பதை எடுத்துக் காட்டி, அதற்குப் பின்னர் இந்திய மருத்துவக் கல்லூரியையும் ஏற்படுத்தினார்கள். ஆனால் இன்றைய அரசாங்கத்தார் இந்திய வைத்தியக் கல்லூரியை மேல் நாட்டு வைத்தியம் கலந்த ஓர் கல்லூரியாக மாற்றியுள்ளார்கள். அப்படி மாற்ற வேண்டிய காரணங்கள் பல இருக்கலாம். அப்படி மாற்றியதன் விளைவாக, அங்கே சேர்ந்து படிக்க விரும்புவோர் "இண்டர்மிடியட்" பரீட்சை தேறியவர்களாக இருக்க வேண்டியிருக்கிறது, அவர்கள் அந்த வைத்தியக் கல்லூரியில் ஐந்தாண்டு காலம் படிக்க வேண்டியிருக்கிறது. அப்படி ஐந்தாண்டுகள் படித்தாலும் உயர்ந்த டாக்டர் பதவி கிடையாது. இப்படிப்பட்ட நிலைமையில் அக் கல்லூரி மாணவர்கள் "மருத்துவத்தில் நாங்கள் உயர்ந்த அறிவு பெற வேண்டும். கல்லூரிப் பரீட்சையில் தேறிய பிறகு எங்களுக்கு உயர்ந்த டாக்டர் பதவி கொடுக்க வேண்டும்." என்று கேட்டு வருகின்றனர். படிப்பு மாற்றத்திற் கேற்ப அந்தக் கல்லூரியின் பெயர் "காலேஜ் ஆப் இன்டெக்ரேடட் மெடிஸின்ஸ்" என்று மாற்றப்பட்டது. ஒரு குறிப்பிட்ட நிலைமை காரணமாக அந்தக் கல்லூரி மாற்றியமைக்கப் பட்டதை நான் வரவேற்கிறேன். அந்தக் கல்லூரி எந்த அடிப்படை நோக்கத்துடன் மாற்றியமைக்கப்பட்டதோ அந்த நோக்கம் நல்ல முறையில் நிறைவேற்றப்படுமானால், இப்படி மாற்றியமைந்திருப்பது நல்லது தான். ஆனால், எந்த அடிப்படை நோக்கத்துடன் 1927-ம் ஆண்டு அந்தக் கல்லூரி உருவாக்கப்பட்டதோ அந்த அடிப்படை நோக்கமும் இப்போது சிதைந்து அதை மாற்றி ஏற்படுத்திய புதிய திட்டமும் சரியாக நிறைவேற்றப்படவில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சித்த வைத்தியம் இப்போது பிறந்த நாட்டிலேயே செத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு உயிரூட்ட வேண்டும். அதைப் பேணி வளப்பதற்கான வழிகள் காணுவதற்கு ஆராய்ச்சிகள் நடத்த வேண்டும். அதற்காக ஒரு தனிப்பட்ட சித்த மருத்துவர் குழு (போர்டு) அமைக்கப்பட்டு, நம் நாட்டுக்குரிய சித்த வைத்தியத்திலுள்ள சிறப்புக்களும் நுணுக்கங்களும் நிலை நாட்டப்பட வெண்டும்.

தமிழ் நாட்டிலுள்ள ஆட்சியாளர்கள் சித்த வைத்தியத்தின் தனிச் சிறப்பை நிலை நாட்டத் தவறி விட்டதின் விளைவாக, எத்தனையோ சித்த வைத்திய நுணுக்கங்களும் இப்போது ஆயுர்வேத வைத்திய நுணுக்கங்கள் என்று நாட்டு மக்கள் பலரால் பேசப்பட்டும் கருதப்பட்டும் வருகின்றன. தமிழர்களுடைய பல தனிப் பண்புகளும் அருஞ் செயல்களும் கவியின் கலைகளும் பிறருடையன என்று கருதப்பட்டு விடுகின்றன. அத்தகைய துர்ப்பாக்கிய நிலைமை தமிழ் வைத்திய முறைக்கும் ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டுச் சித்தர்களால் கண்டு பிடிக்கப்பட்ட வைத்திய நுணுக்கங்கள் ஆயுர்வேதத்தில் சேர்க்கப்பட்டு, அம்மருந்துகளுக்கு உரிய தனி சித்த வைத்திய முறையும், தனிப் பெயரும் மறைக்கப்பட்டிருக்கின்றன.

இறந்துகொண்டிருக்கும் சித்த வைத்தியத்திற்கு உயிரூட்டி, அதை நன்றாக வளப்பதற்கான ஆலோசனைகள் கூறக்கூடிய ஒரு தனிக் குழுவை அரசாங்கத்தார் அமைக்க வேண்டும். நான் இந்தக் காரியத்தைத்



தமிழ்நாட்டு அரசாங்கத்தார் செய்யவேண்டும் என்று சொல்வதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. தமிழ் நாட்டின் பெறுமையை உயர்த்தக் கடமைப்பட்டிருக்கும் இந்த அரசாங்கத்தார் தமிழர்களின் பெருமைக்குரிய சித்த வைத்திய முறையை நிலை நாட்டுவது அவர்கள் கடமை என்பது முதல் காரணம். கிராமங்களிலுள்ள மக்கள் சித்த வைத்திய முறைகளை எளிதில் கையாண்டு அவ்வப்போது சிறந்த மருந்துகளைத் தயாரித்துக் கொண்டு நல்ல பலன் அடைய முடியும் என்பது இரண்டாவது காரணம். அரசாங்கம் இந்த நல்ல காரியத்தைச் உடனடியாக செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சித்தர்கள் தயாரித்துள்ள வைத்திய சம்பந்தமான ஏடுகளைத் தேடி யெடுத்து அவைகளில் எழுதப்பட்டுள்ள வைத்திய நுணுக்கங்களை ஆராய்ந்தறியும் வேலையில் மருத்துவப் புலவர் திரு. குமரகுரு செட்டியார் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்ட பிறகு அந்த வேலையும் கைவிடப்பட்டது. அவர் இப்போது இருக்கிறாரா, இல்லையா என்பதும் எனக்குத் தெரியாது.

அதே போல, டாக்டர் திரு. குருசாமி முதலியார் அவர்களுடைய ஆர்வத்தின் விளைவாக கிராம வைத்தியர் தகுதிப் பயிற்சி (V.llage Vaidyas) என்ற ஒரு பயிற்சி சித்த வைத்திய முறையில் பலபேருக்கு கொடுக்கப்பட்டு வந்தது. அதுவும் இப்போது கைவிடப்பட்டிருக்கிறது.

College of Integrated Medicines-ல் இன்றுள்ள நிலைமையில் சித்த வைத்தியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க முடியாவிட்டாலும் தமிழர்களுடைய வைத்தியக் கலை என்ற அடிப்படையில் சித்த வைத்தியத்தை வேறு ஆராய்ச்சி நிலையம் அமைத்து பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, இந்திய மருத்துவக் கல்லூரியைச் சட்டபூர்வமாக College of Integrated Medicines-ஆக மாற்றி யிருக்கும் அரசாங்கத்தார் சட்டத்தை நிறைவேற்றுவதில் தவறியிருக்கிறார்கள். காரணம், அப்படிச் சட்டமியற்றப்பட்ட பிறகு அதற்கேற்றபடி கல்லூரியில் பேராசிரியர்கள் நியமிக்கப்படவில்லை, மற்ற அவசியமான ஏற்பாடுகளும் நிறைவேற்றப்படவில்லை. அங்கே சொல்லிக்கொடுக்க வேண்டியவற்றை நன்றாகப் பயிற்றுவிக்கக் கூடிய, வைத்தியத்தில் நிறைந்த அநுபவ அறிவு பெற்ற ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்ற வேண்டுகோள் அம் மாணவர்களால் பல முறை விடப்பட்டிருந்த போதிலும், தகுந்த தலைவர்களை அணுகி கோரிக்கையைத் தெரிவித்திருந்த போதிலும், இதுவரை அந்த வேண்டுகோள் நிறைவேற்றப்படவில்லை. College of Integrated Medicines-என்ற பெயருக்கு ஏற்றபடி அங்கே சொல்லிக் கொடுக்கவேண்டிய வைத்தியப் பாடங்களை நன்றாகச் சொல்லிக் கொடுக்கக் கூடிய கற்றறிந்த பேராசிரியர்கள் Professors அங்கே நியமிக்கப்பட வில்லை. அங்கே படிக்கும் மாணவர்கள் இப்போது 200 ரூபாயை Tuition fees ஆண்டுக்கட்டணம் ஆகக் கட்டி வருகின்றனர். நல்ல பேராசிரியர்களை நியமித்தால், அந்த மாணவர்கள் 240 ரூபாய் Tuition fees ஆண்டுக் கட்டணம் செலுத்தவும் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதெல்லாம் "நாங்கள் 240 ரூபாய் வேண்டுமானாலும் Tuition fees கட்டத் தயாராயிருக்கிறோம். எங்களுக்கு நல்ல பேராசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். வைத்தியத்தில் நுண்ணறிவு படைத்த அநுபவமிக்க பேராசிரியர் ஒருவர் கல்லூரிக்குத் தலைவராக (Dean) வர வேண்டும். இப்போது எங்கள் கல்லூரிக்கு மதிப்பில்லாததற்கு காரணம் இக்கல்லூரியின் ஆசிரியப் பதவிகளின் மதிப்பும் தகுதியும் குறைவாக இருப்பதுவே ஆகும்" என்பதுதான்.

மேலும், இப்போது அந்தக் கல்லூரியில் படித்துத் தேர்ச்சி பெற்று வெளி வருபவர்கள் உடனடியாக அரசாங்க உத்தியோகங்களுக்குப் போக முடியவில்லை. காரணம், அவர்கள் (ரெஜிஸ்டர்) பதிவு செய்து கொள்ள முடிவதில்லை. ஆகவே அவர்கள் கல்லூரியில் படித்துத் தேர்ச்சி பெற்ற பிறகு உடனடியாக ரெஜிஸ்டர் (பதிவு) செய்து கொள்வதற்கு வகை செய்வதற்கான மருத்துவக் குழுவை நியமிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். சென்ற ஆண்டிலேயே அதற்கான சட்டம் இயற்றப்பட்டும் அப்படிப் பட்ட ஒரு குழு இன்னும் நியமிக்கப்படவில்லை. அது எப்போது நியமிக்கப்படும் என்றும் தெரியவில்லை. அந்தக் குழுவை உடனடியாக நியமிக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

இறுதியாக நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நாட்டு மக்களின் எழ்மை நிலையையும், எளிய வாழ்க்கைத்தரத்தையும் மனதில் கொண்டு பார்க்கும்போது, ஹோமியாபதி மருத்துவம் அவர்களுக்குக் குறைந்த செலவில் சிறந்த பலனளிக்கக்கூடிய வைத்தியமாக இருக்கிறது என்பது தெரிகிறது: வேறு வைத்தியங்களால் தீராத பல நோய்கள் சித்த வைத்தியத்தால் தீருவது போல, ஹோமியோபதியாலும் தீருகின்றன. ஆகவே தக்கவாறு ஆராய்ந்து பார்த்து ஹோமியோபதியை அபிவிருத்தி செய்து கிராமம் கிராமமாகப் பரப்ப வேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் கூறிய இந்தக் காரியங்களை யெல்லாம் நிறைவேற்றி வைத்திய துறையிலுள்ள குறைகளை நீக்கினால்தான் அரசாங்கத்தின் சுகாதார வைத்திய இலாக்காவிற்கு வந்திருக்கும் நோயும் நீங்கும் என்பதையும் தெரிவித்து உரையை முடித்துக் கொள்கிறேன்.

**DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 9 a.m. on Thursday, the 18th July 1957.**

2-07 p.m. **The House then adjourned.**



## VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

124. *Notification issued with G.O. Ms. No. 1736, Food and Agriculture, dated 4th June 1957, amending rule 13 of the Madras Commercial Crops Markets Rules*, 1948. [Laid on the table of the House under section 18 (4) (c) of the Madras Commercial Crops Markets Act, 1933.]

125. *Notification issued with G.O. Ms. No. 1574, Industries, Labour and Co-operation, dated 30th April 1957 amending the Madras Partnership (Registration of Firms) Rules*, 1932, *and the Madras Partnership (Fees) Rules*, 1932, *consequent on the Reorganization of States.*

126. *Notification issued with G.O. No. 202, L.A., dated 6th February 1957, adding new rules 25-A, 25-B and 25-C regarding appeals to the rules relating to general establishment, appointment and punishment of officers and servants of panchayats framed under the Madras Village Panchayats Act*, 1950 (*Madras Act X of* 1950).

[17th July 1957

APPENDIX 1.

[Vide answer to starred question No. 129 asked by Sri V. K. Ramaswamy Mudaliyar at the meeting of the Legislative Assembly held on 17th July 1957, page 606 supra.]

*Quantity of rice imported into Madras State during 1954, 1955 and 1956.*

(*a*) The quantity of rice imported into this State from the adjoining States during the years 1954, 1955 and 1956.

*A.*—The only surplus State adjoining Madras is Andhra and the quantities of rice imported from Andhra into Madras during years beginning from 1953–54 are as follows :—

| *Year.* | *Quantity imported (in tons).* |
|---|---|
| 1953–54 * .. .. .. .. .. | 215,794 |
| 1954–55 .. .. .. .. .. | 135,537 |
| 1955–56 .. .. .. .. .. | 94,303 |
| 1956–57 .. .. .. .. .. | 54,063 |

* NOTE.—The figures cover the Madras State before reorganization.

The above figures do not include movements by sea or road.

(*b*) The steps taken to make this State self-sufficient.

*A.*—The steps taken by the Government to make the Madras State self-sufficient in foodgrains including rice are briefly indicated below :—

The Madras State is implementing several food production schemes under the Grow More Food Campaign to make this State self-sufficient in foodgrains. The drive for increased food production has been in two directions, *firstly* extensive cultivation, by bringing new area under food-crops, increasing the area of double-crop cultivation and cultivation during the off-season; and *secondly* intensive cultivation by improved cultural practices, use of improved seeds and better manuring.

The drive for increased food production consists mainly of permanent schemes called " Works Schemes " which are intended to improve existing irrigation facilities or to provide fresh irrigation facilities and recurring schemes called " Supply Schemes " which are primarily designed to increase the yield of foodgrains per acre by distribution of agricultural aids like fertilizers, manures and improved seeds to ryots either at controlled rates or subsidized rates.

The following are the schemes included in the food production drive :—

*Works schemes.*—(1) Irrigation and Tank Improvement Scheme under the control of the Public Works Department.

(2) Tank Improvement Scheme and Special Minor Irrigation Programme under the control of the Superintending Engineer (Food Production).



17th July 1957]

(3) Lift irrigation supply of oil engines and electric motor pumpsets to ryots on hiring and on hire-purchase systems.

(4) River Pumping Scheme.

(5) Filter Point Wells Scheme.

(6) Land reclamation by tractors and bull-dozers by hiring and hire-purchase systems.

*Supply schemes.*—(1) Distribution of chemical fertilizers like ammonium sulphate, superphosphate and other nitrogenous fertilizers;

(2) Urban Compost Scheme,

(3) Rural Compost Scheme;

(4) Distribution of green manure seeds;

(5) Multiplication and distribution of improved paddy and millet seeds; and

(6) Control of pests and diseases of crops.

*Miscellaneous schemes.*—(1) Village co-operatives;

(2) Madras Land Utilization Order, 1950; and

(3) Crop Competition Scheme.

The Food Production Programme for each year is drawn up by the Government in consultation with the heads of departments concerned and finally approved by Government of India. The order of expenditure on Grow More Food is about Rs. 500 lakhs per annum. For instance in 1957–58 the programme envisages the following expenditure :—

| | RUPEES IN LAKHS. |
|---|---|
| Works schemes .. .. .. .. | 149 |
| Supply schemes .. .. .. .. | 384 |
| Total .. | 533 |

In preparing the annual programme, the targets fixed under the Five-Year Plan are taken note of. For ensuring the proper implementation of the schemes and the assessment of results, definite targets of additional production are fixed for each year. Assistance is given by the Government of India for some of the schemes in the shape of loans and grants. The achievements against the targets are watched in the districts by the Collectors and other officers and the Collectors report the achievements under each scheme periodically to the Commissioner for Food Production for review.

A short description of the schemes is given below :—

(i) Under the Special Minor Irrigation Programme, construction of new irrigation works and repairs to existing sources such as anicuts, dams, regulator tanks, supply channels, etc., both in proprietary and ryotwari areas are taken up for execution after

due investigation. A special Engineering Circle in charge of a Superintending Engineer consisting of executive divisions, attends to the execution of works in addition to the regular staff of the Public Works Department.

(ii) Lift irrigation is a useful means of providing water-supply both to supplement the available local irrigation and as an insurance against its failure and it is therefore encouraged by the Government; oil engine pumpsets acquired by the Agriculture department are hired out to the ryots for raising crops, preferably food-crops. Apart from this, the Government distribute oil engine and electric motor pumpsets to ryots under the hire-purchase system. The Agriculture department also arrange for installation of units of oil engines or electric motor pumping sets at Government cost in the first instance for the supply of water to ryots by pumping from rivers, ponds, etc., in the area selected for such irrigation so as to bring as much area as possible under crop production on a permanent basis.

Recognizing the limitations of surface water irrigation, the Government have been paying considerable attention to the exploitation of underground water sources in the State. Filter point tube-wells are sunk in ryot's land by the Government under the scheme known as the " Filter Point Wells Schemes ".

(iii) With a view to help ryots to adopt increasingly mechanical cultivation practices for certain processes, the Agriculture department supply them with tractors and bulldozers on hire. Tractors are also sold to ryots under the hire-purchase system.

(iv) Under the scheme of survey of cultivable waste lands, large extents of land in Ramanathapuram have been localized by a Special Agricultural Engineering staff in addition to the work done by the normal staff. The Government waste lands are assigned to individual landless poor persons at the rate of 5 acres (dry) each.

(v) Under the Madras Land Utilization Order, the Collectors have been empowered to take steps to sell in auction the right to cultivate arable lands, which are left uncultivated to others for cultivation with food-crops.

(vi) Manuring is an assured method of raising the yield and the scheme for the distribution of ammonium sulphate is therefore being continued. The use of nitrogenous fertilizers like urea and A/SN is also encouraged. Takkavi loans are granted to ryots on a liberal scale for the purchase of chemical fertilizers for application to paddy and other food-crops and the loans are recovered after the harvest of the long-term crop.

(vii) Under Rural Compost Scheme, the ryots are encouraged to compost waste vegetable matter like dried leaves, grasses, weeds, stubbles of grass, etc., with a view to supplement cattle manure. The compost week is celebrated along with the National Tree Planting Week (Vanmahotsava) and wide publicity



is given regarding the award of certificates of merit to those who prepare the maximum compost. Under the Urban Compost Scheme, organic manures are made available to ryots at reasonable rates. At present, the municipalities and panchayats are selling compost at a subsidized price not exceeding Rs. 2 per ton. All municipalities and panchayats are encouraged to manufacture compost out of the town refuse and nightsoil by giving financial assistance by way of loans. Technical advice to the local bodies for the manufacture of compost is given by the Agriculture department and by the State Compost Development Officer.

(viii) Improved seeds of paddy, millets and green manure are procured from seed-farm ryots by the payment of a premium and sold to agriculturists at concessional rates. During the period of the Second Five-Year Plan it is proposed to set up 400 State seed farms in all parts of the State.

(ix) Plant protection is an essential auxiliary scheme as it saves valuable food from destruction of pests. Insecticides and pesticides are acquired on Government account and sold to ryots at concessional rates through agricultural depots. Sprayers and dusters are also purchased by the department and loaned to ryots wherever necessary and free technical advice is given by the Special Plant Protection staff employed under the scheme. Reports relating to forecast of pests and diseases and their likely incidence are sent to the Director of Information and Publicity and the Station Directors of the All-India Radio every week for giving wide publicity.

(x) In order to associate the cultivating ryots closely with the Food Production Schemes, the Government have also continued several Extension Service Schemes, like Village Co-operative, etc. The Government have undertaken crop competitions in the State in order to create an urge in the farmers to adopt improved techniques for stepping up the yield. Under this scheme prizes in cash and medals are awarded from the village level upwards to the competitors, who are adjudged to have secured the highest yield in the plots enlisted for the competition.

[17th July 195

## APPENDIX II.

[Vide answer to starred question No. 130 asked by Sri M. Jagannatha (on behalf of Sri M. Jangal Reddiyar) at the meeting of the Legislativ Assembly held on 17th July 1957, page 607 supra.]

[SUBJECT.—*Tours of Ministers and travelling allowance drawn.*]

Statement showing the particulars of the number of days toured b Ministers on State Business from November 1956 to fist week of Marc 1957, Travelling Allowance drawn and the public functions attended t in February 1957.

| *Name of Minister.* | *Month.* | *Number of days toured on State business.* | *Travelling Allowance drawn.* | *Public function attended to in February 1957* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | RS. A. | |
| Sri K. Kamaraj, Chief Minister .. | November 1956 .. | 12 | 449 1 | Nil. |
| | December ,, .. | 9 | 468 0 | |
| | January 1957 .. | 2 | 155 2 | |
| | February ,, .. | Nil. | Nil. | |
| | March ,, .. | Nil. | Nil. | |
| Sri M. Bhaktavatsalam, Minister for Home. | November 1956 .. | 6 | 344 12 | Nil. |
| | December ,, .. | 11 | 986 0 | |
| | January 1957 .. | 2 | 171 6 | |
| | February ,, .. | Nil. | Nil. | |
| | March ,, .. | Nil. | Nil. | |
| Sri C. Subramaniam, Minister for Finance. | November 1956 .. | 18 | 794 11 | Nil. |
| | December ,, .. | 6 | 858 0 | |
| | January 1957 .. | 11 | 153 7 | |
| | February ,, .. | Nil. | Nil. | |
| | March ,, .. | Nil. | Nil. | |
| Sri M. A. Manickavelu, Minister for Revenue. | November 1956 .. | 11 | 505 6 | Participated in the District Cattle Show, Vellore, on 10th February 1957. |
| | December ,, .. | 14 | 1,104 10 | |
| | January 1957 .. | 8 | 480 3 | |
| | February ,, .. | 1 | 36 6 | |
| | March ,, .. | Nil. | Nil. | |
| Sri B. Parameswaran, Ex-Minister for Religious Endowments and Transport. | November 1956 .. | 1 | 115 0 | Nil. |
| | December ,, .. | 7 | 447 8 | |
| | January 1957 .. | ½ | 112 0 | |
| | February ,, . | Nil. | Nil. | |
| | March ,, .. | Nil. | Nil. | |
| Sri S. S. Ramaswamy Padayachi, Ex-Minister for Local Administration. | November 1956 .. | 12 | 509 8 | Nil. |
| | December ,, .. | 4 | 386 0 | |
| | January 1957 .. | ½ | 52 0 | |
| | February ,, .. | Nil. | Nil. | |
| | March ,, .. | Nil. | Nil. | |
| Sri R. Shanmuga Rajeswara Sethupathi, Ex-Minister for Public Works. | November 1956 .. | 1 | 200 0 | Nil. |
| | December ,, .. | Nil. | Nil. | |
| | January 1957 .. | Nil. | Nil. | |
| | February ,, .. | Nil. | Nil. | |
| | March ,, .. | Nil. | Nil. | |

64783
Y2ll,31' N57
N57·3·9;1